# உதயன்

13

www.onlineuthayan.com

32: பக்கங்கள் சுடர் 27 கதிர் 247 வள்ளுவர் ஆண்டு 2043 ஆடி 15 திங்கட்கிழமை (30/07/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா 25.00



### கிழக்கில் 2,000 பட்டதாரிகளுக்கு சட்டவிரோத நியமனம்

கொழும்பு, ஜூலை 30

கிழக்கு மாகாணசபை கலைக்கப்பட்ட பின்னர் 2000 பட்டதாரிகளுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இது தேர்தல் சட்டங்களை மீறும் செயல் என்று குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள மூத்த அரச அதிகாரி ஒருவர், உயர் அதிகாரமட்ட உத்தரவின் பேரில் தான் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்துள்ளார்.

புதிதாக நியமனம் வழங்கப்பட்ட சிலர் கடந்த ஜூன் 29ஆம் திகதி கிழக்கு மாகாண சபை கலைக்கப்பட்டு இரண்டு நாள்கள் கழித்து பதவியேற்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அனர்த்த முகாமைத்துவ உதவியாளர் பதவிக்காக 100 பேரிடம் நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டுள்ளது.

கல்வி நிர்வாக சேவைக்கு 750 பேர் தற்காலிக அடிப்படையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று கொழும்பு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

### வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் மக்களின்

# உரிமைப் போராட்டம் இன்னும் ஓயவில்லை

## திருமலையில் சம்பந்தன் உறுமல்

**திருகோணமலையில் நடைபெற்ற கூட்டமைப்பின் முதலாவது பிரசாரக் கூட்டத்தில் தமிழர்களின் உள்ளக்கிடக்கைகளை வெளியிட்டார் சம்பந்தன்.**



கொழும்பு, ஜூலை 30

போர் முடிந்த பின்னரும் தமிழ் மக்களுக்குத் தீர்வு வழங்கப்படவில்லை. இந்த விடயத்தில் சர்வதேசம் தொடர்ந்தும் பார்வையாளராக இருக்கமுடியாது. இலங்கை தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணை வேண்டும். தமிழ் மக்களின் உரிமைக்கான எமது போராட்டம் இன்னும் ஓயவில்லை.

நாங்கள் தனிநாடு கேட்கவில்லை. ஒருமித்த இலங்கைக்குள் விசேடமாக வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் மக்கள் சுதந்திரமாக வாழ்வதற்கான அதிகாரத்தையே கேட்கிறோம்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் திருமலையில் வைத்துத் தெரிவித்தார்.

பார்க்க பக்கம் 4

**5** போர்ச் சூழலால் வட மாகாணத்தில் அதிக அளவான சிறுவர்கள் பாதிக்கப்பட்டு உள்ளனர் என்கிறது வைத்தியசாலை வட்டாரங்கள்.

**8** ஈழத்துக்கான அங்கீகாரம் கிடைக்கவிடாமல் செய்தவர் கருணாநிதிதான். உலக அங்கீகாரம் கிடைக்க இருந்த நேரத்தில் அவர் அதனைத் தடுத்துவிட்டார்.

**17** அரசில் இருந்து வெளியேறும் நோக்குடனேயே கிழக்கு மாகாணத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சி தனித்துப் போட்டியிட முடிவெடுத்தது.

**27** லண்டன் ஒலிம்பிக்கில் பெண்கள் இரட்டையர் பிரிவில் இருந்து முதற்சுற்றிலேயே சானியா மிர்சா - ருஷ்மி சக்கரவர்த்தி இணை வெளியேறியது

## கொத்துக்குண்டு விவகாரம்; முறையிட்டால் நடவடிக்கை

### யு.என்.டி.பி. அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 30

வடக்கில் போர் நடைபெற்ற பகுதிகளில் கிளஸ்ரர் ரக கொத்துக்குண்டுகள் மீட்கப்பட்டமை தொடர்பில் தமக்கு உத்தியோகப்பூர்வமாக முறையிடப்பட்டால் அது குறித்து உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று ஐ.நாவின் அபிவிருத்தி திட்ட நிறுவனத்தின் (யு.என்.டி.பி) தலைமையகம் தெரிவித்திருக்கின்றது.

இலங்கையில் நடைபெற்ற இறுதிப் போரின் போது, படையினரால் கொத்

பார்க்க பக்கம் 4

### மூன்று மாகாணசபைத் தேர்தல்களிலும்

## சட்டங்களை மீறி வன்முறையை கட்டவிழ்க்கிறது இலங்கை அரசு

### குற்றஞ்சாட்டுகிறார் சுமந்திரன்

கொழும்பு, ஜூலை 30

மூன்று மாகாணசபைத் தேர்தல்களிலும் அப்பட்டமான முறையில் தேர்தல் சட்டதிட்டங்களை மீறி வன்முறைகளைக் கட்ட விழ்த்துவிட்டு எப்படியாவது தாம் வெற்றி பெறவேண்டும் என இலங்கை அரசு முழு வீச்சுடன் செயற்பட்டு வருகின்றது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் குற்றஞ்சாட்டினார்.

மூன்று மாகாணங்களிலும் ஆளுந்தரப்பினரால் கட்டவிழ்த்துவிடப்பட்டு வருகின்ற தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் தேர்தல் திணைக்களத்திற்கு நாம் முறைப்பாடு செய்துள்ளோம். இருப்பினும், இது தொடர்பில் எந்த நடவடிக்கையும் இதுவரையில் முன்னெடுக்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்ற பொது எதிரணிகளின் ஊடகவியலாளர் சந்திப்பின்போதே

பார்க்க பக்கம் 4

## படுகொலைகளால் ஆட்சி நடத்தும் மஹிந்த அரசு

### பொது எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 30

புகை கக்கிக்கொண்டிருக்கும் எரிமலை எப்போது வெடித்துச் சிதறி நாட்டை நாசமாக்கும் என்ற அச்சத்துடனேயே மக்கள் வாழ்ந்து வருகின்றனர். மனிதப் படுகொலைகள் புரிந்து துஷ்ட ஆட்சி நடத்தும் மஹிந்த அரசின் ஆட்சியில் குற்றச் செயல்கள் அரசியல் மயமாக்கப்பட்டுள்ளன எனப் பொது எதிர்க்கட்சிகள் தெரிவித்தன.

17ஆவது அரசமைப்புத் திருத்தத்தைக் கலைத்துவிட்டு, 18ஆவது அரசமைப்புத்திருத்தத்தை மஹிந்த அரசு நாட்டில் நடைமுறைப்படுத்தியதாலேயே குற்றச் செயல்கள் இன்று தலைவிரித்தாடுகின்றன. அதுமட்டுமன்றி, அதிகாரம் படைத்தவர்களின் நலனுக்கேற்றவாறு அரசு ஆட்சி நடத்துகின்றது.

அரசின் இந்தப் பயணப்

பார்க்க பக்கம் 4

## நீதிமன்ற புறக்கணிப்பு; இன்று முடிவு

யாழ்ப்பாணம், ஜூலை 30

மன்னார் நீதிவான் அந்தோனிப்பிள்ளை ஜூட்சன் அச்சுறுத்தப்பட்டமை மற்றும் நீதிமன்றக் கட்டடத் தொகுதி மீதான தாக்குதலைக் கண்டித்து வட மாகாண சட்டத்தரணிகள் முன்னெடுத்துவரும்

பார்க்க பக்கம் 4

## இடைநிறுத்தப்பட்டார் பணிப்பாளர் கைவிடப்பட்டது பணிப் புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ். போதனா வைத்தியசாலையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகள் தொடர்பில் வைத்தியசாலைப் பணிப்பாளர் பதவியில் இருந்து திருமதி பவானி பசுபதிராஜா இடைநிறுத்தப்பட்டுள்ளார். அவர் யாழ். போதனா வைத்தியசாலையிலிருந்து சுகாதார அமைச்சுக்கு அழைக்கப்பட்டுள்ளதையடுத்து, வட மாகாண வைத்தியர்கள் இன்று தொடக்கம் நடத்தவிருந்த தொடர் பணிப் புறக்கணிப்பு கை விடப்பட்டது - இவ்வாறு அரச வைத்திய அதிகாரிகள் சங்க உப செயலாளர் நளின் ஆரியரத்ன தெரிவித்

பார்க்க பக்கம் 4

## மு.காவுக்கு குர்-ஆனை விடவும் மஹிந்த சிந்தனையே முக்கியம்

### கூறுகிறார் எதிர்க்கட்சித் தலைவர்

கொழும்பு, ஜூலை 30

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முஹம்மது நபி (ஸல்) பெருமானையும் புனித குர் ஆனையும் புறந்தள்ளிவிட்டு மஹிந்த சிந்தனையைக் கட்டிப்பிடித்துக் கொண்டிருக்கின்றது எனத் தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, முஸ்லிம் மக்களின் வாக்குகளை அரசுக்குத் தாரை வார்க்கும் நோக்கிலேயே மு.கா. கிழக்கில் தனித்துக் களமிறங்கியுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

அத்துடன், நபி(ஸல்) பெருமானைத் துன்புறுத்திய குறேஷியர்கள் போல் ஆட்சி நடத்தும் மஹிந்த அரசுடன்

பார்க்க பக்கம் 4

### மக்களுக்குச் சேவை செய்வதில்

## எமது படையினருக்கு நிகராக யாருமில்லை

### கோத்தபாய பெருமிதம்

கொழும்பு, ஜூலை 30

நீண்ட கால போருக்குப் பின்னர் மக்களுக்கு இலங்கைப் படையினர் சேவை செய்தது போல் உலகில் வேறெந்தப் படையினரும் இதுவரை செய்திருக்க மாட்டார்கள். மக்களின் இயல்பு வாழ்வைக் கட்டியெழுப்ப இலங்கைப் படையினர் ஆற்றிவரும் சேவை உலகில் உள்ள ஏனைய இராணுவத்தினருக்கு ஒரு முன்னுதாரணமாகவே அமைந்துள்ளது - இவ்வாறு படை

பார்க்க பக்கம் 4

## பாக். கைதிகள் விடுதலையாவர்

கொழும்பு, ஜூலை 30

ஒரு பெண் உட்பட 20 பாகிஸ்தான் கைதிகளை பாகிஸ்தானுக்கு திருப்பி அனுப்புவதற்கு இலங்கை அரசு தீர்மானித்துள்ளது. இந்தக்கைதிகள் போதைப் பொருள் கடத்தல் குற்றங்களுக்காக ஆயுள் தண்டனை மற்றும் நீண்டகால சிறைத் தண்டனை அனுபவிப்பவர்களாவர்.

இவ்வாறு குடிவரவு மற்

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்குத் தேர்தல் பெப்ரவரி 26இல்!

## முதலமைச்சர் வேட்பாளராக புத்திஜீவி ஒருவரை நிறுத்த ஆளும் கட்சி முஸ்தீபு

யாழ்ப்பாணம், ஜூலை 30

வடக்கு மாகாண சபைத் தேர்தலை அடுத்த வருடம் பெப்ரவரி மாதத்தில் நடத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளது. பெப்ரவரி இறுதியில் அதாவது, 26ஆம் திகதி அந்தத் தேர்தலை நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது எனத் தெரிகிறது.

முன்னதாக இந்தத் தேர்தலை அடுத்த வருடம் செப்ரெம்பரில் நடத்துவதற்கு அரசு திட்டமிட்டிருந்தது. ஆனபோதிலும், ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அமர்வுகள் அடுத்த வருடம் பிற்பகுதியில் நடைபெறவுள்ளதால், அதற்கு முன்னர் இந்தத் தேர்தல் நடத்துவதற்கு அரசு முடிவெடுத்துள்ளது.

இதேவேளை வடமாகாணசபைத் தேர்தலை முதலமைச்சர் வேட்பாளராக ஆளும் கட்சியில் இருந்து யாரை நிறுத்துவது என்பது தொடர்பில் அரசு தற்போது தீவிரமாக ஆராய்ந்து வருகிறது.

வடமாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர் ஒருவரையே முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்த அரசு உத்தேசித்திருந்தது. ஆனால் இப்போது அந்தத் தீர்மானத்தை மறு சீரமைப்புச் செய்திருக்கும் அரசு வடமாகாணத்தில் பிரபல்யம் பெற்ற புத்திஜீவி ஒருவரை தேர்தல் களத்தில் இறக்குவது குறித்து ஆலோசித்து வருகிறது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்கள் சிலரினதும், ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் சிலரினதும் பெயர்கள் இதற்காகப் பரிசீலிக்கப்பட்டு வருவதாக மூத்த அமைச்சர் ஒருவர் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

அடுத்த வருடம் செப்ரெம்பர் மாதத்திலேயே வடமாகாணத் தேர்தலை நடத்த அரசு தீர்மானித்திருந்தபோதும் அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகளின் அழுத்தம் காரணமாகவே அதனை முற்கூட்டியே நடத்த இணங்கியிருப்பதாகத் தெரியவருகிறது.

கிழக்கு, சப்ரகமுவ, வடமத்திய மாகாணங்களில் வெற்றியீட்ட முடியும் என்று அரசு கருதுகிறது. இந்த வெற்றி வடக்கிலும் தொடர்வதற்காகவே புதிய தெரிவாக புத்திஜீவி ஒருவரை முதலமைச்சராக களமிறக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. மிகவிரைவில் வடக்கு மாகாண சபைத் தேர்தலுக்கான அறிவிப்பை அரசு உத்தியோகபூர்வமாக விடுக்கவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

### காந்தி சிலை தகர்ப்பு இருவர் கைது


யாழ்ப்பாணம், ஜூலை 30

அரியாலை காந்திஜி சனசமூக நிலையத்தில் அமைந்துள்ள காந்திசிலை சேதமாக்கப்பட்டமை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் இருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சனசமூக நிலையத்தின் முன்னால் அமைக்கப்பட்டிருந்த மகாத்மா காந்தியின் சிலை நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத நபர்களால் பீடத்திலிருந்து தகர்க்கப்பட்டுச் சேதமாக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பிலேயே இருவர் நேற்று பிற்பகல் 3 மணியளவில் கைதுசெய்யப்பட்டுள்ளதாக யாழ்.தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர். (16)

# கேட்பது வடக்கு மாகாணத் தேர்தலை; திணிப்பதோ தேவையில்லாத தேர்தலை

## திருமலையில் ரணில் ஆவேசம்



*திருகோணமலை, ஜூலை 30*

***வடக்கிற்கான தேர்தலை நடத்துங்கள் எனக் கோரி நிற்கின்றோம். ஆனால், அரசு தேவையில்லாத தேர்தலை மக்கள் மீது திணிக்கின்றது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.***

*கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஊக்குவிக்கவென தேர்தல் பிரசாரத்துக்காக நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அந்தக்கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்துநாயக்க, கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகருணநாயக்க ஆகியோர் திருகோணமலை சென்றனர். அங்கு நகராட்சிமன்ற ஒன்று கூடல் மண்டபத்தில் நடை பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ரணில் இவ்வாறு தெரிவித்தார்.*

*அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-*

கிழக்கு, வடமத்திய, சப்ரகமுவ ஆகிய மூன்று மாகாணங்களுக்கான தேர்தலை மக்களோ அல்லது எதிர்க்கட்சியோ வேண்டி நிற்கவில்லை. அதேசமயம் வட மாகாணத்திற்கான தேர்தலை நடத்துங்கள்; அந்த மக்களுக்கு தங்களது முதலமைச்சரை, உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் உரிமைகளை வழங்குங்கள் என்றே கூறி வருகின்றோம்.

ஆனால், அரசு இன்று தேவையில்லாத தேர்தல்களைத் திணித்து வருகின்றது. பல்வேறு பொய்களை அரசு கூறிவருகின்றது. கிழக்கு அபிவிருத்தி கண்டுள்ளது என்று அரசு கூறிவருகிறது. இந்த அபிவிருத்திகள் 2002 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியின் போது டோக்கியா மாநாட்டில் முன்மொழியப்பட்ட ஆலோசனைகள்தான். அவையே இன்றைய அபிவிருத்திகள். அங்கு பெறப்பட்ட பணத்தைத் தமக்கு சாதகமான மாகாணசபையை உருவாக்கி, செலவு செய்கின்றது இந்த மஹிந்த அரசு.

இந்தக் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் பிள்ளையான், ஹிஸ் புல்லா அணிகளைத் தங்களுடன் சேர்த்து ஓர் அணியாகவும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை தனி ஓர் அணியாகவும் களத்தில் இறக்கி நாடகமாடுகின்றது இந்த அரசு.

முஸ்லிம்களின் வாக்குகளைக் கவருவதற்கு பல பொய்களைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது மஹிந்த அரசு.

ஆனால், இந்த அரசு தம்புள்ள பள்ளிவாசல் உடைப்பு குறித்து சத்தமில்லாமல் இருந்துள்ளது. எனவே, இவ்வாறு மக்களை ஏமாற்றும் வெற்றிலைக்கோ அல்லது மரத்திற்கோ அளிக்கப்படும் வாக்கு முட்டாள்களுக்கே போய்ச்சேரும். எனவே, மக்களே புத்தியுடன் நடந்துகொள்ளுங்கள்- என்றார்.

### வடக்கு, கிழக்கு இணைந்த தாயகமே கூட்டமைப்பின் கொள்கை

**எமது தலைமுறையின் துயரத்தை அடுத்த தலைமுறைக்கு நாம் விட்டுச் செல்வதற்கு முடியாது.**

திருகோணமலை, ஜூலை 30

வடக்கு, கிழக்கு இணைந்த தாயகமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அடிப்படைக் கொள்கையாகும். அதிலிருந்து விலகப் போவதில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட வேட்பாளர் க.கோணேஸ்வரன் தெரிவித்தார்.

மூதூர் கிழக்கில், கட்டைபறிச்சான் பகுதி இளைஞர்கள் ஒழுங்குசெய்த தேர்தல் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விரும்பத்தகாத சக்திகள் மாகாண நிர்வாகத்தை ஆக்கிரமித்து எமது போராட்டத்துக்குக் குந்தகம் விளைவிப்பதைத் தடுக்கவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்வரும் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுகிறது.

எமது தலைமுறையின் துயரத்தை அடுத்த தலைமுறைக்கு நாம் விட்டுச் செல்ல முடியாது. சர்வதேச சூழலை மிகவும் சரியாகப் பயன்படுத்தி நிலைத்து நிற்கக்கூடியதும் நியாயமான அரசியல் தீர்வைப் பெற்றுக் கொள்வதில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுதியாக உள்ளது.

அதற்கேற்ற விதத்திலான் இராஜதந்திர நகர்வுகளையே தமிழரசுக் கட்சித் தலைவர் சம்பந்தன் மேற்கொண்டு வருகிறார்.

அதற்கு உரமூட்டும் வகையில் கிழக்கு மாகாண தமிழ்மக்கள் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் வீடு சின்னத்துக்கு நேரே புள்ளடியிட்டு தமிழினத்தின் எதிர்காலத்தை ஒளிமயமாக்க வேண்டும்- என்றார். (ச-40)



கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்களை அறிமுகப்படுத்தி வைக்கும் முதலாவது பிரசாரக் கூட்டம் திருகோணமலை சிவன்கோயிலடியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றபோது கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுடன் வேட்பாளர்கள்.

# இரத்தினபுரியில் இருவர் கைது

இரத்தினபுரி, ஜூலை 30

சட்டவிரோத மதுபான தயாரிப்பு நிலையம் ஒன்றை முற்றுகையிட்ட போது அங்கிருந்த இருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். மாறவில, அளப கலப்புவ பிரதேசத்தில் இயங்கி வந்த சட்டவிரோத மதுபான தயாரிப்பு நிலையம் ஒன்றே இவ்வாறு சுற்றிவளைக்கப்பட்டுள்ளது. இந்த சுற்றிவளைப்பின் போது 130 சட்டவிரோத மதுபான போத்தல்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேக நபர்களும் மாறவில பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (ந)

# ஆளும் கட்சிக்குள் மோதல் ஒருவர் காயம்

இரத்தினபுரி, ஜூலை 30

இரத்தினபுரி மாவட்டத்தின் புஸல்ல பகுதியில் ஆளும் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் இரு குழுக்களிடையே ஏற்பட்ட மோதல் காரணமாக காயமடைந்த ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

**மாகாண சபைத் தேர்தல் தொடர்பான வன்முறையில் ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட முதலாவது சம்பவம் இதுவாகும்.**

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல் தொடர்பான வன்முறையில் ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட முதலாவது சம்பவம் இதுவாகும்.

தேர்தலுக்கான சுவரொட்டிகள் மற்றும் பதாதைகள் தொடர்பாகவே இந்த மோதல் ஏற்பட்டதாகவும் இதில் ஆளும்கட்சி அமைச்சர்கள் இருவரின் உறவினர்களும் சம்பந்தப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தை தவிர இதுவரை குறிப்பிடத்தக்க வேறு வன்முறைகள் எதுவும் இடம்பெறவில்லை என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப்பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

எந்தத் தேர்தலிலும் விருப்பு வாக்கு தொடர்பாக உட்கட்சி மோதல்கள் தீவிரமடைவது வழமை எனவும் இவற்றை தடுப்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் கூறினார். (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## திருட்டுகள் குறித்து முறைப்பாடு

வலி. வடக்கு, ஜூலை 30

சுன்னாகம் பொலிஸ் பகுதியில் இரண்டு திருட்டுச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன என்று சுன்னாகம் நகர வர்த்தகர்களால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சுன்னாகம் காங்கேசன்துறை வீதியில் உள்ள கையடக்கத் தொலைபேசி விற்பனை செய்யும் நிலையத்தில் இருந்து இரண்டு நாள்களுக்கு முன்னர் கையடக்கத் தொலைபேசி ஒன்று திருடப்பட்டுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது.

இதே போன்று மற்றொரு கடையில் பாவனைக்கு வைக்கப்பட்டிருந்த மின் அிறப்பாக்கி ஒன்றும் திருடப்பட்டுள்ளது என்று மற்றும் ஒரு வர்த்தகரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. குறிப்பிட்ட திருட்டுகள் சம்பந்தமாக சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-86)

## சத்தியத்துக்கு வந்த சோதனை...



அரியாலை காந்திஜி சனசமூக நிலையத்தின் முன்பாக உள்ள மகாத்மா காந்தியின் உருவச் சிலை நேற்று ஞாயிற்றுக்கிழமை இனந்தெரியாதவர்களால் பீடத்தில் இருந்து தகர்க்கப்பட்டு வீழ்த்தப்பட்டுள்ளது. கடந்த ஆண்டும் சனசமூக நிலையத்தில் இருந்த உருவச் சிலை உடைக்கப்பட்டதை அடுத்த காந்தி ஜெயந்தி தினத்தில் மீண்டும் வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7-17)

## கைபேசியில் ஆபாசப் படங்கள் வைத்திருந்த நால்வர் கைதாகினர்

வலி. வடக்கு, ஜூலை 30

ஆபாசப்படங்களை கையடக்கத் தொலைபேசியில் வைத்திருந்து அதனை பார்த்துக் கொண்டிருந்த வேளையில் வயதில் குறைந்த நால்வர் சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். சுன்னாகம் சபாபதிப்பிள்ளை முகாமைச் சேர்ந்த இளைஞர்கள் நால்வரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறிப்பிட்ட முகாமில் உள்ள பொது மண்டபத்தில் மாலை வேளையில் இவர்கள் ஆபாசப் படங்களை கையடக்கத் தொலைபேசியில் வைத்துப் பார்த்துக் கொண்டு இருந்துள்ளனர்.

இந்த நேரத்தில் ரோந்துக் கடமையில் சென்ற பொலிஸாரைக் கண்டு அவர்கள் ஓடியுள்ளனர்.

சந்தேகம் கொண்ட பொலிஸார் பொது மண்டபத்தில் சென்று பார்த்த வேளையில் கையடக்கத் தொலைபேசி ஒன்று கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டது.

அதனை மீட்ட பொலிஸார் குறிப்பிட்ட நால்வரையும் கைது செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-86)

## பொலிஸ் ரோந்துப் பணி நகர் பகுதியில் அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை 30

யாழ். நகரிலும் அதனை அண்டிய புறநகர்ப் பகுதியிலும் பொலிஸாரின் ரோந்து பணிகள் இரவு வேளையில் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இரவு வேளைகளில் இடம்பெற்று வரும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் பொலிஸார் தமது ரோந்துப் பணிகளைத் தீவிரப்படுத்தி உள்ளனர்.

நகரிலும் நகரை அண்டிய புறநகர்ப் பகுதிகளிலும் இளைஞர்கள் போதையில் குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றனர் என்று மக்கள் தெரிவித்ததையடுத்து பொலிஸார் இரவு நேரத்தில் ரோந்துப் பணிய்ய அதிகரித்துள்ளனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-17)

# பருத்தியடைப்புக்கு தனியார் பஸ் பல வருடங்களின் பின் ஆரம்பம்

*யாழ்ப்பாணம், ஜூலை 30*

*பல வருடங்களுக்குப் பின் பருத்தியடைப்புக்கான தனியார் பஸ் சேவை கடந்த வாரம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இதனால் இந்தக் கிராமத்தில் வசிக்கும் இருநூற்றி ஐம்பதுக்கும் மேற்பட்ட குடும்பத்தினரும் மாணவர்களும் பெரும் பயன் அடைந்துள்ளனர்.*

ஊர்காவற்றுறை பிரதேசத்தில் பருத்தியடைப்பு கிராமத்தில் வசித்து வரும் மக்கள் போக்குவரத்து வசதியின்றி பெரும் சிரமங்களுக்கு ஆளாகியிருந்தார்கள்.

இவர்கள் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் பல கிலோ மீற்றர் தூரம் நடந்து செல்ல வேண்டியிருந்தது.

இந்த நிலை குறித்து பல தடவைகள் சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெரியப்படுத்தியிருந்த போதிலும் எந்த வித முன்னேற்றகரமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

இந்த நிலையில் பருத்தியடைப்பு கதிரேசன் சனசமூக நிலையத்தினர் பெரும் பிரயத்தனத்துக்கு மத்தியில் எடுத்த நடவடிக்கையின் பயனாகத் தற்போது போக்குவரத்துக்கு வழி ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சனசமூக நிலையத்தினர் பிரதேச சபையின் தலைவருக்கு இந்த விடயம் குறித்தும் இதனால் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்தும் தெரியப்படுத்தியிருந்தனர்.

இதனையடுத்துத் தலைவர் எடுத்துக் கொண்ட நடவடிக்கையால் கடந்த வாரம் பருத்தியடைப்புக்கான தனியார் பஸ்சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த பஸ்சேவையால் முகாம் வீதி மக்களும் பயனடைந்துள்ளார்கள்.

இதே வேளை இந்தப் பகுதியின் போக்குவரத்துக்கான பிரதான வீதி, மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க பிரதேச சபையால் புறநெகும செயற்றிட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டு, மக்களின் பாவனைக்கு விடப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ம-115)

## தொண்டமானாறு வீதியால் பயணிப்பதில் பெரும் சிரமம்

வடமராட்சி,ஜூலை 30

அச்சுவேலி-தொண்டமானாறு வீதி படுமோசமாகச் சேதமடைந்துள்ளமையால் இந்த வீதி ஊடாக வாகனங்களைச் செலுத்துவதில் சாரதிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக இந்த வீதியில் இடைக்காட்டுக்கும் தொண்டமானாறுக்கும் இடைப்பட்ட பகுதியே படுமோசமாகப் பழுதடைந்துள்ளது.

பழுதடைந்துள்ள இந்த வீதி ஊடாக ஒரு சில இ.போ.ச. பஸ்கள் சேவையாற்றிவருகின்ற போதிலும் அவை இந்த வீதி ஊடாகச் சென்று வந்ததும் பழுதடைந்து விடுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் 17 ஆம் திகதி தொண்டமானாறு செல்வச் சந்நிதி கோயில் வருடாந்தப் பெருந்திருவிழா ஆரம்பமாகவுள்ள நேரத்தில் இந்த வீதியை அவசரமாகத் திருத்தியமைக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சந்நிதிக்கு வரும் பக்தர்களின் நலனைக் கருத்தில் கொண்டு விரைந்து இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.(ம-8)

## வீதியில் போடப்பட்ட வடலிகளால் சிரமம்

யாழ்ப்பாணம்,ஜூலை 30

யாழ். நகரில் பொது நூலகத்தின் முன்பாகச் செல்லும் வீதியோரத்தில் போடப்பட்ட பனை வடலிகளால் போக்குவரத்துக்குச் சிரமம் ஏற்பட்டுள்ளது.

கே.கே.எஸ். வீதியில் அகலிப்புக்காக முற்றவெளிப் பகுதியில் நின்ற இந்தப் பனை வடலிகள் வேருடன் பிடுங்கப்பட்டன.

மீண்டும் இந்தப் பனை வடலிகளை நடுவதற்காக அவை பொது நூலக வீதியில் போடப்பட்டுள்ளன.

இந்த பனை வடலிகள் கடும் வெயிலில் காய்ந்து போயுள்ளது. இதனால் தாம் போக்குவரத்து மேற்கொள்வதில் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் பாதசாரிகள் தெரிவிக்கின்றனர். (ம-17)

## வீதிகளுக்கு மின்விளக்கு பொருத்தக் கோரிக்கை

வடமராட்சி,ஜூலை 30

வியாபாரி மூலை எரிஞ்ச அம்மன் கோயிலடிப் பகுதியில் உள்ள வீதிகளுக்கு வீதி மின் விளக்குகளைப் பொருத்துமாறு இடம் பெயர்ந்துள்ள மயிலிட்டி மீனவர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் எஸ்.யோகராஜா பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் பூ.சஞ்சீவனிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பருத்தித்துறை, வல்வெட்டித்துறை பிரதான வீதியில் உள்ள சுப்பர் மடம், வியாபாரி மூலை, இன்பருட்டி ஆகிய கிராமங்களின் ஊடாகச் செல்லும் இந்தப் பிரதான வீதியில் வீதி மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

ஆனால் இடம்பெயர்ந்த மயிலிட்டிப் பகுதியைச் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் வாழும் எரிஞ்ச அம்மன் கோயிலடி ஊடாகச் செல்லும் பிரதான வீதிக்கு இன்னமும் வீதி மின் விளக்குகள் பொருத்தப்படவில்லை.

இந்தப் பகுதியிலிருந்து இரவு வேளை மீனவர்கள் கடற்றொழிலுக்குச் சென்று அதிகாலை வேளை திரும்பி வருகின்றனர்.

வீதி மின்விளக்குகள் ஒளிர்ந்தால் அவர்களுக்கு பெரும் வசதியாக அமையும்.

எனவே இந்தப் பகுதியைப் புறக்கணிக்காது வீதி மின்விளக்குகளை பொருத்தி அயல் கிராம மீனவர்களுக்கு கிடைக்கும் வசதிகள் போல இடம்பெயர்ந்துள்ள மீனவர்களுக்கும் வசதி கிடைக்க [illegible] தருமாறு [illegible]ளது. (ம-8)

## சங்கானை – சுழிபுரம் ஆகிய நகரங்கள் இணைத்து நகர சபை உருவாக்க திட்டம்

### முதற்கட்ட அறிக்கை கோருகிறார் நகர அபிவிருத்தி அதிகார சபையின் மேலதிக பணிப்பாளர் நாயகம்

யாழ்ப்பாணம்,ஜூலை 30

சங்கானை - சுழிபுரம் ஆகிய நகரங்களை இணைத்து புதிய நகரசபை உருவாக்கப்படவுள்ளது.

இதற்கான முதற்கட்ட அறிக்கையைத் தயாரித்து உடன் வழங்க வேண்டும் என்று நகர அபிவிருத்தி அதிகார சபையின் மேலதிக பணிப்பாளர் நாயகம் ஜெ.எம்.எஸ்.எஸ்.ஜெயசுந்தர வடமாகாண நகர அபிவிருத்தி அதிகார சபை பணிப்பாளர் ஆர்.இராசநாயகத்திடம் கடிதம் மூலம் கோரியுள்ளார்.

வலி. மேற்கு பிரதேச சபையின் கீழான சங்கானை - சுழிபுரம் பிரதேசங்களை இணைத்து நகர சபையாகத் தரம் உயர்த்துதல் எனும் தலைப்பில் பிரதேச சபை உறுப்பினர் த. நடனேந்திரன் நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

இந்தக் கடிதத்தை அடுத்தே அவர் வடமாகாண நகர அபிவிருத்தி அதிகார சபை பணிப்பாளரிடம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வலி. மேற்கு பிரதேச சபை அராலி, வட்டுக்கோட்டை, சுழிபுரம், சங்கானை ஆகிய நான்கு உப அலுவலகங்களைக் கொண்ட பரந்த பிரதேசம்.

இந்தப் பிரதேசத்தின் அபிவிருத்தி அடைந்த நகரத் திட்டமிடலுக்கு உள்வாங்கக் கூடியதான சங்கானை-, சுழிபுரம் ஆகிய இரு உப அலுவலகங்களை இணைத்து நகர சபையாக தரம் உயர்த்துவதற்கான சபைத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு சபையால் அங்கீகரிக்கப்பட்டது.

சங்கானை, சுழிபுரம் ஆகிய இரு நகர பிரதேசங்களும் வருமானங்களை சபைக்கு அள்ளித்தரும் பிரதேசங்களாக இனம் காணப்பட்டுள்ளது.

எனவே இந்தப் பிரதேசங்களை இணைத்து நகர சபையாகத் தரம் உயர்த்தி பிரதேச அபிவிருத்தியையும் நகர திட்டமிடலையும் ஒருங்கிணைத்து முன்னெடுத்துச் செல்ல வேண்டியது காலத்தின் தேவையாகும்.- என்றுள்ளது. (ம-41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீதிமன்ற புறக்கணிப்பு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பணிப்புறக்கணிப்பைத் தொடர்வதா, இடைநிறுத்துவதா என்பது குறித்து இன்று திங்கட்கிழமை கூடி முடிவெடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்துக் கூடி ஆலோசித்து முடிவு எடுப்பதற்கு, குடாநாட்டு நீதிமன்றங்களில் பணிபுரியும் அனைத்துச் சட்டத்தரணிகளையும் யாழ். சட்டத்தரணிகள் சங்க நூலகத்தில் இன்று மு.ப 9.30 மணிக்கு நடைபெறவுள்ள கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு யாழ். சட்டத்தரணிகள் சங்கத் தலைவியும் ஜனாதிபதி சட்டத் தரணியுமான செல்வி சாந்தா அபிமன்னசிங்கம் அறிவித்துள்ளார். (ஒ-4)

## சட்டங்களை மீறி..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கிழக்கு, வடமத்திய, சப்ரகமுவ ஆகிய மூன்று மாகாண சபைகளுக்கும் இன்னும் ஒருவருட ஆயுட்காலம் இருக்கும் முன்னரே அவற்றைக் கலைத்து அரசு தேர்தலை நடத்துகிறது. இந்த மூன்று மாகாணசபைகளையும் கைப்பற்றும் நோக்கில் அரசு தேர்தல் சட்டதிட்டங்களை மீறிச் செயற்பட்டுவருகின்றது. மூன்று மாகாணங்களிலும் ஆளுந்தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் குறித்து நாம் தேர்தல் ஆணையாளரிடம் முறைப்பாடு செய்துள்ளோம். விசேடமாக கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்று வருகின்ற குற்றச் செயல்கள் குறித்தே நாம் இதில் அதிகமாகக் கவனம் செலுத்தியுள்ளோம். தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் தேர்தல்கள் திணைக்களத்திற்கு நாம் முறைப்பாடு செய்துள்ளோம். இருப்பினும், அது எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

கிழக்கு மாகாணத்தில் முதலமைச்சராக இருந்தவர் வீட்டிற்கு 50 மீற்றர் தூரமளவில்தான் எமது கிழக்கு மாகாண வேட்பாளரின் வீடு உள்ளது. இப்படி இருக்கையில், கடந்த 18 ஆம் திகதி எமது வேட்பாளரின் வீடு இனந்தெரியாத நபர்களால் சங்கிலி போட்டு பூட்டப்பட்டிருந்தது. முதலமைச்சர் வீட்டிலிருந்து 50 மீற்றர் தூரத்தில் நடந்த இச்சம்பவம் முதலமைச்சரின் வீட்டின் காவலாளிகளுக்குக்கூடத் தெரியவில்லையா? - என்றார்.

## மு.காவுக்கு குர்-....

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

தான் இன்று மு.கா. ஒட்டிக்கொண்டுள்ளது என்றும் ரணில் கூறினார். அம்பாறை மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் கிழக்கில் தேர்தலுக்குப் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு மத்தியில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

'தெயட்ட கிருள' தேசத்துக்கு மகுடம் என்ற நாடகத்தை ஆடி அரசு தனது பைகளை நன்றாக நிரப்பிக்கொண்டது. இதன் மூலம் மக்களுக்கு எதுவும் கிடைக்கப்போவதில்லை. இந்த அரசு தற்போது கல்வியிலும் விளையாடத் தொடங்கியுள்ளது.

கிழக்கில் தனித்துப் போட்டியிட்டு முஸ்லிம் மக்களின் வாக்குகளைப் பெற்று இனவாத அரசின் வாக்கு வங்கிகளை அதிகரிக்கும் செயற்பாட்டிலேயே மு.கா. இறங்கியுள்ளது. கிழக்கில் பிள்ளையானுக்கு வாக்களித்தாலும், மு.காவுக்கு வாக்களித்தாலும் அந்த வாக்குகள் இனவாத அரசைப் பலப்படுத்துவதாகவே அமையும்.

கிழக்கு மாகாணத்தில் இன்று வகைதொகையின்றி காணிகள் அபகரிக்கப்படுகின்றன. அமைச்சர்கள் போலியான உறுதிப்பத்திரங்களைப் பயன்படுத்தி காணிகளைக் கொள்ளையடிக்கின்றனர். பள்ளிவாசல் உடைக்கப்படும்போது அரசுடன் இருக்கும் முஸ்லிம் கட்சிகள் என்னசெய்தன? ஒன்றும் செய்யவில்லை. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இன்று புனித குர் ஆனையும் நபி (ஸல்)பெருமானையும் புறந்தள்ளிவிட்டு மஹிந்த சிந்தனையைக் கட்டிப்பிடிக்கிறது. மஹிந்த சிந்தனையால் முஸ்லிம் மக்களுக்கு எதுவித நன்மையும் பயக்கப்போவதில்லை.

## எமது படையினருக்கு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

யினருக்குப் புகழாரம் சூட்டியுள்ளார் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ.மன்னார் காத்தான்குளத்தில் நேற்று முன்தினம் இருமாடிகளைக் கொண்ட சிறுவர் இல்லமொன்றின் திறப்புவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பாதுகாப்புச் செயலாளர் இவ்வாறு தெரிவித்தார்;

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'இறுதிப் போரின்போது சுமார் 12 ஆயிரம் புலிகள் சரணடைந்தபோது, அவர்களைத் தடுப்பு நிலையங்களில் வாடவிடாமல் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அழைத்துச் செல்லுமாறு ஜனாதிபதி தனிப்பட்ட ரீதியில் அறிவுறுத்தினார். இதனால் போர் நடைபெற்ற ஏனைய நாடுகளைப் போல அவர்கள் சிறைகளில் துன்புறுத்தல்களை எதிர்கொள்ளாமல் எதிர்கால வாழ்க்கையை நம்பிக்கையோடு தொடங்குவதற்கான பயிற்சிகள் வழங்கப்பட்டு சமூகத்தோடு ஒன்றிணைக்கப்பட்டுள்ளார்கள். இது உலகில் வேறெங்குமே நிகழாத ஒன்று.

அத்துடன் நீண்ட காலமாக நடந்த போருக்குப் பின்னர் மக்களுக்கு இலங்கைப் படையினர் சேவையாற்றியதைப் போல் உலகில் வேறெந்த படையினரும் செய்ததில்லை. மக்களுக்கான அடிப்படை உதவிகளை மாத்திரமல்லாது அவர்களுக்கான வீடமைப்பு, வீதிப்புனரமைப்பு என்பவற்றிலும் எமது படையினர் அர்ப்பணிப்போடு ஈடுபட்டுவருகின்றனர். போர் முடிவடைந்தபின் பல நாடுகளின் பிரதிநிதிகள் வன்னிப்பகுதிக்கு பயணம் செய்து அப்பகுதிகளில் படையினரால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகளை நேரடியாகக் கண்டறிந்தனர். மீள்கட்டுமான நடவடிக்கைகளில் இலங்கை ஆர்வமாகவுள்ளது என்பதை இத்தகைய பயணங்கள் மூலம் சர்வதேச நாடுகள் உணர்ந்துள்ளன' - என்றார். (ங)

## இடைநிறுத்தப்பட்டார்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

துள்ளார். வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி பவானி பசுபதிராஜாவை இடமாற் றம் செய்யுமாறு வைத்தியர்கள் கோரிக்கை விடுத்த நிலையில் அதனை ஏற்றுக்கொண்டு அவரை சுகாதார அமைச்சுக்குள் உள்வாங்கியிருப்பதாக சுகாதார அமைச்சு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்துக்கு நேற்று அறிவித்துள்ளது.

அதனையடுத்து சங்கம் நேற்று ஒன்றுகூடி, இன்று தொடக்கம் வடமாகாண வைத்தியர்கள் மேற்கொள்ளவிருந்த தொடர் பணிப்புறக்கணிப்பு கைவிடப்பட்டதாகவும், வழமைபோன்று அனைத்து வைத்தியர்களும் கடமைக்குச் செல்வர் எனவும், அனைத்து வகையான சிகிச்சைகளும் தொடர்ந்து நடைபெறும் என்றும் வைத்தியர் சங்கம் தெரிவித்தது.

வைத்தியசாலையில் அண்மையில் இடம்பெற்ற முறைகேடுகள் தொடர்பில் விசாரணைகளை முறையாகத் தொடர்வதற்கு ஏதுவாகவே பணிப்பாளர் அமைச்சுக்கு அழைக்கப்பட்டுள்ளார். எனினும் அவர் அவ்வாறு அழைக்கப்பட்டாலும் முறைகேடுகள் தொடர்பான விசாரணைகளைத் தொடர்வதற்கு சுகாதார அமைச்சுக்குப் பல்வேறு அழுத்தங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே விசாரணைகள் உரியமுறையில் நடைபெறவேண்டும் என்றும் வைத்திய அதிகாரிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை, குறித்த குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய பணிப்பாளர் திருமதி பவானி பசுபதிராஜா யாழ். போதனா வைத்தியசாலைக்குப் பணிப்பாளராக மீளவும் நியமிக்கப்பட்டால் முன்னறிவித்தல் ஏதுமின்றி வைத்தியர்கள் தொழிற்சங்க நடவடிக்கையில் குதிப்பர் என்றும் சங்கம் தெரிவித்துள்ளது. வைத்தியசாலைப் பணிப்பாளரை இடமாற்றஞ்செய்யக் கோரி வடமாகாண வைத்தியர்கள் இன்று தொடக்கம் தொடர் பணிப் புறக்கணிப்பில் ஈடுபடுவதாக அறிவித்ததையடுத்து, நேற்றைய தினம் பணிப்பாளரை அமைச்சுக்கு அழைப்பதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ங-4)

## பாக். கைதிகள்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் சூலானந்த பெரேரா கூறினார். இந்தக் கைதிகளை பாகிஸ்தான் அரசிடம் ஒப்படைப்பதற்காக இலங்கை வெளிவிவகார அமைச்சும் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயமும் ஜூலை 27 ஆம் திகதி ஒப்பந்தமொன்றில் கையெழுத்திட்டதாக பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்தது. குறித்த கைதிகள் பாகிஸ்தானுக்கு அனுப்பப்பட்டாலும், அவர்கள் மீண்டும் நாட்டிற்குள் வருவதற்கு தடை விதிக்கும் வகையில் கறுப்புப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளனர். போதைப்பொருள் கடத்தல் குற்றத்திற்காக சிறைத்தண்டனை அனுபவித்துவரும் பாகிஸ்தான் கைதிகள் பாகிஸ்தான் அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

## கொத்துக்குண்டு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

துக்குண்டுகள் பயன்படுத்தப்பட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. ஆயினும் அதனை அரசு தொடர்ந்து மறுத்து வந்த நிலையில், போர் நடைபெற்ற பிரதேசங்களுள் ஒன்றான புதுக்குடியிருப்பு பகுதியில் கொத்துக் குண்டுகள் மீட்கப்பட்டதாக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் கண்ணி வெடி அகற்றும் குழுவின் இலங்கை தலைவர் அலன் பொஸ்டன் அண்மையில் தெரிவித்திருந்தார்.

எனினும் அது தொடர்பில் உத்தியோகபூர்வமாக தமக்கு இதுவரை அறிவிக்கப்படவில்லை என்று ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் ஆசிய மற்றும் பசுபிக் வலய பிராந்திய தொடர்பாளர் சன்ரா மெக்கேரியா தெரிவித்துள்ளார்.

எனினும் இந்தச் செய்தி தொடர்பில் அவதானம் செலுத்துவதாகவும், இது குறித்து கொழும்பில் உள்ள தமது அலுவலகத்தில் தகவல் கோரவிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத்தகவல் உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில், அது குறித்து இலங்கை அரசுடன் ஆலோசிக்க உள்ளதாகவும் சன்ரா மெக்கேரியா தெரிவித்துள்ளார். அதேவேளை, கொத்துக் குண்டுகள் மீட்கப்பட்டதாகக் கூறப்படும் செய்தியில் எதுவிதமான உண்மையும் இல்லை என்று இலங்கை அரசு மறுத்துள்ளது. (ங)

## படுகொலைகளால்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பாதை தவறானது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார். எதிர்க் கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்ற பொது எதிர்க்கட்சிகளின் ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டில் இடம்பெற்றுவருகின்ற குற்றச்செயல்களுக்கு மக்கள் தமது எதிர்ப்பைத் தெரிவிப்பதுபோல, மாகாணசபைத் தேர்தல்களில் அரசுக்கு எதிராக வாக்களித்து அரசின் பயணப் பாதை தவறானது எனவும் அதற்கு சுட்டிக்காட்டவேண்டும்.

நீதித்துறைக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சரொருவரால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. நாட்டின் நீதித்துறையை அச்சுறுத்தும் அளவுக்கு அராஜக ஆட்சி நாட்டில் இடம்பெறுகின்றது. ஏழை மக்களுக்கு ஏற்றவகையிலான ஆட்சி நாட்டில் இடம்பெறவில்லை. அதிகாரவர்க்கத்தின் தேவைக்கேற்பவே ஆட்சி நடத்தப்படுகிறது.

17ஆவது அரசியல் சீர்திருத்தத்தைக் கலைத்துவிட்டு 18ஆவது சீர்திருத்தத்தை அரசு கொண்டுவந்தமையாலேயே நாட்டில் இவ்வளவு பிரச்சினைகள் இடம்பெறுகின்றன. 17ஆவது அரசியல் சீர்திருத்தத்தை நடைமுறைப்படுத்தியிருந்தால் நாட்டில் இவ்வளவு குற்றச்செயல்கள் இடம்பெறாது. இது மிகவும் கவலைக்குரிய நிலை. அரசின் பயணப்பாதை தவறானது எனத் தேர்தலின் மூலம் மக்கள் தகுந்த விடை கொடுக்கவேண்டும் - என்றார்.

இதன்போது புதிய சிஹல உறுமய கட்சித் தலைவர் சரத் மனமேந்ர கூறியவை வருமாறு:-

மஹிந்த அரசின் மூலம் நாடுமுழுவதும் குற்றச்செயல்களே அரங்கேற்றப்பட்டு வருகின்றன. உயர்தரப் பரீட்சை எழுதிய மாணவர்கள் தமக்கு சிறந்த பெறுபேறுகள் கிடைக்கவில்லையென உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வருடம் உயர்தரப் பரீட்சை நெருங்கிவருகின்ற சந்தர்ப்பத்திலே நாடுமுழுவதும் மின்வெட்டு அமுல்படுத்தப்படுகின்றது. கெரவலப்பிட்டிய மின் உற்பத்தி நிலையம் இயந்திரக்கோளாறு காரணமாக செயலிழந்துள்ளது என அரசு கூறுவது அப்பட்டமான பொய்யாகும். அங்கு மின் உற்பத்தி செய்வதற்கான மூலப்பொருள் கொள்வனவில் மேற்கொள்ளப்பட்டுள்ள இடைத்தரகு நடவடிக்கைகளினால் மூலப்பொருள் இறக்குமதி வீதம் குறைந்துள்ளது. மின் உற்பத்திக்குப் போதுமான மூலப்பொருள் இல்லாத காரணத்தாலேயே இந்த மின் உற்பத்திநிலையம் செயலிழந்துள்ளது.

மஞ்சள் கோட்டுக் கடவைச் சட்டத்தை அரசு அமுல்படுத்தியுள்ளது. மஞ்சள் கோட்டுக் கடவை இல்லாத இடத்தில் பாதையைக் கடக்கும் பாதசாரிகளுக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்படுகின்றது. நகர்ப்புறங்களில் சுமார் ஒரு கிலோ மீற்றருக்கு ஓர் இடத்தில்தான் மஞ்சள் கோட்டுக் கடவை இருக்கின்றது. இதற்கு இடைப்பட்ட பகுதியில் பாடசாலை, வைத்தியசாலை, தபாற்கந்தோர் முதலான இடங்களுக்குச் செல்பவர்கள் எவ்வாறு செல்வார்கள்? மஞ்சள் கோட்டுக் கடவைச் சட்டம் என்பது அரசு மேலும் பணம் சம்பாதிப்பதற்கானதொரு திட்டமாகும் - என்றார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த ருஹுணு மக்கள் கட்சித் தலைவர் அருண சொய்ஸா கூறியவை வருமாறு:-

புகை கக்கிக்கொண்டிருக்கும் எரிமலை எப்போது வெடித்துச் சிதறி நாட்டை நாசமாக்கும் என்ற அச்சத்துடனேயே மக்கள் வாழ்ந்துவருகின்றனர். துஷ்ட ஆட்சி நடத்தும் மஹிந்த அரசின் ஆட்சியில் மனிதப் படுகொலைகள் இடம்பெறுகின்றன. இவற்றுக்கு நாம் இனிமேலும் இடமளிக்கக்கூடாது - எனத் தெரிவித்தார்.

## உரிமைப் போராட்டம்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்திலிருந்து போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களை அறிமுகப்படுத்திவைக்கும் முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டம் திருகோணமலை சிவன்கோயிலடி வீதியில் தந்தை செல்வா நினைவாலயத்திற்கு அருகில் நேற்றுமுன்தினம் மாலை 5 மணிக்கு திருகோணமலை நகரசபைத் தலைவர் க.செல்வராஜா (சுப்ரா) தலைமையில் நடைபெற்றது.

அங்கு மக்கள் மத்தியில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் அங்கு தெரிவித்தவை வருமாறு:-

ஜனநாயக வழியிலான சாத்வீகப் போராட்டம் எமது போராட்டத்தின் ஆரம்பமாக இருந்தது. அதன் பின்னர் 30 வருடங்களாக ஆயுதப் போராட்டம் நடைபெற்றது. இப்போதும் எமது போராட்டம் ஓயவில்லை. எமது மக்களின் உரிமைக்காகத்தான் போராடுகின்றோம். நாங்கள் தனிநாடு கேட்கவில்லை. ஒருமித்த இலங்கைக்குள் விசேடமாக வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் மக்கள் சுதந்திரமாக வாழவேண்டும்.

தமிழரின் போராட்டம் இந்நாட்டின் எல்லை தாண்டி சர்வதேசம் வரை சென்றிருக்கின்றது. இன்று எமது பிரச்சினை என்றுமில்லாதளவு சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது. இறுதி யுத்தத்தின்போது பல ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டார்கள். இலட்சக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து அவலங்களைச் சந்தித்தார்கள். மிக மோசமாக நடத்தப்பட்டார்கள். சர்வதேச சட்டங்கள் மீறப்பட்டன. தொடர்ந்தும் இந்தப் பிரச்சினை நீடிக்கக் கூடாது. இதற்குத் தீர்வு காணவேண்டும்.

இந்தச் சூழ்நிலையில்தான் ஒரு வருடத்திற்கு முன்னர் கிழக்கு மாகாணசபை கலைக்கப்பட்டு தேர்தல் நடைபெறுகின்றது. கிழக்கு மாகாண சபையை வெற்றிபெற்றால் அதிகாரப்பகிர்வு வழங்கத் தேவையில்லையென அரசு எதிர்பார்க்கின்றது.

விடயம் அறிந்த வட்டாரங்களின் கணிப்பின்படி கிழக்கு மாகாண சபையை அரசு வெற்றிபெற்றால், தற்போது இருக்கின்ற பொலிஸ், காணி அதிகாரங்களை மீளப்பெறலாம். மத்திய அரசின் கீழ் இதனைக் கொண்டுவரலாம். அந்தக் காரணத்தினால்தான் வடமாகாணசபைத் தேர்தல் பிற்போடப்பட்டது.

இந்தச் சூழ்நிலையில்தான் நாம் இந்தத் தேர்தலை எதிர்கொள்கின்றோம். 13 ஆவது திருத்தச் சட்டத்திற்கு அப்பால் அரசியல் தீர்வு எட்டப்பட வேண்டும். ஆட்சி அதிகாரம், அதிகாரப் பரவலாக்கல், மக்களுடைய உரிமை, தமிழ் மக்களுடைய பிரச்சினை முஸ்லிம் மக்களுக்கும் உண்டு. அதனால்தான் அதிகாரப்பகிர்வு கேட்கின்றோம்.

நாங்கள் சிங்கள மக்களை எதிர்க்கவில்லை. ஆனால், சிங்களக் குடியேற்றங்களை எதிர்க்கின்றோம். தமிழ் மக்களுடைய சுதந்திரம் பாதுகாக்கப்படவேண்டும். அவர்கள் வாழ்ந்த பிரதேசத்தில் [illegible] மாக முஸ்லிம் மக்களின் வாக்கைப் பெற்று அதன் பின்னர் அரசுடன் இணைந்தால் உங்கள் மக்களை நீங்கள் ஏமாற்றுவதாக அமையும்.

தமிழ், முஸ்லிம் மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்பதை முற்கூட்டியே கூறுகின்றோம். சர்வதேச சமூகம் இந்தத் தேர்தலில் தமிழ் மக்களின் நிலைப்பாட்டை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறது. இந்தத் தேர்தலில் அரச தரப்பிலிருந்து ஒரு தமிழ் வேட்பாளர்கூடத் தெரிவு செய்யப்படக்கூடாது.

இந்தநிலை ஏற்படுமாக இருந்தால் முஸ்லிம் காங்கிரஸ் கூட அரசுடன் இணையமுடியாத நிலை ஏற்படும். கூட்டமைப்புடன் முஸ்லிம் காங்கிரஸ் இணைந்து பங்காளிகளாக செயற்பட நாங்கள் தயாராக இருக்கின்றோம் - என்றார் சம்பந்தன்.

வேட்பாளர் அறிமுக விழாவில் நாடாளுமன்ற உறுப்பினர்களான அ.விநாயகமூர்த்தி, விநோநோகராதலிங்கம், சி.சிறிதரன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான க.துரைரெட்ணசிங்கம், சிவாஜிலிங்கம், த. சித்[illegible] கூட்டமைப்பின் முக்கியஸ்தர்கள் பலர் உரையாற்றினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம்களை ஒதுக்கிவிட்டு கூட்டமைப்பு எந்தத் தீர்வுத் திட்டத்தையும் முன்வைக்காது

## அடித்துக் கூறுகிறார் யோகேஸ்வரன் எம்.பி.

அம்பாறை, ஜூலை30

தமிழ் பேசும் மக்களுக்கான ஒரு தீர்வுத்திட்டத்திற்காகவே நாம் உறுதியுடன் காத்திருக்கிறோம் முஸ்லிம் மக்களைப் புறந்தள்ளிவிட்டு தீர்வுத் திட்டத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைக்கவோ, ஏற்கவோ மாட்டாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ. யோகேஸ்வரன் கூறினார்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலின் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சார்பில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் மு. இராஜேஸ்வரனின் தேர்தல் பிரசார ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் ஆட்சிபுரிந்த அனைத்து ஆட்சியாளர்களும் சிறுபான்மையின மக்களை அடக்கி, ஒடுக்கி, அடிமைகளாகவே ஆட்சி செய்து வந்தனர். இந்த வகையில் தந்தை செல்வா காலம் தொடக்கம் தமிழ் பேசும் மக்களுக்காகப் பல விடயங்கள் முன்வைக்கப்பட்டன. இவற்றில் ஒரு போதும் தமிழனுக்கான உரிமையென மட்டும் தந்தை செல்வா குறிப்பிடவே இல்லை. தமிழ்பேசும் மக்களுக்காக என்றே குறிப்பிட்டு வந்தார்.

இந்த வகையில் நாம் முஸ்லிம்களுடன் சேர்ந்து தமிழ் பேசும் மக்களுக்கான ஓர் தீர்வினையே எதிர்நோக்கியிருக்கின்றோம். முஸ்லிம்களைப் புறந்தள்ளிய ஓர் தீர்வுத் திட்டத்தை எம் தமிழரசுக் கட்சி அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்காது, முன்வைக்காது என்பது உறுதியாகும்.

### மதிப்பதில்லை

இன்று அரசு சில முஸ்லிம்களை, முஸ்லிம் அமைச்சர்களை, முஸ்லிம் அரசியல்வாதிகளை தன்னகத்தே வைத்துக்கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும், தமிழர்களையும் பழிவாங்கிக் கொண்டிருக்கின்றது.

அண்மைக்காலமாகப் பள்ளிவாசல்களுக்குள் புகுந்து பௌத்த பிக்குகள் அட்டகாசம் செய்யும் சம்பவங்கள் அதிகரித்த வண்ணமேயுள்ளன.

ஒரு காலத்தில் தமிழரசுக் கட்சி தமிழ் பேசும் மக்களுக்காக முன்வைத்த தீர்வுத் திட்டங்களைக் கிழித்தெறிந்தவர்கள் தான் இந்த பௌத்த பிக்குகளென்பதை மறந்து விடமுடியாது.

### சுனாமி வீடுகள்

அம்பாறை மாவட்டத்தில் மட்டும்தான் சுனாமியால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களுக்கு என கட்டப்பட்ட வீடுகள் இதுவரை அந்த மக்களுக்கு கையளிக்கப்படவில்லை. அரசுடன் இணைந்திருக்கும் அரசியல்வாதிகள் இதனை ஏன் தட்டிக் கேட்கவில்லை?

எனவே அவர்கள் எங்கள் மக்கள் என்றுதான் பேசிக்கொண்டிருக்கின்றோம். அவர்களுக்கு உரிய வீடுகளைக் கொடுங்கள். அவர்களையும் வாழ விடுங்கள் என்பதுதான் எமது கோரிக்கையாகும்.

### நிகழ்ச்சி நிரல்

அரசு தனக்கென ஒரு நிகழ்ச்சி நிரலை தயாரித்து வைத்திருக்கின்றது. மஹிந்த சிந்தனை என்ற ரீதியில் அங்குள்ள அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், அரச நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் சிந்தனையில் செயற்பட முடியாதவாறு அந்த நிகழ்ச்சி நிரல் அமைந்துள்ளது. எனவே சிந்தித்துச் செயற்பட வேண்டிய ஒரு காலகட்டத்துக்கு நாம் வந்துள்ளோம்.

எனவே அரசுக்கு வாக்களித்தால் இன்னும் அடிமைகள் ஆக்கப்படுவோம். பொறுப்புணர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பின்னால் தமிழ் மக்கள் அணிதிரண்டு சர்வதேசத்துக்கு நம் செய்தியை மீண்டும் எடுத்துச் செல்வோம்.- என்றார்.

(ச-30)

# தமிழீழக் கனவுடன் தமிழ்த் தலைவர்கள்

## அமைச்சர் சம்பிக்க கூறுகிறார்

தமிழீழ விடுதலைப் புலிகளின் இறந்துவிட்ட ஈழக்கனவுக்கு புத்துயிரளிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனும் தமிழ் நாட்டின் தலைவர்களும் முயற்சிக்கின்றனர் என மின்சக்தி, வலுசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க கூறினார்.

மஹரகமயில் நேற்று நடைபெற்ற ஜாதிக ஹெல உறுமயவின் தேசிய மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

''இரண்டாவது ஈழ யுத்தத்தை ஆரம்பிப்பதற்கு த.தே.கூ. தலைவர் இரா. சம்பந்தன் முயற்சிக்கிறார். நியூயோர்க், லண்டன், ஆஸ்திரேலியா, பிரான்ஸ், இந்தியா போன்ற நாடுகளிலும் அதன் நகரங்களிலும் தமிழ் இனவாதிகள் ஈழ இனவாதத்தை உயிர்ப்பிக்க முயற்சிக்கின்றனர்.

இதற்கு ஐ.நா.பொதுச் செயலாளரும் உதவுகிறார். உலகத் தமிழர் இயக்கத்தின் பேச்சாளர் சுரேஷ் சுரேந்திரன், முத்துவேல் கருணாநிதி, ஜெயலலிதா ஜெயராம் போன்ற தமிழக அரசியல்வாதிகள் மற்றும் சுமந்திரன் ஆகியோர் தமிழ் ஈழத்தை மீண்டும் அமைப்பது குறித்து கலந்துரையாடுகின்றனர்.

இதேவேளை இந்திய எதிர்க்கட்சித் தலைவி சுஸ்மா சுவராஜ், இனவாதத்தை உருவாக்க முயற்சிக்கும் நிலையில் இலங்கையில் தமிழர்கள் கொல்லப்பட்டமை குறித்து தற்போது பேசுகிறார். அவர்கள் இலங்கைக்கு ஆலோசனை வழங்குவதற்கு முன்னர், அவர்கள் தமது சொந்த நாட்டில் இடம்பெற்ற கொலை தொடர்பாகப் பேசுவதுடன் கொலை செய்யப்பட்டவர்களுக்கு நீதி வழங்கி, அவர்களின் சொந்த நாட்டில்இனவாதத்தை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும்'' என அவர் கூறினார். (16)

## மாடி வீடு வாடகைக்கு

யாழ். கோயில் வீதியில்
அமைந்துள்ள மாடி வீடு (தனியார்
நிறுவனங்களுக்கு மட்டும்)
வாடகைக்குக் கொடுக்கப்படும்.
தொடர்பு: 077 6435081 (21150)

## தவறிவிட்டது

பருத்தித்துறை-யாழ்ப்பாண வீதியில்
அச்சுவேலிப் பிரதேச வைத்தியசாலைக்கு
அண்மித்த பகுதியில் பெறுமதிமிக்க
பொருள்களுடன் கூடிய கைப்பை ஒன்று
தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு
கொள்ளவும்.
(சன்மானம் வழங்கப்படும்)
R. அகிலன்
ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை.
தொ.பே- 0778659005
(சி/2004) (3)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இரத்தினசபாபதி இராயேஸ்வரி

(அப்பாத்துரை) (ராசாத்தி)



உப்புமடச்சந்தி கே.கே.எஸ்.வீதி, சீக்கோ லேன், கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினசபாபதி இராயேஸ்வரி நேற்று (29.07.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் நாளை (31.07.2012) செவ்வாய்கிழமை அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். (21155) (3)

தகவல்:
குடும்பத்தினர்

### போதகர் வலோரி அன்ரனி கிறிஸ்தோப்பர்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட போதகர் வலோரி அன்ரனி கிறிஸ்தோப்பர் நேற்றுமுன்தினம் (28.07.2012) சனிக்கிழமை ஜேர்மனியில் கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அவரின் இறுதிஅடக்க ஆராதனை பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.15, முருகன் கோயில் வீதி,
பள்ளத்தோட்டம், திருகோணமலை. (21154) (3)

தகவல்:
குடும்பத்தினர்

### கிணற்றில் வீழ்ந்தவர் மரணம்

கண்பார்வையற்ற முதியவர் நடந்து சென்றுகொண்டிருந்த போது தவறுதலாக கிணற்றில் விழுந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும் சிகிச்சை பயனளிக்காது நேற்று மரணமானார்.

இந்தச் சம்பவம் நீர்வேலியில் நேற்று முன்தினம், மதியம் ஒரு மணியளவில் இடம்பெற்றது. சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த கந்தையா சந்திரசேகரம் (வயது-74) என்பவரே மரணமானவராவார்.

தனது வீட்டுக் கிணற்றினுள்ளேயே தவறுதலாக வீழ்ந்துள்ளார். உறவினர்களால் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று மரணமானார்.

விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.(4)

# ரிஷாத்துக்கு எதிரான வழக்கு இணைந்து நடத்த முடிவு

யாழ்ப்பாணம், ஜூலை 30

நீதிமன்றை அவமதித்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு எதிராகத் தாக்கல் செய்த வழக்கை வழக்குத் தொடுநர் தரப்பில் இலங்கைச் சட்டத்தரணிகளின் கொழும்பு தாய்ச் சங்கமும் இணைந்து முன்னெடுக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு எதிராக இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம் வழக்குத் தாக்கல் செய்து விசாரணை செய்வது தொடர்பில் ஆராயும் கூட்டம் ஒன்று கொழும்பிலுள்ள தாய்ச்சங்க கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது.

அதன்போது வழக்குத் தொடுப்பது பற்றி ஆலோசிக்கப்பட்டது. எனினும் அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு எதிராக ஏற்கனவே மன்னார் சம்பவம் தொடர்பிலான வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எனவே அதே குற்றச்சாட்டுடனான பிறிதொரு வழக்கைத் தாக்கல் செய்வதைத் தவிர்த்து ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டிருக்கும் வழக்கில் சங்கமும் இணைந்து அந்த வழக்கை வலுவானதாக் கொண்டுசெல்ல செயற்படுவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

அதனையடுத்து தனியே பிறிதொரு வழக்குத் தாக்கல் செய்யும் யோசனை கைவிடப்பட்டது எனச் சட்டத்தரணிகள் தெரிவித்தனர். (ங-4)

## மரண அறிவித்தல்

### திருமதி சரஸ்வதி ஜெயம்



அச்சுவேலி தெற்கு கணுக்கையைப் பிறப்பிடமாகவும் சிவன் வீதி ஆவரங்கால் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி ஜெயம் நேற்று (29.07.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் கந்தையா-பொன்னம்மா தம்பதியரின் மகளும், இராமையா-லட்சுமி தம்பதியரின் மருமகளும், ஜெயத்தின் அன்பு மனைவியும், பகி, வாசன், மயூதினி (பிரான்ஸ்), காலஞ்சென்ற நிசாகரன் ஆகியோரின் அன்புத் தாயும், சோபனா, தனு, கேசவன் (பிரான்ஸ்), ஆகியோரின் மாமியும், நிகிஷா, தனிகா, அக்சிகா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.07.2012) திங்கட்கிழமை ஆவரங்காலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் 1 மணிக்கு ஆவரங்கால் கரதடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன் வீதி,
ஆவரங்கால் மேற்கு,
புத்தூர். (c/2005) (3)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஓட்டோ விற்பனைக்கு**

200 - xxxx இலக்கமுடைய மிக நல்லநிலையில் உள்ள ஓட்டோ விற்பனைக்குண்டு.

தொடர்பு : 077 3434750



**தேவை**

நல்லூர் உற்சவ கால புத்தகக் கடை ஒன்றினை நேர்மையுடன் நடத்த ஒருவர் தேவை. (ஆண்/பெண்)

(21142) (3.6) T.P.: 0718474325


# அமைச்சரின் வேண்டுகோளை நிராகரித்தது ஆசிரியர் சங்கம்

உயர்கல்வி அமைச்சரின் வேண்டுகோளை நிராகரிப்பதாக யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் அ.இராசகுமாரன் தெரிவித்திருப்பதாவது:

பல்கலைக்கழக ஆசிரியர்கள் இன்று முதல் தமது கடமைக்குத் திரும்புமாறு உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எனினும் அமைச்சரது வேண்டுகோளை இலங்கை பல்கலைக் கழகங்களின் ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனமும் யாழ். பல்கலைக் கழக ஆசிரியர் சங்கமும் முற்றாக நிராகரிப்பதுடன் எமது கோரிக்கைகள் நிறைவேறும்வரை போராட்டத்தைக் கைவிடப்போவதில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் மொத்தத் தேசிய உற்பத்தியில் இருந்து, கல்விக்கான ஒதுக்கீட்டை அதிகரிக்குமாறு கோரியும் தமது சம்பளத்தை அதிகரிக்கக் கோரியும் வகுப்புக்களைப் புறக்கணித்து வருவது குறிப்பிடத்தக்கது. (16)

# ஆதன வரிப்பகுதி கணினி மயப்படுத்தப்பட்டுள்ளது

யாழ். மாநகரசபையின் ஆதன வரிப் பகுதி கணினி மயப்படுத்தப்பட்டுள்ளதாக யாழ். மாநர ஆணையாளர் செ.பிரணவநாதன் அறிவித்துள்ளார். ஆசிய மன்றத்தின் அனுசரணையுடன் ஆதன வரிப்பகுதி கணினி மயப்படுத்தப்பட்டு சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றது. இதன்மூலம் பொதுமக்கள் தங்களது ஆதன வரிக் கொடுப்பனவுகளை இலகுவாக மேற்கொள்ளமுடியும். (16)

## கண்ணீர் அஞ்சலி



### சுப்பிரமணியம் ஆறுமுகம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

கடந்த 28.07.2012 அன்று இறைவனடி சேர்ந்த சுப்பிரமணியம் ஆறுமுகம் அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
திருமதி சங்கரப்பிள்ளை குடும்பம்,
திரு. எஸ். இரவீந்திரன் குடும்பம்.

ஜேர்மனி (21145) (3.6)

## மரண அறிவித்தல்



### செல்லப்பா தருமலிங்கம்

(சிமெந்துக் கூட்டுத்தாபன ஓய்வுபெற்ற ஊழியர், காங்கேசன்துறை)

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், சில்லாலை தெற்கு பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா தருமலிங்கம் நேற்று (29.07.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

சில்லாலை தெற்கு, பண்டத்தரிப்பு

தகவல்: குடும்பத்தினர்

(21153)(6-8)

## மரண அறிவித்தல்

### திருமதி சரஸ்வதி இராசையா



கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட சரஸ்வதி இராசையா நேற்று முன்தினம் (28.07.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா-முத்தம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நாகமுத்து- இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த நாகமுத்து இராசையாவின் (சுப்பிரமணியம்- ஓவசீயர்) அன்பு மனைவியும், மனோரஞ்சிதம் (குணம்- கனடா), ஸ்ரீகாந்தன் (இலங்கை), ஸ்ரீராம் (பெல்ஜியம்), காலஞ்சென்ற ஸ்ரீநாதன், ஸ்ரீஜெயந்தன் (அமெரிக்கா), சுகந்தினி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், மகேஸ்வரன், பாக்கியலெட்சுமி, கிருஷ்ணதேவி, தவரத்தினம் ஆகியோரின் அன்புமாமியும், காலஞ்சென்றவர்களான குமாரசாமி (சிங்கப்பூர்), வல்லிபுரம் (மலேசியா), ராமநாதன் (PWD Overseer) ஆகியோரின் அன்புத் தங்கையும், வாகீசன் - அனுஷா, பிரதீபன் - கிருஷாந்தி, பிரபாகரன் - சிந்துஜா, சஞ்ஜீவன், சுதாகர் -துஷாந்தினி, தக்ஷினி, செல்வகுமார் - சோபனா, கமலதாசன் - கல்பனா, ஜெனனி, ஜெகனி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அஸ்வினி, வாஷினி, சேயோன், லக்ஷியன், ஆருஷி, லகீஷா, தனுஷா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (30.07.2012) திங்கட்கிழமை பிற்பகல் 5.00 மணி தொடக்கம் பி.ப.9 மணிவரை Ogdon Funeral Home இல் பார்வைக்கு வைக்கப்படும்.

இறுதிக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


கொக்குவில் கிழக்கு, கொக்குவில்

தகவல்: ஸ்ரீகாந்தன் குடும்பம்

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் ஆறுமுகம்

(இளைப்பாறிய ஆசிரியர்)



காரைநகர், இராசாந்தோட்டத்தை பிறப்பிடமாகவும், பொன்னாவளை களபூமி காரைநகரை வசிப்பிடமாகவும் 53/13, ஆடிய பாதம் வீதி, திருநெல்வேலியில் வசித்து வந்தவருமாகிய சுப்பிரமணியம் ஆறுமுகம் நேற்றுமுன் தினம் (28.07.2012) சனிக்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் சுப்பிரமணியம் - சிதம்பரம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பையா (இளைப்பாறிய ஆசிரியர்), -சரஸ்வதி, நாகம்மா தம்பதியரின் மருமகனும், இந்திராணியின் அன்புக் கணவரும், தபோநிதி, பிறேமச்சந்திரன் (லண்டன்), திருலோகநாயகி, தவச்செல்வி, யோகேஸ்வரன் (லண்டன்), யோகலிங்கம் (ஆசிரியர், யா/யாழ்ற்ரன் கல்லூரி, காரைநகர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சற்குணராசா, சிவனேஸ்வரி, காலஞ்சென்ற சிவபாலசுந்தரம் மற்றும் வரதராசா, விஜயகுமாரி, தர்ஷினி ஆகியோரின் அன்புமாமனும், காலஞ்சென்றவர்களான பாக்கியம், பரமேஸ்வரி, சங்கரப்பிள்ளை, இந்திராணி, கந்தையா (கந்தசாமி) மற்றும் தனலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான நடனசபாபதிப்பிள்ளை, ஏரம்பமூர்த்தி மற்றும் மகேஸ்வரி, காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம், சோமசுந்தரம் மற்றும் சரஸ்வதி, யோகராணி, அம்பிகைபாகன், நடேசலிங்கம், தியாகலிங்கம் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், பரமானந்தம், இராசலோசினி, பரமேஸ்வரி, விஜயலட்சுமி ஆகியோரின் சகலனும், சிந்துஜா, தர்ஷன், தனுஜா, நிருஜா, மிதுஷன், மிதுஷாளினி, திவ்வியா, சுபேக்கா, சினேக்கா, துர்க்கா, அனுஜன், சுதனிகா, சுதர்ஷன், தர்ஷிகா, தனுஜன், திருவேரகன், சாந்தரூபன், குகரூபன், ஹர்சன், கல்யாணி ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.07.2012) திங்கட்கிழமை மு.ப. 10.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

53/13, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

தகவல்: மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(21143)(6-8)


**வீடு வாடகைக்கு**

நல்லூர் கோயில் வீதியில் (கோயிலுக்கு அருகில்) நான்கு அறைகள் கொண்ட வீடு வாடகைக்குண்டு (புதிதாக புதுப்பிக்கப்பட்டது)

தொடர்பு - 0773964332

(21146) (3.6)



**வீடு வாடகைக்கு உண்டு**

இருபாலை சந்திக்கு அருகில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.

தொடர்பு - 0778773894

(21144) (3.6)



**வீடு வாடகைக்குத் தேவை**

கச்சேரி, சுண்டுக்குளி, நகரை அண்டிய பகுதிகளில் சிறிய நடுத்தர குடும்பம் ஒன்றுக்கு வீடு வாடகைக்குத் தேவை (அவசரம்) உடன் தொடர்பு கொள்ளவும்

(21135) (3.6) 0752897908



**உடன் தேவை**

கணினியில் Pagemaker, Coreldraw, Photoshop தெரிந்த நல்ல அனுபவம் உள்ளவர் தேவை. திறமைக்கேற்ப 12000-15000 வரை சம்பளம் வழங்கப்படும்.

T.P- 0772174751

(21141) (3.6)


## மணி விழா வாழ்த்து

30.07.2012

வல்லிபுராழ்வார் தேவஸ்தான பிரதம குரு

**சிவஸ்ரீ. க. புருஷோத்தமக்குருக்கள் - ஸ்ரீமதி ரஜனி அம்மா**

அவர்கள் அறுபதாவது ஆண்டை (ஷஷ்டியப்த பூர்த்தியை) எட்டுகின்ற இவ் வேளையில் தீர்க்காயுஷோடு நீடூழி வாழ சித்தன்கேணி சிவசிதம்பரேஸ்வரரையும் வல்லிபுராழ்வாரையும் வேண்டுவதோடு எமது பெற்றோரின் ஆசியையும் வேண்டி நிற்கின்றோம்.



ஸ்ரீ. ஸ்ரீமதி உமாபதிசர்மா - வாசுகி
செல்வி. பு. சௌமியா
பிரம்மஸ்ரீ . பு. ராஜாராம்
செல்வி. உ. ஸ்ரீநயா

(21147)(6-8)


**வெளிநாடுகளிற்கான துரித தபால்கள், பொதிகள் சேவை**

11 Kg நிறையுடைய ஒவ்வொரு பொதிகளுக்கும் 01 Kg க்கு UK 645 /= Germany 735/= France 775/=

மேலும் சகல நாடுகளுக்கும் கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளன. Denmark 775 /= Australia 825/= Holland 825 /=

கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் பொதிகளை உங்கள் வீட்டிலிருந்தவாறே அனுப்பிக்கொள்ளலாம்.

ஆடி மாத அதிரடி விலைக்குறைப்பு

குறிப்பு : சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களிலும் எமது சேவையினை பெற்றுக்கொள்ளலாம்.

இல.1 பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி, யாழ் T.P : 021 222 6113

Arrul Global Express
International Courier & Cargo Service

(A/2002)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# இலங்கையின் காய் நகர்த்தல் பனிப்போராக மாறும் அபாயம்

கடந்த வார முடிவில் இலங்கை விடயத்தில் இரண்டு முக்கிய வெளிநாட்டுப் பிரமுகர்களின் இலங்கை வருகை பற்றிய செய்திகள் அரசியல் மற்றும் இராஜதந்திர மட்டங்களில் அலசப்படுபவையாக அமைந்திருந்தன. ஒன்று, பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் ஹைனா றபானி கார் அம்மையாரின் ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்த இலங்கை வருகை இரத்தான விடயம். அது இரத்தானமைக்கான காரணம் அறிவிக்கப்படவில்லை.

அடுத்தது, சீன பாதுகாப்பு அமைச்சர் லியாங் க்வாங்லீ அடுத்த வாரம் அளவில் இலங்கை வரவிருக்கிறார் என்பதாகும். பாகிஸ்தான் அமைச்சரின் வருகையை அந்த நாடு இரத்துச் செய்தமைக்கும் சீன அமைச்சர் இலங்கை வரவிருப்பதற்கும் தொடர்பு இருக்கும் என்று கூறமுடியாவிட்டாலும் பாகிஸ்தான், இலங்கை, இந்தியா மற்றும் சீனா போன்ற இந்தப் பிராந்திய நாடுகளுக்கிடையில் சமீபகாலமாக ஏற்பட்டுவருகின்ற நெருக்கம் மற்றும் நெருடல்களை உன்னிப்பாக அவதானிப்பவர்கள் காரணம் கற்பித்து விமர்சிக்காமல் இருக்கமாட்டார்கள்.

சீன அமைச்சரின் அதாவது சீன அரசின் உயர்நிலை அமைச்சர் ஒருவர் தற்போது இலங்கை வருவதற்கான காரணத்தை ஊய்த்தறிவது கடினம் தான். ஆனால் அண்மையில் சீனாவுக்குச் சென்றிருந்த பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ விடுத்த ஓர் அழைப்பின் பேரிலேயே சீனப் பாதுகாப்பு அமைச்சரின் வருகை இடம்பெறவிருப்பதாக செய்திகள் கூறினாலும் நாட்டின் முப்படைகளின் தளபதியும் பாதுகாப்புத்துறைக்குப் பொறுப்பானவரும் நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்டவருமான ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் முழு விருப்பத்துக்கு அமையவே இந்த அழைப்பு விடுக்கப்பட்டிருக்கும் என்பது திண்ணம்.

சீன அமைச்சர் இலங்கையில் இருக்கும் போது இருதரப்பு உறவுகள், பாதுகாப்பு விடயங்கள் மற்றும் பிராந்திய சமாச்சாரங்கள் பற்றியெல்லாம் இலங்கை ஜனாதிபதியோடும், பாதுகாப்புச் செயலர் மற்றும் முக்கிய பிரமுகர்களோடும் ஆலோசனைகள் கலப்பார் என்பது தெரிந்த விடயம். தெரியாத விடயம் உயர்மட்ட சீன அமைச்சர் ஒருவர், அதுவும் சீன பாதுகாப்புத்துறை அமைச்சர் இலங்கைக்கு வருகை தருவதானது பக்கத்து நாடான இந்தியாவுக்கு மிகப் பெரிய - மிகத் தாக்கமான ஒரு ராஜதந்திர செய்தியை வழங்குவதாகவே நிச்சயம் இருக்கும் என்பதில் சந்தேகம் ஏதுமில்லை.

போர் நடந்து கொண்டிருந்தபோது இலங்கை அரசுத் தலைவர்கள் இந்தியாவுக்கு வழங்கியிருந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமை குறித்து அந்த நாடு பொருமிக் கொண்டிருந்த நிலையில் அதனை இலங்கைத் தலைவர்களுக்கு உணர்த்துவதற்கு பல தரப்பட்ட வகையிலும் முயற்சி எடுத்து தவிர்க்க முடியாத நிலையில் கடந்த மார்ச் மாதம் ஜெனிவாவில் மனித உரிமைகள் சபை மாநாட்டில் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவால் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தது. அதுவும் கூட கடுமையாகவிருந்த தீர்மானத்தை தனது செல்வாக்கைப் பயன்படுத்தி இலகுவாக்கச் செய்து தான் ஆதரித்தது.

ஆனால் இலங்கை அரசுத் தலைவர்கள் அந்த நாட்டுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாது போனமையுடன் பலவிதமான முறைகளில் தன் கடுப்பையும் வெளிப்படுத்தி வருகின்றனர். கடந்த மாதம் றியோடி ஜெனிரோவில் நடைபெற்ற உலகத் தலைவர்களின் மாநாட்டில் இலங்கை ஜனாதிபதி பேசுகையில், அந்நிய நாடுகளின் இழுவைப் படகுகள் உறுப்பு நாடுகளின் கடல் வளங்களை சூறையாடிச் செல்வதைத் தடுக்க வேண்டும் என்று மறைமுகமாக இந்திய மீனவர்களின் ஊடுருவலைக் கண்டித்திருந்தார். சமீபத்தில் இந்தியப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில், ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்தியா ஆதரித்தமையை தாம் ஏற்றுக்கொள்ளவில்லை என்று கூறியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இந்தச் சூழ்நிலையில் தான் இலங்கையிலிருந்து ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் பொருளாதார விஞ்ஞான மேம்பாட்டுத்துறை அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஆகியோர் இந்தியத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்காக புதுடில்லிக்குச் செல்லவிருக்கிறார்கள்.

இந்தப் பேச்சுவார்த்தைகளின் போது இந்தியத் தரப்பிலிருந்து கடும் அழுத்தம் பிரயோகிக்கப்படும் என்று கருதப்படுகின்றது. அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் செயற்படுத்தப்படுவது, மீள் குடியமர்வு தொடர்பான நடவடிக்கைகளை துரிதப்படுத்துவது, வடக்கு மாகாண சபைத் தேர்தலை கூடிய விரைவில் நடத்தி அந்தப் பகுதி மக்களின் கையில் நிர்வாகத்தைக் கையளிப்பது மற்றும் குறிப்பாக வடக்கு, கிழக்கிலிருந்து இராணுவத்தை அகற்றி பொலிஸாரிடம் இந்தப் பிரதேசங்களின் பாதுகாப்பை ஒப்படைப்பது போன்ற விடயங்கள் இந்தியத் தரப்பில் வலியுறுத்தப்படலாம். அத்துடன் இந்தியத் தரப்பில் இனிமேலும் பொறுமை கடைப்பிடிக்கப்படமாட்டாது என்பதும் சர்வதேச மட்டத்தில் குறிப்பாக மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு நெருக்குதல் கொடுப்பது பற்றியும் கோடி காட்டப்படலாம். அதேவேளை இலங்கைத் தரப்பில் வழக்கம் போல வாக்குறுதிகளும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் தொடர்பான செயற்திட்டம் பற்றிய விளக்கங்களும் இடம்பெறக்கூடும்.

சீனப் பாதுகாப்பு அமைச்சரின் வருகை இந்த விடயத்தில் எந்தவகையில் இலங்கைத் தரப்புக்குப் பயன்படப் போகிறது என்பதை இனிமேல் தான் பார்க்க வேண்டும். இந்தியாவின் கடும் போக்கைத் தணிப்பதற்கு ஒருவேளை ராஜதந்திரச் செயற்பாடாகவும் இருக்கலாம். இரு நாடுகளுக்குமிடையில் இலங்கைத் தமிழர் விடயம் ஒரு பனிப்போருக்கு இட்டுச் செல்லுமானால் பிரச்சினை பாரதூரமான நிலைமைக்குச் சென்றுவிடும். இடையில் தவிக்கப்போவது இலங்கைத் தமிழர் மட்டுமல்ல இலங்கைத் தேசமும் தான்.

# அதிக எண்ணிக்கையான சிறுவர் போர்ச் சூழலால் பாதிப்பு

## மேலும் பாதிக்கப்பட்டோர் வீடுகளில் முடக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 30

போதியளவு சத்தான உணவு கிடைக்காமை, போர்ச் சூழல் போன்ற பல காரணங்களால் வடமாகாணத்தில் அதிக எண்ணிக்கையான சிறுவர்கள் பாதிப்படைந்திருப்பதை தொழில் வழிச் சிகிச்சை மூலம் இனங்காண முடிந்துள்ளது என்று யாழ். போதனா வைத்தியசாலையின் பிரதான தொழில் வழிச் சிகிச்சையாளர் என்.கணேசலிங்கம் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

யாழ். போதனா வைத்தியசாலையின் தொழில் வழிச் சிகிச்சைப் பிரிவில் கடந்த மாதங்களில் சிகிச்சை பெற்றவர்களில் அதிக எண்ணிக்கையானவர்கள் சிறுவர்களே. இவர்களில் பக்கவாத நோய், அங்கங்கள் செயலிழத்தல், தன்னிச்சையாக இயங்க முடியாதவர்களும் இருந்துள்ளனர்.

**போர்ச் சூழலின் போது ஏற்பட்ட காயங்களில் குழந்தைகளுக்கு நாள்பட்ட காயங்களாக இருந்து அங்கங்களைப் பாதிப்புக்கு உள்ளாக்கியுள்ளது.**

சிறுவர்களின் தாய்க்கு கர்ப்பகாலத்தில் சத்தான உணவு கிடைக்காமை, குடும்பப் பிரச்சினைகளால் பிள்ளையின் ஆரோக்கியத்தில் அக்கறை செலுத்தாமை, கர்ப்ப காலத்தில் சரியான சிகிச்சைகளை, ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளாமை மற்றும் குழந்தை கிடைத்தவுடன் அவர்களுக்கு நிறைந்த சத்தான உணவுகள் வழங்காமை, போர்ச் சூழலின் போது ஏற்பட்ட காயங்களில் குழந்தைகளுக்கு நாள்பட்ட காயங்களாக இருந்து அங்கங்களைப் பாதிப்புக்கு உள்ளாக்கியமை போன்ற காரணங்களால் சிறுவர்கள் மாற்றுத் திறனாளிகளாக மாற்றப்பட்டுள்ளனர்.

வவுனியா, திருகோணமலை உட்பட வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும் சிகிச்சை பெற்று வரும் நிலையில் இவர்களில் அதிக எண்ணிக்கையானோர் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. சிகிச்சை பெற்றவர்களைத் தவிர பாதிக்கப்பட்ட சிறுவர்கள் பலர் வீடுகளில் முடக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-14)

# 6 ஆயிரம் ஆரம்ப, இடைநிலை பாடசாலைகளும் அபிவிருத்தி

யாழ்ப்பாணம், ஜூலை 30

மஹிந்த சிந்தனை எதிர்காலப் போக்கு மறுமலர்ச்சி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 5 ஆயிரம் ஆரம்பப் பாடசாலைகளும் ஆயிரம் இடைநிலைப் பாடசாலைகளும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் மேற்கொள்ளப்படவுள்ள இந்த வேலைத் திட்டத்தில் தலா 5 லட்சம் ரூபாவுக்கு உட்பட்டதாக பின்வரும் வேலைத் திட்டங்கள் இனங்காணப்பட்டு திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

ஒவ்வொரு பாடசாலைகளிலும் மிக அவசியமெனக் கருதப்படும் மின்சார வசதிகளை வழங்கல், மலசலகூட மற்றும் சுகாதார வசதிகளை அபிவிருத்தி செய்தல், குடிதண்ணீர் வசதிகளை அபிவிருத்தி செய்தல், பாடசாலை வேலைகள் மற்றும் வாயில் கதவுகள் அமைத்தல், ஏற்கனவே காணப்படுகின்ற கட்டடங்கள் திருத்தம் செய்தலும் பூச்சுப் பூசுதலும், பாடசாலை நிலத்தை முன்மாதிரி தோட்டமாக ஆக்குதல்," பாடசாலையின் பெயர்ப் பலகையைத் தயாரித்தல், முதலாம் ஆண்டு மாணவர்களின் செயற்பாட்டு அறையை முறையாக நிர்மாணித்தல், ஆசிரியர்கள் ஏற்கனவே வசிக்கும் ஆசிரியர் விடுதி ஒன்று இருப்பின் அதற்கான அத்தியாவசியமான திருத்த வேலைகளை மட்டும் மேற்கொள்ளுதல் போன்ற திட்டங்கள் இதற்குள் உள்ளடக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ம-9)

# அழிந்துபோன பனை வளங்களை ஈடுசெய்ய மாவட்ட ரீதியாக முயற்சி

யாழ்ப்பாணம், ஜூலை 30

அழிந்துபோன மற்றும் சேதமுற்ற பனைகளுக்கான மீள் நடுகை செய்வதற்கான முயற்சிகள் அனைத்து மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் இரண்டு லட்சம் பனைகள் நடுவதே எதிர்பார்ப்பு ஆகும். ஆனால் தற்போது போடப்பட்டிருக்கும் நாற்றுக்களின் எண்ணிக்கையில் குறைந்தது ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு லட்சம் பனை நாற்றுக்கள் நடுவதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கற்பிட்டி, அனுராதபுரம், களுத்துறை ஆகிய பிரதேசங்களில் உள்ள உல்லாச விடுதிகளை அழகுபடுத்துவதற்காக பனை நாற்றுக்களை பனை அபிவிருத்திச் சபையிடம் கேட்டுள்ளது.

அதற்காக தற்போது 4 ஆயிரம் பனை நாற்றுகள் மாதிரிப் பனைப் பண்ணைகளில் வளர்க்கப்பட்டு வருகின்றன.

தற்போது உல்லாச விடுதிகளுக்காக 2 ஆயிரம் பனை நாற்றுக்கள் கோரப்பட்டுள்ளன. இவை ஒவ்வொரு நாற்றுக்களும் 100 ரூபா வீதம் விற்பனை செய்யவுள்ளோம்.

இலங்கை முழுவதும் 11 மில்லியன் பனைகள் உண்டு. யாழ். மாவட்டத்தில் மட்டும் அண்ணளவாக 35 லட்சம் பனைகள் உண்டு எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் அதிக எண்ணிக்கையான பனைகள் அழிக்கப்பட்டுள்ளன. இதற்காகச் சரியான எண்ணிக்கையைப் பெறுவதற்காக ஒவ்வொரு பிரதேச ரீதியாக மதிப்பீட்டுத் திணைக்களம் மதிப்பீட்டுப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது.- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-13)

# அரியாலை தினத்தின் உதவி வழங்கல்



கொழும்புத்துறை, ஜூலை 30

சர்வதேச அரியாலை தினத்தின் உதவி வழங்கும் திட்டத்தின் கீழ் புலம்பெயர் அரியாலை வாழ் மக்களால் வறிய குடும்பங்களுக்கு உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டன.

நேற்று முன்தினம் நடைபெற்ற சர்வதேச அரியாலை தினத்தில் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய அரங்கில் நடைபெற்ற இரவு நிகழ்வில் வைத்து இந்த உதவிகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன.

17 பேருக்கு சைக்கிள்களும் 2 பேருக்கு தையல் இயந்திரங்களும் வழங்கப்பட்டன.

போர் மற்றும் வேறு காரணிகளால் கணவனை இழந்த விதவைக் குடும்பங்கள், வறுமைக் கோட்டில் வாழ்வோர் என இனங்காணப்பட்டு அரியாலை அபிவிருத்திச் சங்கத்தால் பரிந்துரை செய்யப்பட்ட பயனாளிகளுக்கு இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

சர்வதேச அரியாலை தினத்தைக் கொண்டாடும் முகமாக பெரும் எண்ணிக்கையில் புலம்பெயர் மக்கள் அரியாலைக்கு வந்து இந்த நிகழ்வுகளில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7-135)

# வேவிலந்தையில் நாளை தேர்

வடமராட்சி,ஜூலை30

அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் ஆலயத் தேர்த்திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை காலை நடைபெறவுள்ளது.

அதிகாலை 4 மணிக்குப் பால் பூசையும் காலை 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் இடம்பெற்று முற்பகல் 9 மணிக்கு அம்பாள் தேரில் ஆரோகணித்து வீதியுலா வருவார். பிற்பகல் ஒரு மணிக்குத் தேரில் அம்பாளுக்குப் பச்சை சாத்தப்பட்டு தேரிலிருந்து சுவாமி இறங்கி ஆலயத்துக்குள் செல்வார்.

நாளை மறுதினம் காலை தீர்த்தத் திருவிழா இடம்பெறும். (ம-78-253)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீடீரென அதிகரித்தது நோயாளர் தொகை

அக்கராயன், ஜூலை 30

கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள கடும் வரட்சி மற்றும் வெப்பமான காலநிலை காரணமாக மருத்துவமனைகளில் நோயாளர்களின் தொகை அதிகரித்துக் காணப்படுகின்றது.

கடும் வெப்பம் காரணமாக பாதிக்கப்படும் வயிற்றோட்ட நோயாளர் பலருக்கு மருத்துவமனைகளில் சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது.

மேலும் வெப்ப கால நோய்களினால் பாதிக்கப்பட்ட நோயாளர்கள் பலர் வைத்தியசாலைகளை நாடுவதும் தெரியவந்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள சில மருத்துவ மனைகளில் மருத்துவர்கள் பணியில் இல்லாததால் கிளிநொச்சிப் பொது மருத்துவ மனைக்கே சகல நோயாளர்களும் செல்ல வேண்டிய அவலநிலையும் காணப்படுகின்றது.

(க-18)

## எரிபொருள் நிலையம்

முத்துஐயன் கட்டுப் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தினால் ஒட்டுசுட்டான் பிரதேசத்திற்கான எரிபொருள் நிரப்பு நிலையம் அமைக்கப்பட்டு வருகின்றது.

இதன் மூலம் நீண்ட தூரம் சென்று எரிபொருளைக் கொள்வனவு செய்யும் பல விவசாயிகள் நன்மையடையவுள்ளனர். மேலும் போக்குவரத்துச் செலவையும், நேரத்தையும் இவர்கள் மீதப்படுத்த முடியும்.

அத்துடன் தாம் விரும்பிய நேரத்தில், தேவையான அளவு எரிபொருளை சிரமமின்றிப் பெறக்கூடியதாகவும் இருக்குமென விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

போரின் பின்னர் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் எரிபொருள் நிலையம் அமைக்கப்படாததால் விவசாயிகளும், ஏனையோரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(க-500)

## ஆயர் வருகை

முல்லைத்தீவு,ஜூலை 30

முல்லைத்தீவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட திருக்குடும்ப கன்னியர் மடத்துக்கு யாழ். ஆயர் பேரருட்திரு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அண்மையில் வருகை தந்து மடத்தைப் பார்வையிட்டார்.

கடந்த காலப் போரினால் அழிவடைந்த திருக்குடும்ப கன்னியர் மடத்துக்குப் பதிலாக அதே இடத்தில் புதிதாகக் கன்னியர் மடம் ஒன்று யாழ். கத்தோலிக்க திருச்சபையால் நிர்மாணிக்கப்பட்டது.

தற்போது இந்த மடத்தில் பல அருட்சகோதரிகள் தங்கி நின்று பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சேவை புரிந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(க-8)

### மன்னார் நீதிமன்ற தாக்குதல் சம்பவம்

# கைதானவர்களை விடுவிக்க உதவுமாறு அமைச்சர் ஹக்கீமிடம் கோரிக்கை

மன்னார், ஜூலை 30

மன்னார் நீதிமன்றத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட மன்னாரைச் சேர்ந்த 13 பேரையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு கைது செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீமிடம் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளனர்.

மன்னாரில் கோந்தைப் பிட்டி மீன்பிடி இறங்குதுறை தொடர்பாக ஏற்பட்ட தகராறைத் தொடர்ந்து மன்னார் உப்புக்குளம் மக்களால் கடந்த 18 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது மன்னார் நீதிமன்றத்தின் மீது கற்களால் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதன் போது நீதிமன்ற கட்டடத்திற்குச் சேதம் ஏற்பட்டுள்ளது.

குறித்த சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் 13 பேர் கைது செய்யப்பட்டுத் தற்போது விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இன்னும் பலரைப் பொலிஸாரும் புலனாய்வுத்துறையினரும் தேடி வருவதோடு மேலும் 35 பேரை இன்று திங்கட்கிழமை மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மன்னார் உப்புக்குளம் மற்றும் மூர்வீதி ஆகிய கிராமங்களுக்குச் சென்ற அமைச்சர் ரவூப் ஹக்கீமிடம் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 13 பேரையும் விடுதலை செய்வதற்கு ஆவன செய்யுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இதே சமயம் மன்னார் நீதிமன்றத் தாக்குதல் தொடர்பில் பொலிஸாரும், குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரும் வீடியோ மற்றும் புகைப்படச் சாட்சியங்களை ஆதாரமாக வைத்துப் பலரைக் கைது செய்ய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுள்ள உப்புக்குளம் மற்றும் மூர் வீதியைச் சேர்ந்த 35 பேரில் அதிகமானவர்கள்



அமைச்சர் ரஸாத் பதீயுதினின் ஆதரவாளர்கள் மற்றும் அவருடைய அரசியல் செயற்பாட்டாளர்கள் எனத் தெரிய வந்துள்ளது.

இதே வேளை அண்மையில் மன்னார் ஆயருக்கு ஆதரவாக இடம் பெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு ஆயருக்கு ஆதரவு தெரிவித்ததாக மன்னார் மாவட்டத்தின் மூத்த முஸ்லிம் ஊடகவியலாளர் மீது அமைச்சர் ரிஸாத்தின் சகோதரர் எனத் தன்னை அடையாளப்படுத்திய ஒருவர் தாக்குதலை நடத்தியிருந்தார்.

குறித்த தாக்குதலை நடத்தியவர் அடையாளம் காணப்பட்ட 35 பேரில் முதலாவது இடத்தில் உள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(க-12)

## மோசமான நிலையில் காணப்படும் வன்னேரிக்குளம்-ஆனைவிழுந்தான் வீதி

கிளிநொச்சி வன்னேரிக்குளம் - ஆனைவிழுந்தான் பிரதான வீதி இதுவரை புனரமைக்கப்படாத நிலையில் உள்ளதால் இங்குள்ள மக்கள் தினமும் என்றுமில்லாதவாறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அக்கராயன்குளம் ஆனைவிழுந்தான், வன்னேரிக்குளம், ஜெயபுரம் ஆகிய இடங்களுக்குச் செல்லும் சுமார் 52 கிலோமீற்றர் நீளமான பிரதான வீதி நீண்டகாலமாக புனரமைக்கப்படாமல் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது. மழை காலங்களில் போக்குவரத்தில் மிக மோசமான நிலையே காணப்படுகின்றது.

கடந்த டிசம்பர் மாதம் 27 ஆம் திகதி கரைச்சி பிரதேச செயலகத்தின் வருடாந்த ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நடைபெற்ற போது குறித்த வீதியைப் புனரமைக்க வேண்டும் என கண்ணி வெடி அகற்றும் நிறுவனமொன்றின் உயரதிகாரி ஒருவராலும் பிரதேசத்திலுள்ள பொது அமைப்புக்களாலும் எழுப்பப்பட்ட கோரிக்கை தொடர்பாக கருத்துத் தெரிவித்த மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவர் மாவட்ட அரச அதிபர் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரி ஆகியோர் இன்னும் 10 நாள்களில் தற்காலிகமாகப் புனரமைப்பு செய்து தருவதாக உறுதியளித்திருந்தனர். ஆனால் ஏழு மாதங்கள் கடந்த நிலையிலும் எந்த புனரமைப்பும் இல்லாது இந்த வீதி பயணிக்க முடியாத நிலையில் உள்ளது.

(க-6)

## சக்திமிக்க வெடிபொருள்களால் முத்துஜயன்கட்டில் மக்கள் பாதிப்பு

முல்லைத்தீவு, ஜூலை 30

முத்துஐயன் கட்டில் கருங்கல்லை உடைப்பதற்குப் பயன்படுத்தப்படும் சக்திவாய்ந்த வெடிப் பொருள்களால் இந்தப்பகுதி மக்கள் பல்வேறு பாதிப்புக்களுக்கும் ஆளாகி வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது முத்துஐயன் கட்டுக் குளத்துக்கு அண்மையான இடங்களில் கருங்கல்லை அகழும் வேலைகள் இடம்பெற்று வருகின்றன. இதற்கெனச் சக்தி வாய்ந்த வெடிபொருள்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றிலிருந்து எழுகின்ற பலத்த ஓசையும், அதிர்வும் இங்குள்ள மக்களை வெகுவாகப் பாதித்து வருகின்றன.

கற்களை நிலத்தின் ஆழத்தில் வெடி வைத்துத் தகர்க்கும் போது நிலம் அதிர்கின்றது. இதனால் கிணறுகளின் நீர் மட்டம் திடீரெனக் குறைந்து செல்கின்றது. அத்துடன் நீர் நிலைகளுக்கும் பாதிப்பு ஏற்படும் சாத்தியங்கள் உள்ளன என்று உள்ளூர் மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

மேலும் வெடி அதிர்வுகளால் அருகிலுள்ள வீடுகளும் பாதிக்கப்படக் கூடிய ஏது நிலையும் தோன்றியுள்ளது.

அத்துடன் குளத்துக்கு மிக அண்மையில் வெடி அதிர்வுகள் உருவாகுவதால் குளக்கட்டும் பாதிக்கப்படக் கூடுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே வகைதொகையற்ற விதத்தில் இடம்பெறும் கிரவல் மண் அகழ்வு, காடழிப்பு என்பனவற்றுடன் தற்போது இதுவும் இடம்பெற்று வருவதால் இங்குள்ள மக்கள் செய்வதறியாது அச்சத்தில் ஆழ்ந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

(க)

## அடிக்கல் நடும் விழா

ஆயிரம் பாடசாலைத் திட்டத்தின் கீழ் மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் முதற் பாடசாலையாக தெரிவு செய்யப்பட்ட தலைமன்னார் பியர் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் புதிய கட்டடம் ஒன்று கட்டுவதற்கான அடிக்கல் நடும் விழா, அப்பாடசாலையின் அதிபர் எஸ்.செல்வரஞ்சன் தலைமையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை இடம் பெற்றது.

இந்த நிகழ்வின் போது முதன்மை விருந்தினராக மன்னார் வலயக்கல்விப்பணிப்பாளர் எம்.எம்.சியாம், சிறப்பு விருந்தினராக அமைச்சர் றிஸாத் பதியுதீனின் மாவட்ட இணைப்பாளர் என்.எம்.முனவ்பர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன் போது முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட மன்னார் வலயக்கல்விப்பணிப்பாளர் என்.எம்.சியாம் தெரிவித்ததாவது:-

இந்தப்பாடசாலை ஆயிரம் பாடசாலைத் திட்டத்துக்குள் உள்வாங்கப்பட்டுள்ளதையிட்டு நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இத்திட்டத்தின் கீழ் இப்பாடசாலை சிறந்த பாடசாலையாக மிளிர வேண்டும் என வாழ்த்துகின்றேன் எனத்தெரிவித்தார்.

(க-12)

## என்ன சுகமோ சுகம்...



கொடிய வெப்பமும், வரட்சியும் மக்களை வாட்டுகின்ற இந்த வேளையில் அக்கராயன் குளத்திலிருந்து நீர் திறந்து விடப்பட்ட வாய்க்கால் ஒன்றில் நீராடித் தமது வெப்பத்தை தணிக்கும் சிறுவர்கள். (க-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திட்ட நடைமுறைகள் குறித்து வெளிப்படைத் தன்மை தேவை

## வடக்கு முகாமைத்துவ அபிவிருத்திப் பணிப்பாளர் தெரிவிப்பு

**நல்லாட்சி தத்துவங்கள் ஊடாக மக்களுக்கான பயனுள்ள சேவைகள் கிடைக்கப் பெறுவதை ஒவ்வொரு சபையும் உறுதிப்படுத்த வேண்டும்**

யாழ்ப்பாணம்,ஜூலை 30

உள்ளூராட்சி சபைகளால் எடுக்கப்படும் தீர்மானங்கள், திட்டங்களை நடைமுறைப்படுத்தும் விதம் குறித்து வெளிப்படைத் தன்மை இருக்க வேண்டும்.

வடக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சித் திணைக்கள பணிப்பாளர் ஐ.கிருஷ்ணானந்தன் இவ்வாறு தெரிவித்தார்.

வேலணை பிரதேச சபை அனைத்து அலுவலர்களுக்கும் சபை உறுப்பினர்களுக்குமான நல்லாட்சி தொடர்பான பயிற்சிப் பட்டறை யாழ். திறந்த பல்கலைக் கழகத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நல்லாட்சி தத்துவங்கள் ஊடாக மக்களுக்கான பயனுள்ள சேவைகள் கிடைக்கப் பெறுவதை ஒவ்வொரு சபையும் உறுதிப்படுத்த வேண்டும். உள்ளூராட்சிச் சபை மக்களை ஆளும் நிறுவனம்.

எனவே பொறுப்புக்கூறும் தன்மை, வெளிப்படைத் தன்மை, வகைகூறும்தன்மை, சமத்துவத்துடன் அனைவரையும் உள்வாங்கும் தன்மை, வினைத்திறன், சட்ட ஒழுங்கு, பங்குபற்றல், ஒருமித்த இணக்கப்பாடான தன்மையுடன் உள்ளூராட்சி சபைகள் செயற்பட வேண்டும்.- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-41)

## வீதியோரம் பெரிய குழி பயணிகள் பெரும் சிரமத்தில்

கொழும்புத்துறை,ஜூலை 30

ஆஸ்பத்திரி வீதியும் கோயில் வீதியும் இணையும் சந்திப் பகுதியில் வீதியோரமாகக் காணப்படும் பெரிய குழியினால் மக்கள் பெரும் ஆபத்துக்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

ஆஸ்பத்திரி வீதிக்கு 'காப்பெற்' இடப்பட்டுள்ள போதிலும் இந்த ஆழமான குழி நீண்ட காலமாக சீர்செய்யப்படாது காணப்படுகிறது.

வீதிக்கு மிக அருகில் இந்தக் குழி உள்ளதால் இரு வாகனங்கள் ஒன்றையொன்று வழிவிடும் போது குழியில் இறங்கும் ஆபத்து நிலை ஏற்படுகிறது.

மோட்டார் சைக்கிள், சைக்கிள் பயணிகள் இரவு நேரங்களிலும் வாகன நெரிசல் மிகுந்த வேளைகளிலும் இந்தக் குழியில் விழுந்தெழுந்து செல்வதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

அதே வேளை 'காப்பெற்' இடப்பட்ட ஆஸ்பத்திரி வீதியின் இரு பகுதிக்கும் மண்பரப்பப்படாது உள்ளதால் இந்தப் பகுதிகள் உயரமாகக் காணப்படுகின்றது. இதனாலும் விபத்துக்கள் ஏற்படும் நிலைமை காணப்படுகின்றது.

'காப்பெற்' வீதிகளை அமைக்கும் போது பாதையோரங்களையும் சீர் செய்து பொதுமக்களுக்கு ஏற்படும் ஆபத்துக்களையும், சிரமங்களையும் தவிர்க்குமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இதேவேளை, ஆஸ்பத்திரி வீதிக்கு யாழ். நகர்ப் பகுதியிலும் 'காப்பெற்' போடப்பட்டு வருகின்றது.

இரு வழியான இந்த வீதியை 'காப்பெற்' வீதியாக புனர்நிர்மாணம் செய்யும் பணிகள் நேற்று ஆரம்பமாகின.

முதலில் சத்திர சந்தியில் இருந்து ஆஸ்பத்திரி வீதி சந்தி வரைக்கும் உள்ள இரு வழிப்பாதைகள் 'காப்பெற்' வீதியாக அமைக்கப்படவுள்ளன. (ம-17-135)

## பெருகும் சல்பீனியா

வலி வடக்கு,ஜூலை 30

யாழ்ப்பாணம் ஆரிய குளத்தில் சல்பீனியா அதிகம் பரவிக் காணப்படுகின்றது. இந்த நிலையில் இங்கு நுளம்புகள் பெருகும் வாய்ப்புகளும் அதிகரித்துக் காணப்படுகின்றன என்று அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

குளத்தின் ஒரு பகுதி அண்மையில் துப்புரவு செய்யப்பட்ட போதிலும் மீண்டும் சல்பீனியா பெருகிக் காணப்படுகிறது என்று தெரிவிக்கப்படுகிறது. (ம-86)



பலாலி வீதியின் அகலிப்புப் பணிகள் இடம்பெற்று வரும் நிலையில் வீதியில் கோண்டாவில் பஸ் டிப்போக்கு முன்பாக உள்ள பழைமை வாய்ந்த அரச மரம் ஒன்று வெட்டிச் சாய்க்கப்பட்டுள்ளது. (ம-17)

## சாவகச்சேரியில் சைக்கிள்கள் பரிசோதனை

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் பயன்படுத்தப்படும் சைக்கிள்களும், பொலிஸாரால் பரிசோதிக்கப்படவுள்ளன.

சைக்கிள்களில் பிரேக், பெல், லைட், பூட்டு ஆகியவற்றுடன் சைக்கிள் இலக்கத் தகடுகளும் பரிசோதிக்கப்படவுள்ளன. நாளை மறுதினம் முதலாம் தினதி தொடக்கம் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இவை இல்லாத சைக்கிள்களை வைத்திருப்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பிரிவுக்கு உட்பட்ட கிராம அலுவலர்களுக்கு நடத்தப்பட்ட கலந்துரையாடலில்பொலிஸ்நிலைய தலைமை அலுவலகப் பரிசோதகர் சந்திரசேகர தெரிவித்ததாகக் கூறப்பட்டது.

கிராம அலுவலர்கள் தத்தமது பிரிவு மக்களுக்கு அறிவித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கூறப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

## எழுவைதீவு வைத்தியசாலைக்கு தற்காலிகமாக ஒரு வைத்தியர்

யாழ்ப்பாணம், ஜூலை 30

மக்களின் கோரிக்கையைத் தொடர்ந்து ஊர்காவற்றுறை பிரதேசத்தில் எழுவைதீவில் இயங்கிவரும் அரச வைத்தியசாலைக்குத் தற்காலிகமாக ஒரு வைத்தியர் நியமிக்கப்பட்டுள்ளார்.

அனலைதீவு வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியரே வாரத்தில் ஒரு நாள் இந்த வைத்தியசாலையில் கடமையாற்றுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எழுவைதீவு அரச வைத்தியசாலையில் கடமையாற்றி வந்த வைத்தியர் கடந்த நான்கு மாதங்களுக்கு முன் ஓய்வு பெற்றுச் சென்றுள்ளார். இவரின் இடத்துக்கு எவரும் நியமிக்கப்படவில்லை.

இந்த நிலையில் இந்தக் கிராமத்தில் வசிக்கும் சுமார் 250 குடும்பத்தவர்கள் வைத்தியரின்றிப் பாதிக்கப்பட்டிருந்தனர். இவர்கள் சிகிச்சை பெறுவதற்குத் தூர இடங்களை நாடிச் செல்ல வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தனர்.

இந்த நிலை குறித்து, இந்தப் பகுதி மக்கள் ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவர் ம.ஜெயகாந்தனின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

இதனைத் தொடர்ந்து, யாழ்.பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரனுக்கு இந்தத் தகவலைத் தலைவர் தெரியப்படுத்தினார்.

இதனையடுத்து அனலைதீவு வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியரை பிரதி வெள்ளிக் கிழமைகளில் எழுவைதீவு வைத்தியசாலையில் கடமையாற்றுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-115)

## மருத்துவர் ஜெயக்குமாரன் வீடு தாக்கப்பட்ட சம்பவம்: வலி. மேற்குப் பிரதேச சபை கண்டனம்

புற்று நோய் வைத்திய நிபுணரின் வீட்டின் மீது மேற்கொள்ளப்பட்ட இனம் தெரியாதவர்களின் தாக்குதல் சம்பவம் உண்மையில் புற்று நோயாளர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட சம்பவமாகவே கொள்ள வேண்டும். மருத்துவர் என். ஜெயக்குமாரன் புற்று நோயாளர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் சேவையை மேற்கொண்டு வரும் வேளையில் இத்தகைய சம்பவம் இடம்பெற்றிருப்பது வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியது.

எதிர்காலத்தில் அவருடைய செயற்பாட்டுக்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டியது அவசியம்.

இவ்வாறு வலி. மேற்கு பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சபைத் தலைவர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் தலைமையில் இடம் பெற்ற மாதாந்தக் கூட்டத்தில் உறுப்பினர் த. நடனேந்திரனால் கொண்டுவரப்பட்ட தீர்மானமே இவ்வாறு நிறைவேற்றப்பட்டுள்ளது. கடந்த காலத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு சென்ற புற்று நோயாளார்கள் அடைந்த துன்ப துயரங்களை நாம் மறந்து விட முடியாது.

இந்த நிலையில் யாழ்ப்பாணத்தில் புற்றுநோயாளர்களுக்குச் சிகிச்சை வழங்கப்பட்டு வரும் நிலையில் இத்தகைய சம்பவம் இடம்பெற்றுள்ளமை வேதனையளிப்பதாக உள்ளது. இந்த நிலையில் இந்தச் சம்பவம் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டிய ஒன்று- என்று அந்தக் கண்டனத் தீர்மானத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-86)

## மகேந்திரபுரம் கிராமத்தில் இந்திய வீடுகள் அமைப்பு

கொழும்புத்துறை, ஜூலை 30

கொழும்புத்துறை மகேந்திரபுரம் கிராமத்தில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு இந்திய அரசின் உதவித் திட்டத்தின் கீழ் 7 வீடுகள் அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இந்தப் பகுதியில் முதலில் இந்திய அரசின் வீடமைப்பு உதவித் திட்டத்தில் 5 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு கையளிக்கப்பட்டது. தொடர்ந்து தற்போது 7 வீடுகள் அமைக்கப்பட்டுவருகின்றன. (ம-135)

## மயங்கி வீழ்ந்த குடும்பஸ்தர் சாவு

தென்னம்பிள்ளைகளுக்குத் தண்ணீர் இறைத்த குடும்பஸ்தர் மயங்கி வீழ்ந்து மரணமானார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை மந்துவில் கிழக்கில் இடம்பெற்றது. இதேஇடத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி வீரசிங்கம் (வயது-57) என்பவரே மரணமடைந்தவராவார்.

மயக்கமடைந்து வீழ்ந்ததால் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு வரும்வழியில் மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

## நிரந்தர அதிபர் இன்மையால் நெருக்கடி

மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலைக்கு நிரந்தர அதிபர் இன்மையால் அந்தப் பாடசாலை மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுவதாக பெற்றோர்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பாடசாலையில் எட்டு ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றிய அதிபர் ஒருவர் பதவி உயர்வில் சென்றுள்ளார். இந்த நிலையில் புதிய அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டார். ஒரு வருட காலம் பணியாற்றிய புதிய அதிபர் வேறு ஒரு பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டார். அடுத்து நியமனம் பெற்ற அதிபரும் ஒரு வருடத்தில் பதவி உயர்வுடன் மற்றொரு பாடசாலைக்கு மாற்றப்பட்டார்.

தற்போது அதிபர் ஒருவர் இல்லாத நிலையில் உப அதிபரின் நிர்வாகத்தில் இந்தப் பாடசாலை இயங்கி வருகிறது. நிரந்தர அதிபர் ஒருவர் இன்மையால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுவதால் புதிய அதிபர் ஒருவரை நியமித்துக் கல்விச் செயற்பாடு [illegible] பெற்றோர் கேட்டுள்ளனர்.(ம-8)

## சுகாதாரம் பேணப்படாத நிலையில் உணவகங்கள், தேநீர்க் கடைகள்

### நடவடிக்கை எடுக்கக் கோருகின்றனர் மக்கள்

வடமராட்சி,ஜூலை 30

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயச் சூழலிலும், வீதிகளிலும் நடத்தப்பட்டு வரும் உணவகங்கள், தேநீர்க் கடைகளில் முறையாகச் சுத்தம் பேணப்படுவதில்லை என்று ஆலயத்துக்கு வருகை தரும் பொது மக்களால் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

அந்தப் பகுதியில் உள்ள உணவகங்களில் திறந்த நிலையில் உணவுப் பொருள்களை வைத்திருப்பதால் சுகாதாரச் சீர்கேடு நிலவுகின்றது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆலய வீதிகளில் உள்ள உணவகங்கள், தேநீர்க் கடைகளில் சுத்தம் பேணப்படாமையால் வெளியிடங்களில் இருந்து வரும் பொது மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு ஆளாகி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பாக சுகாதாரப் பிரிவினர் கவனம் எடுத்துச் செயற்பட வேண்டும் என்றும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

ஆலயத் திருவிழா அண்மையில் ஆரம்பமாகவுள்ள நிலையில் இந்த விடயத்தில் விரைந்து நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார் ஹசாரே



டில்லி, ஜூலை 30

ஊழல் ஒழிக்கும் லோக்பால் பிரேரணை மற்றும் கறுப்புப் பணம் இந்தியாவுக்கு மீட்டுக் கொண்டு வருதல், ஊழல் அமைச்சர்களை விசாரிக்க வலியுறுத்தல் உள்ளிட்ட விவகாரங்களை முன்வைத்து சமூக ஆர்வலரும், தியாகியுமான அன்னா ஹஸாரே நேற்று டில்லியில் கால வரையற்ற உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார்.

டில்லி ஜந்தர்மந்தரில் ஹசாரே ஆதரவாளர்கள் கடந்த 25 ஆம் திகதி தொடக்கம் போராட்டம் நடத்தி வருகின்றனர். ஹஸாரேயின் உடல் நலம் தொடர்பாக அவர் உண்ணாவிரதம் இருக்க வேண்டாம் என்று ஆதரவாளர்கள் கேட்டதற்கிணங்க விரதம் ஆரம்பிக்காமல் இருந்து வந்தார். இந்நிலையில் டில்லியில் தாம் காலவரையற்ற உண்ணாவிரதம் இருக்கப் போதாவதாக அறிவித்தார். இதற்கென நேற்றுக் காலை மைதானத்துக்கு வந்தார் ஹஸாரே. இவர் போராட்டத்தில் இறங்கி இருப்பதால் மேலும் இவரது ஆதரவு அமைப்பினர் ஆயிரக்கணக்கில் கலந்துகொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.(வ)

# ஈழ அங்கீகாரத்தை தடுத்தவர் கருணாநிதி

## வைகோ பாய்ச்சல்



ஈழத்துக்கான அங்கீகாரம் கிடைக்க விடாமல் செய்தவர் கருணாநிதிதான் என்று ம.தி.மு.க. செயலர் வைகோ சாடியுள்ளார்.

தஞ்சாவூர் மாவட்ட ம.தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம் தஞ்சையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. அதில் ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ பங்கேற்றுப் பேசிய போதே இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

அமைந்த ஈழ அரசை உலகம் அங்கீகரிக்கச்செய்ய வேண்டிய நேரத்தில் அதற்கான அங்கீகாரம் கிடைக்க விடாமல் செய்தவர் கருணாநிதியே. அதே போல் ஈழத் தமிழர்கள் மீதான அனைத்துத் தாக்குதல் நடவடிக்கைகளையும் தெரிந்தும் கருணாநிதி அதனைத் தடுக்க முயலவில்லை.

தற்போது தனி ஈழம் தொடர்பாக மாநாடு நடத்துகிறாராம். இது எதிர்காலத்தில் ஈழத்தமிழர்களுக்கு ஆபத்து ஏற்பட்டால் அதனைத் தடுக்கக்கூட முடியாத நிலையைத்தான் ஏற்படுத்தும்.

1995 ஆம் ஆண்டு திருச்சியில் நடைபெற்ற மாநாட்டிலேயே சுதந்திர தமிழ்த் தேச ஈழமே இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வென அறிவித்தோம். இப்போது அனைத்துத் தரப்பினரும் தனி ஈழமே தீர்வு என்கிறார்கள். நோர்வே தூதரான எரிக் சொல்ஹெய்மும் இதனையே அண்மையில் வலியுறுத்தியதோடு, இலங்கையில் தமிழர்களுக்குச் சம உரிமை கிடைக்கப்போவதில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

ஈழத்தமிழர்கள் மீதான அனைத்துத் தாக்குதல் நடவடிக்கைகளையும் தெரிந்தும் கருணாநிதி அதனைத் தடுக்க முயலவில்லை. தற்போது தனி ஈழம் தொடர்பாக மாநாடு நடத்துகிறாராம். இது எதிர்காலத்தில் ஈழத்தமிழர்களுக்கு ஆபத்து ஏற்பட்டால் அதனைத் தடுக்கக்கூட முடியாத நிலையைத்தான் ஏற்படுத்தும்.

ஈழம் தொடர்பாக ஒரு நாள் பொது வாக்கெடுப்பு நடத்தப்படும் சூழல் உருவாகும். இலங்கையில் நடைபெறும் அனைத்தையும் நம்மால் மாற்ற முடியும். அதற்கான வலிமை இளைஞர்களிடம் உள்ளது - என்றார். (வ)

## பீகாரில் பிரணாப்



பிரணாப் முகர்ஜி ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் முதன்முறையாக எதிர்வரும் 125 ஆம் திகதிக்குப் பின்னர் பீகார் மாநிலத்தில் சுற்றுப்பயணம் மேற்கொள்ள உறுதியளித்துள்ளதாக அந்த மாநில முதல்வர் நிதிஷ் குமார் தெரிவித்தார்.

ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரணாப் முகர்ஜியை பீகார் மாநில முதல்வர் நிதிஷ்குமார் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தார். அப்போது செய்தியாளர்களிடம் பேசிய நிதிஷ்குமார் எதிர்வரும் 15 ஆம் திகதி பீகார் மாநிலத்தில் மேற்கொள்ள உள்ள பசுமைப் புரட்சித் திட்டத்தை ஆரம்பித்து வைக்க உள்ளதாகத் தெரிவித்தார்.

## இயல்பு நிலைக்கு அஸாம்

அஸாம் மாநிலம் தற்போது கலவரத்திலிருந்து மீண்டு, இயல்பு நிலைக்குத் திரும்பி வருகின்றது.

அஸாம் மாநிலம் கோக்ரஜாரில் போடா பிரிவினருக்கும் சிறுபான் மையினருக்கும் இடையே ஏற்பட்ட கலவரத்தால் 5 மாவட்டங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன.

இந்தக் கலவரத்தில் 50 பேர் கொல்லப்பட்டனர். 2 லட்சம் பேர் வீடுகளை இழந்து, முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர்.

இந்தநிலையில் நேற்று முன்தினம் கலவரம் குறைந்திருந்தது. கோக்ரஜார், துப்ரி, போடாலாந்து மாவட்டங்களில் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவும் நீக்கப்பட்டு விட்டது. (வ)

# மன்மோகன் வீட்டின் முன் ஹசாரே குழு முற்றுகை



டில்லி ஜந்தர்மந்தரில் உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் அன்னா ஹசாரே குழுவினர், நேற்றுமுன்தினம் ரேஸ் கோர்ஸ் வீதியில் உள்ள பிரதமர் மன்மோகன் சிங் இல்லத்தின் முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஊழலுக்கு எதிராகப் போராட்டம் நடத்துவதாகக்கூறியும், வலுவான லோக்பால் பிரேரணையை நிறைவேற்றக் கோரியும் டில்லி ஜந்தர்மந்தரில் நேற்று முன்தினம் மூன்றாவது நாளாக அன்னா ஹசாரே குழுவினர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வலுவான லோக்பால் பிரேரணையை உடனே நிறைவேற்ற வேண்டும் என்று கோஷம் இட்டுள்ளனர். சிலர் வாயிற்கதவைத் தாண்டி பிரதமரின் இல்லத்தினுள் குதிக்க முயற்சித்துள்ளனர். பின்னர் பொலிஸார் வந்து குழுவினரைத் தடுக்க முயன்ற சமயம், இரு தரப்பினருக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற் பட்டிருக்கிறது. இதனால் மேலும் வீதியில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் அன்னா ஹசாரே குழுவினர்.

இதனால் ரேஸ்கோர்ஸ் வீதியில் பதற்றம் நிலவ, பின்னர் பொலிஸார் நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். (வ)



இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்தோனேஷியா வெளியுறவுத்துறை அமைச்சர் மற்றும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஆகியோர் இடையே தலைநகர் புதுடில்லியில் பல்வேறு ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகின.

## பிரமோஸ் ஏவுகணை வெற்றிகரமாக விண்ணுக்கு



இந்தியா- ரஷ்யாவின் கூட்டுத் தயாரிப்பான பிரம்மோஸ் ஏவுகணை, நேற்றுக் காலை வெற்றிகரமாகப் பரிசோதிக்கப்பட்டது.

இந்த ஏவுகணையை கப்பல், நீர்மூழ்கிக் கப்பல், தரை வழியாகச் செல்லக்கூடிய வாகனங்கள், விமானங்கள் என அனைத்திலும் பொருத்தித் தாக்குதல் நடத்தலாம்.

நேற்றுமுற்பகல் 10.45 மணி அளவில், ஒரிசா மாநிலத்தின் சந்திப்பூர் ஏவுகணைத் தளத்தில் இந்திய இராணுவ மேம்பாட்டு மையம் சார்பாக இந்த ஏவுகணை பரிசோதிக்கப்பட்டது. இந்த ஏவுகணை 9 மீற்றர் நீளம், 3.9 தொன் எடை கொண்டது.

300 கிலோகிராம் எடை கொண்ட எரிபொருளைச் சுமந்து 290 கிலோமீற்றர் தொலைவில் உள்ள இலக்கைத் தாக்கும் திறன் கொண்டது. (வ)

## ஜம்மு – காஷ்மீர் மாநில சம்பா

# பாக். எல்லையில் மர்மக் குகை தீவிரவாதிகளின் ஊடுருவலா?



பாகிஸ்தானிலிருந்து தீவிரவாதிகள் எளிதாக ஊடுருவும் வசதியில் அமைக்கப்பட்ட மர்மக் குகையொன்றை இந்திய எல்லைப் பாதுகாப்புப் படையினர் இனங்கண்டுள்ளனர். இது மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஜம்மு- காஷ்மீர் மாநிலம் சம்பா மாவட்டத்தில் சில்லாயாரி பகுதியில் இந்திய எல்லைப் பாதுகாப்புப் படையினருக்கான முகாம் ஒன்று செயற்பட்டு வருகின்றது.

இங்கு எல்லைப் பாதுகாப்புப் படையினர் ரோந்து சென்றபோது குகையொன்று இருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர். பாகிஸ்தான் எல்லை வரை சென்றதால் தீவிரவாதிகள் ஊடுருவத் தோண்டப்பட்டதாக இருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

அந்தப் பகுதியில் மழை பெய்திருந்ததால், குகைக்குள் செல்ல முடியவில்லை. தண்ணீர் வெளியேற்றப்பட்டதும் எல்லைப்பாதுகாப்புப் படையினர் குகைக்குள் நுழைந்து சோதனை நடத்தினர். இந்தக் குகை பாகிஸ்தான் எல்லையில் ஆரம்பித்து இந்தியா வரை பரவிக்கிடக்கிறது. 3 அடி நீளமும், 3 அடி விட்டமும் உள்ளது. இந்தக் குகை 25 அடி ஆழமும், 400 மீற்றர் நீளம் கொண்டது. (வ)

# ஈரானிலிருந்து கச்சா எண்ணெய் இறக்குமதியை நிறுத்தியது இந்தியா

ஈரானிடம் இருந்து கச்சா எண்ணெய் இறக்குமதியை இந்தியா முழுவதும் தடை செய்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

அணு ஆயுதங்கள் தயாரிப்பு தொடர்பாக அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் ஈரான் மீது பொருளாதாரத் தடைகள் விதித்துள்ளன.

இந்தநிலையில் இந்தியா உட்பட தனது நட்பு நாடுகளிடத்திலும் அமெரிக்கா, ஈரானிடம் எந்தவொரு உறவும் வைத்துக்கொள்ளக்கூடாதெனக் கூறி வருகிறது.

இதன்காரணமாக இந்தியா, கச்சா எண்ணெய் இறக்குமதிக்காக் தற்போது சவூதி அரேபியாவை நாடி வருகிறது. இந்த நிலையில் கப்பல் மூலம் கச்சா எண்ணெயை கொண்டு வர இந்தியா முழுவதும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாகக் கருத்துத் தெரிவித்த மங்களூர் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையின் மேலாண்மை இயக்குநர் உபாத்யா, ஈரானுடன் ஒப்பந்தம் செய்து கொண்டபடி கச்சா எண்ணெயை எங்களால் இறக்குமதி செய்ய முடியவில்லை.

இந்த மாதங்களில் 4 கப்பல்களில் எண்ணெயை இறக்குமதி செய்யவிருந்தோம். ஆனால், இதுவரை ஒரு கப்பலில் மட்டுமே எண்ணெய் வந்துள்ளது.

இறக்குமதி செய்யப்படும் எண்ணெய்க் கப்பலுக்கான போக்குவரத்துச் செலவு, காப்புறுதி ஆகியவற்றை இந்திய அரசு ரத்து செய்து விட்டதே இதற்குக் காரணம் என்றார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளத்தில் பாய்ந்தது ஜீப்

## நேபாளத்தில் 15 பேர் சாவு

**ஓர் இந்தியரும், ஒன்பது பெண்கள், நான்கு குழந்தைகள் உட்பட நேபாளத்தைச் சேர்ந்த 16 பேர் என, மொத்தம் 17 பேர் பயணித்தனர்.**



காத்மாண்டு, ஜூலை 30

நேபாளத்தில், பாதையில் சென்று கொண்டிருந்த ஜீப் ஒன்று திடீரென 300 அடி பள்ளத்தில் விழுந்ததில், இந்தியர் ஒருவர் உட்பட 15 பேர் உயிரிழந்தனர். நேபாளத்தின் மேற்குப் பகுதியில் உள்ளது குல்மி மாவட்டம். இந்த மாவட்டத்தின் ரிடி பகுதியில் இருந்து ரிஷிகேஷ் கோயிலுக்குச் செல்வதற்காக, இந்தியாவைச் சேர்ந்தவரின் ஜீப் ஒன்றை சிலர் வாடகைக்கு எடுத்தனர். அதில், ஓர் இந்தியர், ஒன்பது பெண்கள், நான்கு குழந்தைகள் உட்பட நேபாளத்தைச் சேர்ந்த 16 பேர் என, மொத்தம் 17 பேர் பயணித்தனர். அவர்கள் பல்பா மாவட்டம் ஜோர்டே பகுதியில் செல்லும்போது, ஜீப் திடீரென 300 அடி பள்ளத்தில் கவிழ்ந்தது. இந்த விபத்தில், ஜீப்பில் பயணித்த இந்தியர், நான்கு குழந்தைகள், ஒன்பது பெண்கள் உட்பட 14 பேர் என, மொத்தம் 15 பேர் உயிரிழந்தனர். விபத்தில் படுகாயமடைந்த இருவரை, அருகே உள்ள லும்பினி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. விபத்து நடந்ததும், ஜீப்பில் பயணித்து இறந்தவர்கள் அனைவரும் இந்தியர்கள் எனக் கூறப்பட்டது. ஆனால், பின்னர் ஒரே ஓர் இந்தியர் மட்டுமே இறந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. காத்மாண்டுவில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரிகளும் இதை உறுதி செய்தனர்.

# ஹக்கானியை தீவிரவாதிகளின் பட்டியலில் இணைக்கத் தீர்மானம்

வொஷிங்டன், ஜூலை 30

ஹக்கானி அமைப்பை வெளிநாட்டுத் தீவிரவாத இயக்கமாக அறிவிக்க வேண்டுமென அமெரிக்க நாடாளுமன்ற செனட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஜனாதிபதி பராக் ஒபாமாவின் பார்வைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

தீர்மான அறிக்கையை சட்டமாக்க ஜனாதிபதி உடனடியாகக் கையெழுத்திட வேண்டும் என்று உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஹக்கானி அமைப்பு வெளிநாட்டுத் தீவிரவாத இயக்கமாக அறிவிப்பது குறித்து ஒரு மாத காலத்துக்குள் முடிவெடுக்க வேண்டும். ஒருவேளை தவறும் பட்சத்தில், பாகிஸ்தானைச் சேர்ந்த ஹக்கானி அமைப்பு அமெரிக்காவில் நிதி ஆதாரங்களைத் தொடர்ந்து திரட்டிக் கொள்ள வாய்ப்புள்ளது.

ஹக்கானி அமைப்பு தீவிரவாத இயக்கம் 2012 எனும் சட்டம் நாடாளுமன்றப் பிரதிநிதிகள் சபை உறுப்பினர்களால் இந்த மாதத்தின் தொடக்கத்தில் நிறைவேற்றப்பட்டது.

ஹக்கானி அமைப்பை வெளிநாட்டு தீவிரவாத இயக்கமாக அறிவித்து கடந்த ஆண்டே தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் அதில் சில மாற்றங்களைப் பிரதிநிதிகள் சபை உறுப்பினர்கள் கொண்டு வந்தனர். இதையடுத்து தீர்மானம் மீண்டும் செனட்டில் நிறைவேற்றப்பட்டது.

**ஹக்கானி அமைப்பு வெளிநாட்டுத் தீவிரவாத இயக்கமாக அறிவிப்பது குறித்து ஒரு மாத காலத்துக்குள் முடிவெடுக்க வேண்டும்.**

உளவுத்துறை தேர்வுக் குழுவின் தலைவர் மைக் ரோஜர்ஸ் கூறுகையில், நாடாளுமன்றத்தின் இரு அவை உறுப்பினர்களும் இந்த தீர்மானத்தை ஒரு மனதாக் நிறைவேற்றியுள்ளது தீவிரவாதத்துக்கு எதிராக எடுக்கப்பட்ட ஒரு சிறந்த நடவடிக்கையாகக் கருதப்படுகிறது என்றார்.

ஆப்கனில் உள்ள வெளிநாட்டு ராணுவத்தினர் மீது பல்வேறு தாக்குதல்களை ஹக்கானி அமைப்பினர் நடத்தி வருகின்றனர். அத்துடன் ஆப்கன் ராணுவத்தினரையும் பொதுமக்களையும் கொன்றும் துன்புறுத்தியும் வருகின்றனர்.

ஹக்கானி அமைப்பு மீது சரியான நடவடிக்கை எடுக்க இதுவே சரியான தருணம். வெறும் காகிதத்தில் கொண்டு வரப்பட்டதுடன் நின்று விடக்கூடாது. செயலிலும் காட்ட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

## சிரிய ஜனாதிபதியை பதவி விலக்க வேண்டும்

சிரிய ஜனாதிபதி அசாத்தை அந்தப் பதவியிலிருந்து விலக்க வேண்டுமென அரபு நாடுகளின் தலைவர்களை அமெரிக்கா கோரியுள்ளது.

அசாத் போக வேண்டும். பிராந்தியங்களினதும் நாட்டினதும் பிடியை அவர் இழக்கிறார் என்பதையும் இதைத் தீர்ப்பதற்கு வன்முறை ஒரு வழியல்ல என்பதையும் அவர் உணர வேண்டும். அவர் அதிகாரத்திலிருந்து தானாக விலக வேண்டும் என வொஷிங்டனில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அமெரிக்காவின் பொதுமக்கள் விவகாரத்திற்கான உதவி ராஜாங்க செயலாளர் மைக் ஹம்மர் கூறினார்.

அவரைச் சுற்றியிருப்பவர்கள் இவ்வாறான நடவடிக்கையை மேற்கொள்வதற்குத் தயாராக இல்லாமல் தமது சொந்த மக்களுக்கு எதிராக அதிர்ச்சியூட்டும் குற்றங்களைப் புரிகின்றனர். அவர்கள் அவரைக் கைவிட வேண்டும். அலெப்போவில் நடைபெறும் விடயங்கள் மூலம் இந்த விடயம் எமது மிகுந்த கரிசனைக்குள்ளாகிறது என அவர் தெரிவித்தார்.

# அசாத்தின் ஆட்சி விரைவில் முடிவடையும்

ஒஸ்லோ, ஜூலை, 30

சிரியாவில் ஜனாதிபதி அசாத்தின் ஆட்சி விரைவில் முடிவுக்கு வரும் என்று ஐநா. பார்வையாளர்களின் முன்னாள் தலைவர் றொபேர்ட் மூட் தெரிவித்தார்.

அரசு எதிர்ப்புப் படையினர் மீது அசாத் அரசு தனது ராணுவ பலத்தை முழுவதும் பயன்படுத்தினால் அது வேண்டத்தகாத விளைவுகளை ஏற்படுத்துவதுடன் அப்பாவி மக்கள் மிகுந்த பாதிப்புக்குள்ளாவர் என்றும் அவர் தெரிவித்தார்.

சிரியாவில் தனது பணிக் காலம் முடிந்து கடந்த வாரம் விடுவிக்கப்பட்ட றொபேர்ட் ஒஸ்லோவில் நடந்த கருத்தரங்கில் மேலும் தெரிவித்ததாவது:

சிரியாவில் அசாத்தின் ஆட்சி முடிவுக்கு வந்தாலும், பெரிய அளவில் மாற்றம் வரப்போவதில்லை.

ஒருவேளை, இப்போது ஆட்சியிலிருப்பவர்களே எதிர்காலத்திலும் தொடர்ந்தால் சிரியாவின் நிலைமையை நினைத்துப் பார்க்கவே கடினமாக இருக்கும். இதை நினைக்கையிலே இந்த ஆட்சி கண்டிப்பாக



முடிவுக்கு வரவேண்டும் என்றே தோன்றுகிறது.

இராணுவத்திலிருந்து அதிக அளவிலான அதிகாரிகள் வெளியேறி அரசு எதிர்ப்புப் படையினருடன் இணைந்தால் அசாத்தின் ஆட்சி தூக்கியெறியப்படும்.

சிரியாவில் உள்ள அலெப்போ நகரில் போராட்டக்காரர்கள் மீது இராணுவத்தினர் தாக்குதலை சனிக்கிழமை தொடக்கம் தீவிரப்படுத்தியுள்ளனர் என சிரியாவுக்கான மனித உரிமை கண்காணிப்பு ஆணையம் தெரிவித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து சிரியாவின் தென்மேற்குப் பகுதியிலும் இராணுவ பலத்தை அதிகரித்து வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

போராட்டக்காரர்கள் வசமிருக்கும் சலாஹாதீன் மாவட்டத்தை நோக்கி இராணுவத்தினர் தொடர்ந்து முன்னேறி வருகின்றனர்.

இராணுவத்துக்கும் அரசு எதிர்ப்புப் படையினருக்கும் இடையே பல நகரங்களில் கடுமையான தாக்குதல் நீடித்து வருவதாக சிரியாவில் நடந்து வரும் மனித உரிமை மீறல்களைப் பார்வையிடும் பிரிட்டனைச் சேர்ந்த ரெமி அப்துல் ரஹ்மான் தெரிவித்தார்.

இதற்கிடையில், அரசு எதிர்ப்புப் படையினர் மீது சிரியா இராணுவத்தினர் நடத்தும் தாக்குதலை நிறுத்த வேண்டும் என்று ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ-மூன் வலியுறுத்தியுள்ளார்.

# அதிகம் விற்பனையாகும் ஆடம்பரப் பத்திரிகைகள்

அழகு சாதனங்கள் மற்றும் ஆடம்பரப் பொருள்கள் குறித்த பத்திரிகைகளின் விற்பனை, சீனாவில் அதிகரித்துள்ளது. அழகு சாதனப் பொருள்களை தயாரிப்பவர்களின் விளம்பரங்கள் அதிக அளவு கிடைப்பதால், தற்போது அலங்காரப் பொருள்கள் மற்றும் ஆடம்பரப் பொருள்கள் குறித்த பத்திரிகைகள் பெருகி விட்டன. அமெரிக்கா, பரிட்டன் உள்ளிட்ட மேலை நாடுகளில் மட்டுமே அதிக விலை கொடுத்து வாங்கப்பட்ட, அழகு சாதன மற்றும் ஆடம்பரப் பொருள்கள் குறித்த பத்திரிகைகள், தற்போது சீனாவில் அதிகம் விற்பனையாகின்றன.

மாதம் 80 ஆயிரம் ரூபாய் சம்பாதிக்கும் பெண்கள், இது போன்ற பத்திரிகைகளில் வரும் ஆடம்பரப் பொருள்களை வாங்குவதை கௌரவமாக நினைக்கின்றனர் என, பத்திரிகை வெளியீட்டு நிறுவனத்தினர் தெரிவிக்கின்றனர்.



லண்டன் சென்றுள்ள அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் மனைவி மிச்செல் ஒபாமா பிரிட்டன் இராணுவத் தளபதிகளின் பிள்ளைகளோடு ரெனிஸ் ஆட்டத்தில் ஈடுபடுகின்றார்

# வெளிநாடுகளில் கடற்படை தளங்கள் அமைக்கப்படமாட்டா

## ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

மொஸ்கோ, ஜூலை 30

வெளிநாடுகளில் தமது கடற்படைத் தளங்களை அமைக்க ரஷ்யா திட்டமிட்டுள்ளது என வெளியான தகவலை அந்த நாட்டுப் பாதுகாப்பு அமைச்சு நிராகரித்துள்ளது.

1991 ஆம் ஆண்டு சோவியத் ஒன்றியம் பிளவுபட்ட பின்னர், முதல் முறையாக ரஷ்யா இவ்வாறான கடற்படைத் தளங்களை அமைக்க திட்டமிட்டது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கியூபா, வியட்நாம் உள்ளிட்ட நாடுகளில் கடற்படைத் தளங்களை அமைப்பது குறித்துக் கவனம் செலுத்தியுள்ளதாக ரஷ்ய கடற்படை சிரேஷ்ட அதிகாரியை மேற்கோள்காட்டி செய்திகள் வெளியாகியிருந்தன.

எனினும் சிரேஷ்ட அதிகாரி அவ்வாறான கருத்தொன்றை வெளியிடவில்லை என ரஷ்யப் பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1991 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நிதிப் பற்றாக்குறை காரணமாக வெளிநாடுகளிலுள்ள அநேகமான கடற்படைத் தளங்களை ரஷ்யா மூடியிருந்தது.

2002 ஆம் ஆண்டு வியட்நாமில் இருந்த இராணுவத் தளத்தை ரஷ்யா மூடியதுடன், உக்ரேன் மற்றும் சிரியா ஆகிய நாடுகளில் மாத்திரமே ரஷ்யாவின் படைத் தளங்கள் தற்போது செயற்பட்டு வருகின்றன. அந்த நாடுகளில் ஏற்பட்டிருக்கும் அரசியல் கொந்தளிப்புகளை அடுத்து அதுவும் மூடப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## பாக். புதிய பாதுகாப்புத்துறை செயலர் நியமனம்

இஸ்லாமாபாத், ஜூலை 30

பாகிஸ்தானின் புதிய பாதுகாப்புத் துறைச் செயலாளராக ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி ஆசிப் யாசின் மாலிக் நியமிக்கப்பட்டுள்ளார்.

நர்கீஸ் சேதிக்குப் பதிலாகப் புதிதாகப் பொறுப்பேற்கும் ஆசிப் யாசின் மாலிக், இராணுவத் தலைமைத் தளபதி கயானிக்கு நெருக்கமானவர்.

ஐ.எஸ்.ஐ. தலைவராக கயானி பொறுப்பு வகித்த போது, பெஷாவரில் இருந்து செயல்பட்ட படைப் பிரிவின் தலைவராக ஆசிப் யாசின் மாலிக் பொறுப்பு வகித்தார். ஆசிப் யாசின் மாலிக் நியமனம் குறித்து நேற்றுமுன்தினம் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடைமழையால் வெள்ளம் சீனாவில் 80 பேர் சாவு



சீனாவில் பீஜிங் உள்ளிட்ட சில பகுதிகளில் கடந்த ஒரு வாரமாக பெய்யும் கடும் மழையினால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதில் இதுவரை 80 பேர் உயிரிழந்துள்ளனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன .

சீனாவின் தலைநகர் பீஜிங் மற்றும் சில பகுதிகளில் பெய்த மழையால் அங்கு அணைகள் நிரம்பின. இதனால் அணைகளில் தண்ணீர் திறந்து விடப்பட்டது. பாதைகள் நீரில் மூழ்கின. ஆயிரக்கணக்கான வீடுகள் சேதம் அடைந்தன. இந்த மழை வெள்ளத்துக்கு உயிரிழந்தோர் எண்ணிக்கை 80 ஆக உயர்ந்தது.

மேலும் பலர் காணாமற்போய் தேடப்படுகிறார்கள். தலைநகர் பீஜிங்கைச் சுற்றியுள்ள பகுதிகளில் இன்னும் மழைநீர் தேங்கி நிற்பதால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை ஸ்தம்பித்துள்ளது

## ஐ.நாவின் ஆயுத உடன்படிக்கைப் பேச்சு தோல்வி

ஐக்கிய நாடுகள் சபையின் உலகளாவிய ஆயுத உடன்படிக்கை தொடர்பான பேச்சுவார்த்தை தோல்வியடைந்துள்ளது.

ஆயுத வர்த்தகத்தை ஒழுங்குபடுத்துவது தொடர்பாக ஐ.நாவில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் எந்தவோர் உடன்படிக்கையும் எட்டப்படவில்லை எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த விடயம் குறித்து ஆராய்வதற்கு மேலும் கால அவகாசம் தேவையென அமெரிக்கா, ரஷ்யா, மற்றும் சீனா ஆகிய நாடுகள் குறிப்பிட்டுள்ளன.

இது தொடர்பாக சுமார் ஒரு மாத காலம் தீவிர பேச்சுவார்த்தை நடைபெற்று வந்த நிலையில், இந்த எதிர்மறையான முடிவு எட்டப்பட்டுள்ளது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனினும் ஆயுத வர்த்தகம் குறித்த உடன்படிக்கை இந்த ஆண்டு இறுதிக்குள் எட்டப்படும் என இந்த மாநாட்டின் தலைவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

எனினும் உடன்படிக்கை எட்டப்படாமை குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனும் அதிருப்தி தெரிவித்துள்ளார்.

அரச சார்ப்பற்ற நிறுவனங்களின் சுமார் ஆறு வருட பிரசாரத்தின் பின்னர் இது குறித்த பேச்சுவார்த்தைக்கு இணக்கம் காணப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆண்டொன்றுக்கு 60 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தொடக்கம் 70 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை, உலகளாவிய ஆயுத வர்த்தகம் இடம்பெறுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சட்டவிரோத ஆயுதங்கள் காரணமாக ஆண்டொன்றுக்கு ஏழு இலட்சத்து 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்படுகின்றனர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# நைஜீரியாவில் 2 தீவிரவாதிகள் சுட்டுக்கொலை

அபுஜா, ஜூலை 30

நைஜீரியாவில் 2 இந்தியர்கள் கொல்லப்பட்டது தொடர்பாக போகோ ஹாராம் எனும் இஸ்லாமிய தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்த இருவரை அந்த நாட்டு இராணுவம் சுட்டுக்கொன்றது. 26 தீவிரவாதிகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் வடக்கு மைதுகுரி நகரில் நடந்தது.

இது குறித்து இராணுவ அதிரடிப் படையின் லெப். கேணல் சாகிர் மூசா கூறியதாவது:-

கடந்த வியாழக்கிழமையும் வெள்ளிக்கிழமையும் திடீரென சிறப்பு அதிரடி நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டோம். அதில், இந்தியர்களின் கொலைக்குக் காரணமான 2 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். 26 பேர் கைதுசெய்யப்பட்டனர் என்றார்.

முன்னதாக, கடந்த புதன்கிழமை மைதுகுரி நகரில் உள்ள கம் அராபிக் தொழிற்சாலை மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். அப்போது அங்கு வேலை செய்து வந்த இந்தியாவின் மேற்கு வங்க மாநிலத்தைச் சேர்ந்த சங்கர் சாகா , போகுல் சந்தர் மண்டல் ஆகியோர் தீவிரவாதிகளால் கத்தியால் குத்தப்பட்டு கொல்லப்பட்டனர். பைரேஷ் யாதவ் என்பவர் படுகாயமுற்றார். அவர் மைதுகுரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

# கொலரோடா கொலையாளிக்கு மனநல சிகிச்சைக்கு உத்தரவு



அமெரிக்காவின் கொலரோடோ மாநிலத்தில் உள்ள தியேட்டர் ஒன்றுக்குள் துப்பாக்கிப் பிரயோகம் செய்த சந்தே நபர் மனநல மருத்துவரின் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கொலரோடோப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் பட்டதாரியான குறித்த இளைஞர் நடத்தினார் எனக் கூறப்படும் துப்பாக்கிப் பிரயோகத்தில் 12 பேர் கொல்லப்பட்டதுடன், 58 பேர் காயமடைந்திருந்தனர்.

ஜேம்ஸ் ஏகன் ஒம்ஸ் என்ற 24 வயதான குறித்த நபர் சார்பாக சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவை அடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு விசாரணைகள் தொடர்பாக ஊடகங்களுக்குத் தகவல்கள் வெளியிடுவதற்கு பிரதிவாதித் தரப்பின் சட்டத்தரணிகள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

# இந்து இளைஞர் முஸ்லிமாக மாறும் நிகழ்ச்சி ஒளிபரப்பு

### இதனால் பெரும் பரபரப்பு

இந்து இளைஞர் ஒருவரை முஸ்லிம் மதத்துக்கு மாற்றும் நிகழ்ச்சி, பாகிஸ்தான் தொலைக்காட்சியில் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் வாழும் இந்துக்கள் கட்டாய மதமாற்றம் செய்யப்படுகின்றனர் எனவும், குறிப்பாக இந்துப் பெண்களை கடத்திக் கட்டாய மதமாற்றம் செய்து திருமணம் செய்கின்றனர் எனவும் தொடர்ந்து குற்றச்சாட்டுகள் கூறப்படுகின்றன.

இந்த நிலையில், இந்து இளைஞர் சுனில் என்பவரை முஸ்லிம் மதத்துக்கு மாற்றும் நிகழ்ச்சி ஏ.ஆர்.வை தொலைக்காட்சியில் நேரடி ஒளிரப்புச் செய்யப்பட்டது. இதனால் சிறுபான்மை இந்துக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். இதுகுறித்துப் பாகிஸ்தான் மனித உரிமைப் பணியாளர் அன்சார் பர்னே கூறுகையில், மயா கான் என்பவரும் எனது சகோதரர் சரீம் பர்னேவும் சேர்ந்து, இந்து இளைஞர் சுனிலை முஸ்லிம் மதத்துக்கு மாற்றும் நிகழ்ச்சியை தொலைக்காட்சியில் நேரடியாக நடத்திக் காட்டி உள்ளனர் என்றார்.





உங்கள் முன்னேற்றத்தின் ஊன்றுகோல் எம்மிடம்

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி வழங்கும் நேஷன்ஸ் லீஸிங் சேவையின் மூலம் உங்களுக்கு தேவையான வாகனம் அல்லது இயந்திர உபகரணத்தை குறைந்த கொடுப்பனவு முறையில் துரித கதியில் பெற்றுக்கொள்ளுங்கள்.

தொலைபேசி: (011) 4 218 218

www.nationstrust.com

Nations Trust Bank
Nations Leasing

(சி/1830)(6-8)

**வாடகைக்கு**

மானிப்பாயில் நிறுவனங்கள் பயன்படுத்தக் கூடிய சகலவசதிகளுடன் கூடிய வீடு வடகைக்கு உள்ளது.

(21032)(5-6-7) தொடர்பு: 0776790726, 0772845489

**காணவில்லை**

பண்ணை இல. 41360208 215/9, இராசாவின் தோட்டத்தில் அமைந்துள்ள பண்ணையில் வெள்ளையில் செங்கலர் புள்ளியுடைய பசு J.C.முகம் பார்த்த கொம்புடைய மாட்டை 10 நாள்களாக காணவில்லை. கண்டால் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

(21132)(6-8) தொடர்பு: 077 3359945

**A/L - 2012**

விவசாய விஞ்ஞானம்
முன்னோடிப்பரீட்சையும் கருத்தரங்கும்
காலம் : 01.08.2012 (புதன்)
பி.ப. 1.00
ஆசிரியர் : வை. சசிகுமார்
DMI - JAFFNA

(சி/1776)(5-6-7)

**வீடு விற்பனைக்கு**

மீசாலை, அல்லாரை வீதி J/318 கிராமசேவகர் அலுவலகத்துக்கு அருகில் 5 பரப்புடன் கூடிய 37 அடி வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0779711972

(சி/1739)(5-6-7)

**தார்**

- 80/100, 60/70
- இமல்ஷன் CRSI, CRSII, CSS1
- கட்பெக் MC 30

பெரல், தாங்கி (பவுசர்) ஆகிய வாகனங்களில் பெற்றுக்கொள்ளலாம்

அழையுங்கள்: 072-2235460

BITUMIX (PRIVATE) LIMITED
பிடுமிக்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்
மதவாச்சி சேமிப்பு நிலையம்
மன்னார் றோட், மதவாச்சி.
தொ.பேசி: 025-5621880, பெக்ஸ்: 025-2245278
(சி/1831)(6-8) வெப்: www.bitumix.lk

**வியாபார நிறுவனங்கள் அமைப்பதற்கு பொருத்தமான காணி வாடகைக்கு / குத்தகைக்கு**

சாவகச்சேரி மத்திய பகுதியில் A9 பிரதான வீதி செலான் வங்கி, பிரதேச செயலகம், கூட்டுறவுச் சங்கம் ஆகிய பிரதான ஸ்தாபனங்கள் அடங்கிய எல்லைப் பகுதியில் 5 பரப்பு (13 ஆயிரம் சதுர அடி) காணி குத்தகைக்கு / வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 077 744 1863, 077 154 2137, 077 548 9773

(20702)(45.8.9)


**நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்**

தோற்றம் 24 ★ 04 ★ 1932

மறைவு 01 ★ 07 ★ 2012



அமரர் வேலுப்பிள்ளை மயில்வாகனம்

[இளைப்பாறிய உள்ளூராட்சி வைத்தியர் – புலோலி]

கடந்த 01.07.2012 இறைபதமடைந்த குடும்பத்தலைவரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், சகல வழிகளிலும் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றி களைத் தெரிவிப்பதோடு நாளை (31.07.2012) செவ்வாய்க்கிழமை தென் புலோலியில் புற்றளை சித்தி விநாயகர் ஆலய அந்தியேட்டி மடத்தில் காலை 6.00 மணியளவில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புள்ளங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

வாசுகி தயாபரன் இல்லம்,
திகிரி
புலோலி வடகிழக்கு,
பருத்தித்துறை

குடும்பத்தினர்

(சி/1724)(6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோதனைகள் சாதனைகள் ஆகட்டும்

(10)

ஏற்கனவே ஒரு தொழில் சிறப்பாக நடந்து கொண்டிருந்த நிலையில் படமெடுக்கின்ற ஆசை அவருக்கு வந்திருக்க வேண்டியதே இல்லை. ஏதோ ஒரு ஆர்வத்தில் படமெடுத்தார். படம் தோல்வி அடைந்து கடனாளி ஆனார்.

ஆனால் அதற்காக சோர்ந்து போகாமல் புதிய முயற்சிகளை மேற்கொண்டு, கடனையும் அடைத்து, புதிய தொழிலில் அவர் வெற்றி பெற்றது பாராட்டுக்குரிய விஷயமாகும்.

திரைப்படத்தில் அவருக்கு ஏற்பட்ட தோல்வியை ஒரு சோதனையாகக் கருதலாம், திரைப்படம் தயாரிக்க அவர் முன்



வந்ததே ஒரு சோதனைதான். இது அவராக ஏற்படுத்திக் கொண்டது என்றாலும், புதிய முயற்சி தொடங்குவதையே தவறு என்று சொல்லிவிட முடியாது. ஒரு வேளை சரியாகத் திட்டமிடாததால் அவர் தோல்வி அடைந்திருக்கலாம். அல்லது வேறு காரணங்களும் இருக்கலாம். காரணம் எதுவாயினும் தோல்வி ஏற்பட்டபோதும் அவர் தளர்ச்சி அடையாமல் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. தனக்கு ஏற்பட்ட கடனைக் கண்டு அஞ்சி ஒதுங்கிவிடாமல், புதிய முயற்சிகளை மேற்கொண்டதன் மூலம் சோதனைகளைச் சமாளிக்கும் திறமை தன்னிடம் இருந்ததை நிருபித்துக் கொண்டார்.

சில சமயங்களில் எதிர்பாராத சில சம்பவங்கள் சோதனைகளாக ஆகிவிடுவதும் உண்டு. வேறு சில சந்தர்ப்பங்களில் நாம் தொடங்குகின்ற முயற்சிகளே நமக்குச் சோதனைகள் ஆகிவிடுவதும் உண்டு. சோதனைகள் எந்த விதத்தில் ஏற்பட்டாலும் அவற்றைச் சமாளிக்கின்ற மனோதிடம் நமக்கு இருக்கவேண்டும்.

நெருக்கடிகள் தான் ஒரு மனிதனுடைய உண்மையான திறமைகளை வெளிக் கொண்டு வருகின்றன என்று சொல்வார்கள். இது எந்த அளவுக்கு உண்மை என்று ஆராய்ந்து பார்க்கலாம்.

எல்லாமே சரியாக நடந்தால் புதிய வழிகளைப் பற்றி சிந்திக்க வேண்டிய அவசியம் நமக்கு இருக்காது. அது போகிற போக்கிலேயே நாமும் போய்க் கொண்டிருப்போம். நெருக்கடிகள் தோன்றுகின்ற போது, அவற்றை எப்படி சமாளிப்பது என்பது குறித்து சிந்திக்கத் தொடங்குகிறோம். புதிய யோசனைகள் தோன்றுகின்றன. பின்னர் அந்த யோசனைகள் செயல் வடிவம் பெறுகின்றன. இதன் விளைவாக புதிய சாதனைகளும் பிறக்கின்றன.

ஒவ்வொரு முறையும் சோதனை ஏற்பட்டு அதிலிருந்து மனிதன் மீண்டு வெளிப்படுகின்றபோது புதிய சக்தி படைத்தவனாக வெளிப்படுகிறான். கஷ்டங்களைச் சமாளிக்கின்ற மனஉறுதி படைத்தவனாக மாறி விடுகிறான்.

சோதனைகளின் மூலம் புதுப்புது அனுபவங்களைப் பெறுகிறான். இந்த அனுபவங்கள் எதைச் செய்யலாம், எதைச் செய்யக்கூடாது என்கிற தெளிவை அவனுக்கு உண்டாக்கி விடுகின்றன.

ஆகவே வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் சோதனைகள் மிகமிகத் தேவை. சோதனைகளைக் கண்டு ஓடி ஒழிகிறவன் கோழையாகிவிடுகிறான். சோதனைகளை எதிர் கொண்டு சமாளிக்கிறவன் மேலும் மேலும் துணிச்சலைப் பெறுகிறான். துணிச்சல் உடையவனே வாழ்க்கையில் வெற்றியும் பெறுகிறான்.

தன்னுடைய வாழ்க்கை தோல்வியாக வேண்டுமென்று எந்த மனிதனும் நினைக்கமாட்டான். நீங்களும் அப்படி நினைக்க மாட்டீர்கள். ஆனால் வெற்றி பெற வேண்டும் என்றால் சோதனைகளை எதிர்கொள்ளத் தயாராக இருக்கவேண்டும். அதற்கு நீங்கள் தயாராகிவிட்டால் வெற்றிகள் தாமாகவே உங்களை வந்து சேரும்.

**சோதனைகளைப் பங்குபோட முடியாது!**

நம்முடைய தயக்கத்தையும், கோழைத்தனத்தையும் சோதனைகள் தான் போக்குகின்றன. சோதனைகள் நெருக்கடிகள் ஏற்படும்போது அவற்றைச் சமாளிக்க வேண்டிய கட்டாயம் நமக்கு ஏற்படுகிறது. உடற்கூற்றுப்படி பார்த்தாலும் நெருக்கடிகளை நாம் சந்திக்கின்றபோது, நமது உடலில் உள்ள சுரப்பிகள் துரிதமாக வேலைசெய்து நெருக்கடிகளைச் சமாளிக்கும் சக்தியை நமக்கு அளிக்கின்றன.

உதாரணமாக ஒரு நாய் நம்மை விரட்டும்போது வழக்கமாக ஓடும் வேகத்தை விட அதிக வேகத்துடன் நம்மால் ஓட முடிகிறது. இது வரையில் தாண்ட முடியாத உயரங்களைத் தாண்டி தப்பிக்க முயல்கிறோம். இந்த சக்தி நமக்கு எங்கிருந்து வருகிறது? உடலில் உள்ள சுரப்பிகள் துரிதமாக வேலை செய்து இந்த சக்தியை நமக்குக் கொடுக்கின்றன.

இது போலத்தான் சோதனைகள் ஏற்படுகின்ற போது அவற்றைச் சமாளிக்கின்ற ஆற்றலை நம்மால் பெறமுடியும். ஆனால் சோதனைகளைச் சந்திக்க மனமின்றி நாம் ஒதுங்கி விடுகிறபோது இந்த ஆற்றல் நமக்குக் கிடைக்க வாய்ப்பில்லாமல் போய்விடுகிறது. அதாவது இயற்கையில் நமக்குக் கிடைக்கக்கூடிய ஆற்றலை நாமே தடுத்து விடுகிறோம்.

(தொடரும்)

-பி.சி.கணேசன்-

# சமூக நலனுக்காக தங்களை அர்ப்பணித்தவர்கள் சமூகத்துக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றனர்

## வட்டு. மூளாய் ஐக்கிய நாணய சங்க உறுப்பினர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 30

சமூக நலனுக்காகத் தங்களை அர்ப்பணித்து சேவையாற்றியவர்கள் இறந்தாலும் காலகாலமாக அவர்களின் பணிகள் மதிக்கப்படுவதுடன் தற்கால சமூகத்துக்கு இவர்களின் பணிகள் ஓர் எடுத்துக் காட்டாகவும் விளங்குகின்றன.

கடந்த காலங்களில் அவ்வாறானதொரு சமூகப் பணியை மேற்கொண்டு தன் வாழ் நாளில் சேவையாற்றியவர் கூட்டுறவாளர் சுப்பையா சிவசுப்பிரமணியம் என்று வட்டு மூளாய் ஐக்கிய நாணய சங்க உறுப்பினர் சி.இராமச்சந்திரா தெரிவித்தார்.

சுப்பையா சிவசுப்பிரமணியத்தின் 6 ஆவது மாத நிறைவு நினைவஞ்சலிக் கூட்டம் அண்மையில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு நினைவுரை ஆற்றும் போதே இராமச்சந்திரா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

சமூக நலனுக்காக சேவையாற்றியவர்களது வழிகாட்டல்களைப் பின்பற்றி தற்போதைய பணிகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இது தற்காலத்தின் தேவையாகவும் இருக்கிறது. நாம் எமது நிறுவனங்களில் புதிய நடைமுறைகளைக் கொண்டு வரும் போது பல நன்மை, தீமையான விளைவுகளைச் சந்திக்க நேரிடலாம்.

இதனைத் தவிர்ப்பதற்கு கடந்த காலங்களில் சமூக நலன்களில் பணியாற்றிய சேவையாளர்களின் வழிநடத்தல்களை நாம் ஓரளவேனும் பின்பற்ற வேண்டும்.

இது சமூகப் பணிகளை வழங்கியவர்களுக்கு நாம் செய்யும் கைம்மாறு மட்டுமல்லாது, தற்கால தலைமுறையை வழிநடத்துவதற்கும் உதவுகிறது.

கூட்டுறவாளர் சிவசுப்பிரமணியம் சிறந்த கூட்டுறவாளர் மட்டுமல்லாது, தனது சேவைக்காலத்தில் மக்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு சேவையாற்றி வந்தவரும் ஆவார்.

இவரது வழிகாட்டல்களை நாம் செயற்படுத்த முன்வர வேண்டும். மக்களுக்கு நன்மை தரக்கூடிய பணிகளுக்கு முன்னுரிமை கொடுத்து எமது பணிக்காலத்திலும் நாம் சேவையை வழங்க வேண்டும் - என்றார்.

(எ-14)



நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு இந்து கலாசார திணைக்களம் நாவலர் மணிமண்டபத்தில் நடத்தும் உற்சவ கலை நிகழ்வில் கோண்டாவில் அறநெறிப் பாடசாலை மாணவிகள் நடத்திய வேதபாராயண நிகழ்வில். (எ-7)

## கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்றோர்

யாழ்ப்பாணம், ஜூலை 30

உலக புகைத்தல் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்ட புகையிலைக் கட்டுப்பாட்டுக் குழுவினால் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்றோர் விவரம் வெளியாகியுள்ளது.

இதில் யாழ். வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையைச் சேர்ந்த லக்ஷியா இந்திரேஸ்வரன் (தரம் -13) முதலாம் இடத்தையும், மாதகல் சென். ஜோசப் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த துஜீபா தபேந்திரன் (தரம் -13) இரண்டாம் இடத்தையும், இணுவில் மத்திய கல்லூரியைச் சேர்ந்த தயாளினி குமாரசாமி (தரம் -13) மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர். (எ-14)

# ஆங்கிலப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ்.வலய மட்டத்தில் நடத்தப்பட்ட ஆங்கில தினப் போட்டி முடிவுகள் வருமாறு:-

**உரத்து வாசித்தல்**

**தரம் -5**

முதலாம் இடம், ஹர்சான் அருள்மொழி (யாழ். சென்.பொஸ்கோ வித்தி.), இரண்டாம் இடம், ஆர்த்திகா திருக்குமார் (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை), மூன்றாம் இடம், ஆரணி ஸ்ரீஸ்கந்தராஜா (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை)

**பேச்சுத்திறன் போட்டி**

**தரம்-12**

முதலாம் இடம், கிறிஸ்தோபர் விவேக் வினுசான்ந் (யாழ்.இந்துக் கல்லூரி), இரண்டாம் இடம், பிறைசி ஹன்னா பெனடிற் (சுண்டுக்குழி மகளிர் கல்லூரி), மூன்றாம் இடம், ஜஸ்மிதா கதிர்காமநாதன் (கொக்குவில் இந்துக்கல்லூரி)

**தரம்-13**

முதலாம் இடம், சேவியர் டெனி டிசோன் (யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி)

இரண்டாம் இடம், மேரி செரின் வெலிங்டன் (யாழ்.திருக்குடும்ப கன்னியர் மடம்)

மூன்றாம் இடம், இசினி மதிமான் (கொக்குவில் இந்துக் கல்லூரி)

**முன் தயாரிப்பின்றிப் பேச்சு**

**தரம் -12**

முதலாம் இடம், கீர்த்தனா குமரேஸ்வரன் (யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி)

இரண்டாம் இடம், பிரிகாடிஸ்வரன் குணவரன் (யாழ். இந்துக் கல்லூரி)

மூன்றாம் இடம், ஜேம்ஸன் ஞானபொன்ராஜா ஆபிரகாம் அனோஜன் (யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி)

**தரம்-13**

முதலாம் இடம், நவகுமாரன் கிருதிகன் (யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி)

இரண்டாம் இடம், ரட்ணசிங்கம் பிரணவன் (யாழ். இந்துக் கல்லூரி)

மூன்றாம் இடம், என்.எம்.ரி. ஜோசப்வாஸ்(யாழ். இந்துக்கல்லூரி) (எ-14)

## சிறந்த பேச்சு; இருவருக்குத் தங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 30

வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரியில் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் சிறந்த மொழியாற்றலுடன் சிறப்புப் பேச்சு நடத்திய இருவர் தங்கப்பதக்கம் அணிவித்து கௌரவிக்கப்பட்டனர்.

தமிழ் மொழி மூலமான பேச்சுப் போட்டியில் செல்வி ஜமுனாமலர் துரைராஜாவும், ஆங்கில மொழி மூலமான பேச்சுப் போட்டியில் செல்வன் சு.மனோகரன் பிரபுவும் கௌரவிக்கப்பட்டனர்.

கல்லூரி முதல்வர் நோயல் ஏ.விமலேந்திரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட டாக்டர் கு.சுஜாகரன் இவர்களுக்கான தங்கப்பதக்கத்தை வழங்கிக் கௌரவித்தார். (எ- 50)

# புதிய நிர்வாக சபை உறுப்பினர் தெரிவு

கொழும்புத்துறை, ஜூலை 30

பனை தென்னைவள அபிவிருத்திச் சங்க யாழ்.கொத்தணி கடந்த 20 வருடங்களின் பின் புனரமைப்பு செய்யப்பட்டு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டு புதிய இயக்குநர் சபை தெரிவும் செய்யப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செ. அருந்தவராஜனின் ஆலோசனைக் கமைய கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தலைமையில் இடம்பெற்ற பொதுச் சபைக் கூட்டத்தில் இயக்குநர் சபை தெரிவில் தலைவராக த.சிவலிங்கம், செயலாளர்களாக மா.குணரத்தினம், சி.இ.இரத்தினம் ஆகியோரும் நிர்வாக உறுப்பினர்களாக ஆ.புவனேந்திரம், இ.ஜெ.ஜெயசீலன், மா.குணசிங்கம், தி.யோகரத்தினம் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

(எ-135)

## கமிலஸ் யோண்பிள்ளைக்கு கலாநிதிப் பட்டம்

வடமராட்சி, ஜூலை 30

யாழ்.மறை மாவட்டத்தைச் சேர்ந்த அருட்திரு கமிலஸ் யோண்பிள்ளை அடிகள், பாப்பிறையின் கிறகொரியன் பல்கலைக்கழகத்தில் திருச்சபையின் சட்டத்துறையில் கலாநிதிப் பட்டம் பெற்றுள்ளார்.

சில்லாலையைச் சேர்ந்த அடிகளார் 1983 ஆம் ஆண்டு குருவாக திருநிலைப்படுத்தப்பட்டு கடந்த 18 ஆண்டுகளாக வத்திக்கான் மறைபரப்பு பேராயத்தில் பணி புரிந்து வருகின்றார்.

இறையியலில் கலாநிதிப் பட்டத்தை ஏற்கனவே பெற்றுக் கொண்ட கலாநிதி கமான்சின்யோ கமிலஸ் யோண்பிள்ளை அடிகளுக்கு கடந்த 2003 ஆம் ஆண்டு மொன்சின்யோர் பட்டம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
**தொலைபேசி:**021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731
**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி; 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்ரிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹாரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## நீரோக்களின் ஒளிவர்ணத்தில் நனையும் மாநகரம்

லண்டன் எப்போதும் கொண்டாட்டங்களின் நகராகவே இருந்து வருகின்றது. சூரியன் அஸ்தமிக்காத இராச்சியத் ஜீதக் கொண்டிருந்த ஆதிக்கவாதிகளின் தேசமாக அது ஒரு காலத்தில் இருந்ததால் இன்றைக்கும் தன் வரலாற்று விழுமியங்களைக் கைவிடாமல் கடைப்பிடிக்கின்றது. அந்த நாடு உலகம் முழுவதிலுமிருந்தும் கொள்ளையடித்த செல்வங்களை கொட்டிக் கொண்டாட முன்நிற்கின்றது.

கடந்த சில மாதங்களுக்கு முன் தம் நாட்டு ராஜவம்சத்திற்கு மதிப்பளிக்கும் வகையில் அமைந்த கோலாகலக் கொண்டாட்டங்களை லண்டன் மக்கள் கண்டிருந்தனர்.எலிசபெத் மகாராணியார் 60ஆவது வயதில் தன்னை விளம்பரப்படுத்திக் கொண்டார். அதனை அந்தத் தேசத்து மக்களும் ஆத்மார்த்தமாகக் கொண்டாடியிருந்தனர். லண்டன் மக்கள் தமது நாட்டு வரலாற்று, கலாசார மரபுரிமைகளுக்குக்கொடுக்கும் உயரிய மதிப்பாகவும் இந்தக் கொண்டாட்டம் பார்க்கப்பட்டது.

அந்தக் கொண்டாட்டத்தின் அலங்காரங்கள் லண்டன் மாநகரைவிட்டு அகற்றப்பட முன்னரேயே அடுத்த கொண்டாட்டத்தைத் தொடங்கிவிட்டது அந்த நகர்.

நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஒலிம்பிக், லண்டனை ஒளிவர்ணங்களின் நகராகவும்,பிரமாண்டங்களின் நகராகவும் உலகத்தவர்க்கு விளம்பரப்படுத்திக் கொண்டிருக்கின்றது. உலகத்தில் இருக்கின்ற அனைத்து ஊடகங்களுமே லண்டனை உற்றுப்பார்த்துக் கொண்டிருக்கின்றன.

இந்த ஊடக உற்றுப்பார்வையை கடந்த வருடத்தில் இந்தத் தருணத்திலும் லண்டன் பெற்றிருந்தது. அப்போதும் லண்டன் ஒளிவர்ணங்களால் தான் நிரப்பப்பட்டிருந்தது. அந்த ஒளி இதனைப் போல் அலங்காரப் படுத்தப்பட்டதாக இருக்கவில்லை. அலங்கோலமானவையாக,பார்ப்பவரை அச்சுறுத்துபவையாக இருந்தன. ஏனெனில் அது வறுமைப்பட்ட கலவரக்காரர்கள் மூட்டிய ஒளி. பல நாள்களில் பல முக்கிய கட்டடங்களைப் பற்றியெரிய வைத்தது. சூறையாடல்களும்,கொள்ளையடிப்புக்களும் தற்காலிகமாகவாவது வடக்கு லண்டன் தெருக்களில் பிற நாடுகளிலிருந்து [ஆபிரிக்கா,சீனா, துருக்கி] புலம்பெயர்ந்து வாழும் மக்களின் வயிறுகளை நிரப்பின.அங்கிருக்கின்ற இளைஞர்களின் வேலையில்லாப் பிரச்சினையாலேயே கலவரம் வெடித்தது. டக்கன் என்ற வறுமைப்பட்ட இளைஞனை லண்டன் பொலிஸார் சுட்டுக் கொன்றதையடுத்தே மக்கள் நியாயம் கேட்டுத் தெருக்களில் இறங்கினர். ஆனால் அவர்களின் கிளர்ச்சி நீண்டகாலம் நீடித்திருக்கவும் இல்லை. அவர்கள் முன்வைத்த பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படவுமில்லை. லண்டன் பொலிஸாரின் துப்பாக்கிகளுக்கு முன்னால் கலவரக்காரர்களின் கோசம் மூச்சற்றுப் போனது.

இதற்கு அடுத்ததாக பிரிட்டனில் உயர்கல்வி கற்கும் மாணவர்கள் தமக்கு மறுக்கப்பட்ட சலுகைகளை திருப்பி வழங்கக் கோரி ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்தனர். பொருளாதார சரிவைக் காரணம் காட்டி பிரிட்டன் அரசு உயர்கல்வி கற்கும் மாணவர்களுக்கு வழங்கும் உதவிகளை நிறுத்தியது. கிட்டத்தட்ட வோல்ஸ்ரீட்டுக்கு சமமான போராட்டங்களை அவர்கள் முன்னெடுத்தனர். ஆனால் வோல்ஸ்ரீட்டைப் போலவே இந்தப் போராட்டங்களையும் சர்வதேச ஊடகங்கள் கண்டுகொள்ளவில்லை. அவை லண்டன் காட்டும் கோலாகல மாயங்களை மட்டுமே பிரமாண்டப்படுத்திக் காட்டத் தொடங்கின. அதனால் லண்டனின் மெய்முகம் கவனமற்ற ஒன்றாகிப்போனது. அதன் திரையைக் கிழிக்க எடுக்கப்பட்ட முயற்சிகளும் முற்றிலுமாக அடக்கப்பட்டன.

உண்மையில் இன்று ஐரோப்பிய நாடுகள் எதிர்கொள்ளும் நிதி நெருக்கடியினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள நாடுகளுள் பிரிட்டனும் ஒன்று. அந்த நாடு கிறீஸில் முதலீடு செய்திருந்த அனைத்து நிதி மூலங்களும் திவாலாகிவிட்டன. இதனால் இப்போது லண்டனில் வறுமையும், வேலையில்லாப் பிரச்சினையும் தலைவிரித்தாடுகின்றன. ஆனால் இவை எதையும் அந்த நாட்டு ஆட்சியாளர்கள் கருத்தில் எடுக்கவில்லை. எடுக்கவும் மாட்டார்கள். ஏனெனில் அவர்கள் நீரோ மன்னனின் வாரிசுகளாகவே இன்றும் இருக்கின்றனர்.

# தேர்தல் அரசியலும் நலிந்த ஜனநாயகமும்

■ *தமிழில்: வியெஸ்ரி*

மூலம்- ராவய

> இங்கு வருடா வருடம் ஏதோவொரு தேர்தல் நடத்தப்படுகிறது. ஆட்சியாளர்கள் தமது ஆட்சி மீதான பொதுமக்களது விருப்பை, ஆதரவை எடைபோட்டுக் கணிப்பதற்காக அச்சம் எதுவுமின்றி பொதுமக்கள் முன்செல்கின்றனர். அந்த வகையில் ஆட்சியாளர்களது நிர்வாகம் குறித்த தமது விருப்பு, வெறுப்புக்களை தமது வாக்குகள் மூலம் வெளிப்படுத்தும் வாய்ப்பு பொதுமக்களுக்குக் கிட்டுகிறது. அதனால் பொதுமக்களது ஆதரவு பெற்றவர்கள் அவர்களது பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்படும் வாய்ப்புக் கிட்டுகிறது.

2010 ஆம் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டது. தொடர்ந்து 2011 ஆம் ஆண்டில் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் நடத்தப்பட்டது. எதிர்வரும் 2013 ஆம் ஆண்டில் இடம்பெற வேண்டியிருந்த வடமத்திய, சப்ரகமுவ மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கான மாகாணசபைத் தேர்தலைக் குறிப்பிட்ட காலத்துக்கு ஒரு வருடம் முன்னதாக, எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் நடத்த அரசு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. அந்த வகையில் எதிர்வரும் செப்ரெம்பர் 8 ஆம் திகதியன்று இந்த மூன்று மாகாண சபைகளுக்கான தேர்தல் இடம்பெறவுள்ளது. எதிர்வரும் இரு ஆண்டுகளும் தேர்தல் ஆண்டுகளாக அமையுமென ஊடகத்துறை அமைச்சர் கருத்து வெளியிட்டுள்ளார். இதனடிப்படையில் பார்க்கும் போது இலங்கை ஜனநாயகவாதத்துக்கு மிகப்பொருத்தமானதொரு நாடாகக் கொள்ளத்தக்கது. இங்கு வருடா வருடம் ஏதோவொரு தேர்தல் நடத்தப்படுகிறது. ஆட்சியாளர்கள் தமது ஆட்சி மீதான பொதுமக்களது விருப்பை, ஆதரவை எடைபோட்டுக் கணிப்பதற்காக அச்சம் எதுவுமின்றி பொதுமக்கள் முன்செல்கின்றனர். அந்த வகையில் ஆட்சியாளர்களது நிர்வாகம் குறித்த தமது விருப்பு, வெறுப்புக்களை தமது வாக்குகள் மூலம் வெளிப்படுத்தும் வாய்ப்பு பொதுமக்களுக்குக் கிட்டுகிறது. அதனால் பொதுமக்களது ஆதரவு பெற்றவர்கள் அவர்களது பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்படும் வாய்ப்புக் கிட்டுகிறது.

ஆனால் இந்த நடைமுறையிலுள்ள கவலைதரும் யதார்த்தம் என்னவெனில், இந்த நாட்டில் ஜனநாயக நடைமுறை உரிய முறையில் கைக்கொள்ளப்படுவதில்லை என்பதேயாகும்.

இந்த நாட்டில் ஜனநாயக நடைமுறை உரிய முறையில் கைக்கொள்ளப்படுகிறது எனக் கொள்ளவேண்டுமானால், முதலில் நடத்தப்பட வேண்டியது வடமத்திய, சப்ரகமுவ மற்றும் கிழக்கு மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் அல்ல. உண்மையில் வடமாகாண சபைக்கான தேர்தலே முதலில் நடத்தப்பட வேண்டும். ஜனநாயகவாதம் தொடர்பான உண்மையான பிரச்சினை அங்குதான் உள்ளது. கடந்த முப்பது ஆண்டுகாலப் போரின் இருள் சூழ்ந்த காலகட்டத்தில் அடக்கப்பட்டிருந்த பொது மக்களது உள்ளக் கருத்தை வெளிக்கொணர வேண்டிய தேவை அங்குதான் உள்ளது. தற்போது போர் முடிவடைந்து மூன்று ஆண்டுகாலம் கடந்துவிட்டது. இந்த நிலையில் வடமாகாண பொது மக்களுக்குத் தமது ஜனநாயக விருப்பை வெளிப்படுத்த வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும். அதனோடிணைந்து அவர்கள் தமது மாகாணத்தை நிர்வகிக்க பொருத்தமான தமது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து நிர்வாகத்தை முன்னெடுக்க வைப்பதற்கான வாய்ப்பு வடமாகாணசபைத் தேர்தலை நடத்துவதன் மூலமே வழங்கப்பட இயலும். ஆனால் அரசோ வடமாகாண சபைத் தேர்தலை நடத்த இயலாமைக்குப் பற்பல காரணங்களை, நொண்டிச் சாட்டுக்களை முன்வைத்து வருகிறது. வடபகுதியில் கண்ணிவெடி, மிதிவெடி அகற்றல் செயற்பாடுகள் பூர்த்தியாகாததாலேயே அங்கு தேர்தலை நடத்த [illegible] சமூகத்தால் ஏற்றுக்கொள்ளத்தக்க தொன்றல்ல. வடக்கு மாகாண சபைத் தேர்தல் அடுத்த வருடம் நடத்தப்படவுள்ளதாக ஜனாதிபதி அண்மையில் தெரிவித்திருந்தாலும், அந்த முடிவு இந்தியாவின் அழுத்தம் காரணமானதொன்றே. ஆயினும் இலங்கை அரசு, இந்தியாவுக்கு வழங்கும் வாக்குறுதிகள் ஒருபோதும் நிறைவேற்றப்படாத வாக்குறுதிகளாக அமைவதே வழக்கம்.

நாட்டில் ஜனநாயகம் பேணப்படுவதாகக் கொள்ள வேண்டுமானால் அரசு அடுத்ததாக நிறைவேற்ற வேண்டியதொரு முக்கிய பணி, தேர்தல் ஆணைக்குழு ஒன்றை உருவாக்கி அதனது பொறுப்பில் தேர்தலை நடத்துவதாகும். 2010 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 9 ஆம் திகதியன்று அரசமைப்புக்கான 18 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்ட வேளையில் சுதந்திர ஆணைக்குழுக்களை நியமிப்பதற்கு இருந்த தடைகளை நீக்கி அத்தகைய ஆணைக் குழுக்களை நியமிப்பதை விரைவுபடுத்தும் நோக்கிலேயே 18 ஆவது திருத்தம் நிறைவேற்றப்படுவதாக அரசு தெரிவித்தது. ஆயினும் அரசமைப்புக்கான 18 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டு தற்போது இரு ஆண்டுகள் கழிந்துள்ளன. 2011 ஆம் ஆண்டில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடத்தப்பட்டது. இந்த ஆண்டில் மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நடத்தப்படவுள்ளன. எதிர்வரும் இரு ஆண்டுகளும் தேர்தல்கள் ஆண்டாக அமையுமானால், தேர்தல்களை நடத்துவதற்கான முக்கிய நிறுவனமான தேர்தல்கள் ஆணைக்குழு எதற்காக நியமிக்கப்பட வேண்டும்? தேசிய பொலிஸ் ஆணைக்குழு, லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு, அரசசேவை ஆணைக்குழு என்பவை உருவாக்கப்பட முடிந்திருக்குமானால், மிகுதியான தேர்தல்கள் ஆணைக் குழுவை அரசு நியமிக்காததேன்? அந்தவிதம் தேர்தல்கள் ஆணைக்குழு நியமிக்கப்படுமானால், தேர்தல்கள் தொடர்பான சகல நடவடிக்கைகளும் ஜனநாயக ரீதியிலான செயற்பாடுகளாக அமையுமா என்பதும், தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு சுதந்திரமானதும், நியாயமானதுமான வகையில் தேர்தல்களை நடத்தும் அதிகாரம் கிட்டுமா? என்பதும் சந்தேகத்துக்கு உரியவையே. ஆயினும் ஆகக் குறைந்தது தற்போதைய தேர்தல் ஆணையாளர் முன்னெடுக்கும் சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலுக்கான சவாலை எதிர்கொள்ள தேர்தல் ஆணையாளரால் இயலும் என்பதும் நம்பிக்கை கொள்ளத்தக்க விடயமாகும். தேர்தல்கள் ஆணைக்குழு நியமிக்கப்படாமையின்றும் ஒரு உண்மை புலப்படுகிறது. அது இன்றைய அரசு ஜனநாயக முறையிலான தேர்தல் முறைமைக்கு அஞ்சுவதாகக் கொள்ள முடிகிறது.

நாட்டில் ஜனநாயகம் ஒரு சிறு அளவில் தானும் பேணப்படுவதாகக் காட்டிக்கொள்ளத்தக்க மற்றொரு அரச கைங்கரியம் இடம்பெறவுள்ள கிழக்கு மாகாண சபையின் தேர்தலை நியாயமானதும், சுதந்திரமான விதத்திலும் நடத்திக் காட்டுவதாகும். நாட்டின் சகல முக்கிய அரசியல் கட்சிகளும் தனித்தனியாக கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலில் போட்டியில் இறங்கியுள்ள நிலையில், அங்கு மாகாண சபைத் தேர்தல் நியாயமானதும் சுதந்திரமானதுமாக இடம்பெற வாய்ப்புண்டா என்பது கேள்விக்குரியதொன்றே. அது அரசியல் கட்சிகளுக்கு மட்டுமல்லாது தேர்தல் ஆணையாளருக்குக்கூட சிரமமானதொரு கருமமாக அமையக்கூடும். தற்போதே கிழக்கு மாகாணத்தில் பொதுமக்கள் மத்தியில் அச்சமும் அவநம்பிக்கையும் கலந்ததொரு பதற்ற நிலை உருவாகியுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் தேர்தல் வேட்பாளர் பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருந்த இரு வேட்பாளர்கள் அச்சுறுத்தல்கள் காரணமாக தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து விலகிக் கொண்டுள்ளதாக கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தேர்தலுக்கு இன்னமும் பல நாள்கள் இருக்கும் நிலையிலேயே இத்தகைய சூழ்நிலை நிலவுகிறதானால், தேர்தல் தினம் அண்மிக்கும் வேளையில் நிலைமை பாரதூரமான உக்கிரநிலை அடையக் கூடும் என்பதில் சந்தேகம் கிடையாது.

இத்தகைய கவலைக்கிடமான நிலைமையை நேர்சீர்செய்து அமைதியான சூழலொன்றை உருவாக்க வேண்டிய பொறுப்பு அரசைச் சேர்ந்ததே. நீதியை நிலை நாட்ட வேண்டிய, பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசுக்குரியதே. அது பக்கச்சார்பான விதத்தில் அமையாதிருப்பதை உறுதிப்படுத்த வேண்டிய தலையாய பொறுப்பும் அரசுக்குரியதொன்றே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்தி அருகி வரும் ஆபத்து

- உலகம் முழுவதும் மாற்று சக்திச் வளத்தைப் பயன்படுத்துதல் பற்றிய கதையாடல்கள் தொடர்ந்த வண்ணம் இருக்கின்றன.
- இதுவரை மனிதன் பயன்படுத்திய அனல், எரிபொருள், அணுசக்திகளினால் ஓசோன் படலம் மோசமான பாதிப்பை எதிர்நோக்கியுள்ளது.
- காபன் தாக்கம் புவியை அரிக்கத் தொடங்கியுள்ளதாக விஞ்ஞானிகள் எச்சரிக்கின்றனர்.
- அடுத்த சந்ததிக்கு உயிர்வாழும் சூழலை வழங்க சக்தியால் மட்டுமே முடியும்.
- அதனை வழங்கவே டபிள்யூ. டபிள்யூ. எஸ். மாற்று சக்தி பிறப்பிக்கும் திட்டம் முன்மொழியப்படுகின்றது.



பீ.ஏ அந்தோனிமார்க்

சக்தி (Energy) வளங்களை உற்பத்தி செய்வதற்கான தொழில்நுட்ப முறைகள் மிகவும் அவசியம்.

எரிபொருள்களின் அதிகூடிய விலையேற்றத்தினால் இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி பாதிக்கப்பட்டதுடன் சாதாரண மக்களின் தொழில்களும் பாதிக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக வறுமை அதிகரித்துள்ளது. இதை நிவர்த்தி செய்யும் பொறுப்பு மக்களையும் அரசையும் சார்ந்ததாகும்.

2010 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் இந்தியாவில் நடைபெற்ற தொடர்ந்து "இருக்கக்கூடிய நிலையான சக்தியை புதுப்பித்தல்" என்னும் தலைப்பில் நடந்த கருத்தரங்கில் இது சம்பந்தமான விவாதங்கள் முன்னெடுக்கப்பட்டன. இலங்கையின் சக்தி எரிபொருள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க இதில் பங்கு கொண்டார். உலகம் முழுவதிலிருந்தும் இதனுடன் சம்பந்தப்பட்ட அறிஞர்கள் பலரும் பங்குபற்றினார்கள். அவிணாஸ் சன்ரா, சக்தி குறைபாட்டினால் எதிர்காலத்தில் வரப்போகும் ஆபத்தைப் பற்றி விளங்கப்படுத்தினார். 2010 ஆம் ஆண்டு உலகத்தில் பாவிக்கப்பட்ட மின்சாரம் 13.6 திரில்லியன் வோல்ட் (Trillion walts) - 2009 ஆம் ஆண்டு பாவிக்கப்பட்ட மின்சாரம் 12.5 திரில்லியன் வோல்ட் ஆகும். ஆனால் தற்போது உலகத்தில் அதிகரித்து வரும் பொருளாதார அபிவிருத்திக்கு ஏற்ப 2050 ஆம் ஆண்டுக்கு முன்பு 30 திரில்லியன் வோல்ட் மின்சாரம் தேவை. ஆனாலும் இந்தச் செயல்திட்டத்தை நடைமுறைப்படுத்த மேலதிகமாக 16 திரில்லியன் தேவை எனவும் கலாநிதி அவிணாஸ் சன்ரா குறிப்பிட்டார். வேறு மாதிரிக்கூறுவோமாக இருந்தால் உலகத்தில் ஒவ்வொரு நாளும் மின்சாரம் தேவையாயிருந்தால் 1000 மெகாவட் மின்சாரம் வழங்கக்கூடிய மின்சார இயந்திரம் பாவிக்கவேண்டும். கலாநிதி அவிணாஸ் சன்ரா மேலும் குறிப்பிடுகையில், தற்போதுள்ள மின்சார வளங்களின் மூலம் எரிபொருள், வாயு, நிலக்கரி, நியூக்கிளியர், நீர் மின்சாரம் மூலம் 06 திரில்லியன் வோல்ட் மின்சாரத்தை உற்பத்தி செய்யமுடியும். ஆனால் 2040இல் உலகத்தின் மின்சாரம் 16 திரில்லியன் வோல்ட் தேவைப்படும். இந்தப் பற்றாக்குறையை எப்படி நிவர்த்தி செய்யமுடியும் என்ற வினாவுக்கு அந்தக் கருத்தரங்கில் யாரும் பதில் கூறவில்லை. ஆனால் 2030ஆம் ஆண்டில் 16 திரில்லியன் மின்சாரம் தேவைப்படும். அதேநேரம் உலகத்தில் மின்சாரம் வழங்கும் சகல வளங்களும் குறைந்துபோய் இருக்கும் எனவும் குறிப்பிட்டார். இலங்கை அமைச்சர் சம்பிக்க ரணவக்க அவர்களின் கூற்றுப்படி அடுத்த 20ஆண்டுகளுக்குள் தற்போது கிடைக்கும் மின்சாரத்துக்கான வளங்களை உற்பத்தி செய்வதற்கான தொழில்நுட்ப முறைகளைக் கண்டுபிடித்து நடைமுறைப்படுத்தாவிட்டால் எரிபொருள்களின் விலை வானளவாக உயர்ந்து விடும். இதனால் உலக நாடுகளுக்கிடையில் எரிபொருள், வாயு, நிலக்கரி போன்றவற்றுக்கான போர்களும் ஏற்படக்கூடும்.

அடுத்ததாக உள்ள பெரிய பிரச்சினை சுற்றாடல் ஆகும். உலகம் கூடிய வெப்பமடைவதனால் மிகவும் ஆபத்தான காலநிலைக்கு முகம்கொடுக்க வேண்டிவரும். எரிபொருள் பாவனையினால் வெளியாகும் காபன் வாயுவினால் காலநிலையில் மிகப் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டு அனர்த்தங்கள் உண்டாகும். இலங்கையில் தற்போது மே மாதங்களிலும், ஐப்பசி தொடக்கம் மார்கழி மாதங்களிலும் வெள்ளம் ஏற்படுவதை அவதானிக்கலாம். ஆஸ்திரேலியாவிலுள்ள குவின்ஸ்லாண்ட் போன்ற இடங்களில் வருடம் முழுவதும் எதிர்பாராத நேரங்களிலும் வெள்ளத்தையும், பனிக்கட்டிகள் விழுவதை[illegible]யும் காணலாம். அதேபோன்று ஐரோப்பாவிலும், வட அமெரிக்காவிலும் காலநிலை மாற்றம் நாளாந்த வேலைகளுக்கு இடையூறாக உள்ளது. இன்றைய நிலையில் உலகத்தில் கடும் உஷ்ணமும் வரட்சியும் ஏற்பட்டு வருகின்றது. உலகத்தில் இன்று வாகனங்களினாலும், தொழிற்சாலைகளிலும் ஏற்படுகின்ற அசுத்தமான வாயுக்களினால் சுற்றாடல் மாசுபடுவதுடன் நோய்களும் ஏற்படுகின்றன. ஏற்கனவே உலகத்தில் நடந்த பல சக்தி, மின்சாரம் சம்பந்தான மாநாடுகளில் பல எச்சரிக்கைகள் கொடுக்கப்பட்டும், காபன் வாயு வெளியேற்றம் அபிவிருத்தி அடைந்த நாடுகளிலும், அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளிலும் மிகவும் அதிகரித்து வருகின்றது. எவ்வளவு புரிந்துணர்வுகளும் அறிவுரைகளும் வழங்கினாலும் மாற்றம் ஒன்றையும் காணவில்லை. காபன் வெளியேற்றம் உலகில் அதிகரித்துக் கொண்டே போகின்றது. அனைவரும் எப்படியாவது தமது மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்துகொள்ளும் நோக்கத்தை மட்டும் வைத்துள்ளனரே தவிர, வரப்போகும் அதிவெப்பமடைதல், வளிமண்டலத்தில் காபன் அதிகரித்தல், ஓசோன் படலம் பாதிப்படைதல் போன்ற பெரிய ஆபத்தை எண்ணிப் பார்ப்பார் யாரும் இல்லை. சக்தி வழங்கும் வளங்களுக்காக நாடுகளுக்கிடையிலான போட்டியும், காலநிலை மாற்றமும் எதிர்காலத்தில் பெரிய ஆபத்தை ஏற்படுத்தக் கூடும். 2008 ஆம் ஆண்டு போலாந்து நாட்டுப் பொஸ்ணான் நகரில் நடைபெற்ற ஐ.நா. காலநிலை மாநாட்டில், முந்திய அமெரிக்க உப ஜனாதிபதி திரு அல்கோர் அவர்கள் அமெரிக்காவில் 10 வருடத்துக்குள் 100 வீதம் காபன் இல்லாத மின்சாரத்தை வழங்குவேன் எனப் பிரகடனம் செய்தார். அதேபோன்று 2009 இல் கொபன்ஹேகனில் நடைபெற்ற காலநிலை சம்பந்தமான மாநாட்டிலும் இந்த [illegible] [illegible] ஸ்டான்வோட் கலாசாலை கலாநிதி மார்க் யாக்கோப்சன் மற்றும் கலாநிதி எம்.ஏ.டி. லூச்சி அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின்படி பெரிய செயற்திட்டம் ஒன்று தீட்டப்பட்டிருந்தது. அதன்படி உலக சக்தித் தேவையைப் பூர்த்திசெய்ய காற்று, நீர், சூரியஒளி (Wind, Wates and Solar) போன்றவற்றினை பயன்படுத்த முடியும் எனவும் குறிப்பிடப்பட்டது. இதனை டபிள்யூ.டபிள்யூ.எஸ் செயற்திட்டம் என குறிப்பிடுகின்றனர்.

உண்மையில் உலகத்தின் இப்போதைய முக்கியமான தேவை, காபன் வெளியேறுவதைத் தடைசெய்தலாகும். இது சம்பந்தமான பல நாடுகளின் ஆராய்ச்சி அறிக்கைகள் வெளிவந்துள்ளன. டபிள்யூ.டபிள்யூ.எஸ் முறையில் காற்று, நீர், சூரியஒளி போன்றவற்றைப் பாவித்துத் தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்து, சகல தொழில்களையும் நடத்த முடியுமென அறிவிக்கப்படுகிறது. எரிபொருள்கள் மூலம் உஷ்ணமாக்கும் வஸ்துக்களான அடுப்புக்களுக்கும் மற்றும் தேவைகளுக்குப் பதிலாக மின்சாரம் மூலம் ஓடும் வாகனங்களைப் பற்றறி (Battery) மூலமும், எரிபொருள் அணு மின்கலம் பாவிப்பதன் மூலமும் இயங்கவைக்க முடியும். டபிள்யூ.டபிள்யூ.எஸ் மின்சாரத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட ஜலவாயு தண்ணீரைப் பிரித்து எரிபொருள் அணு மின்கலம் மூலம், ஆகாய விமானங்களையும், கப்பல்களையும் அத்துடன் தொழிற்சாலையின் இயந்திரங்களையும் இயக்க முடியுமெனக் கூறப்படுகிறது.

மேலும் 2030ஆம் ஆண்டுக்குத் தேவையான மின்சாரம் 17 திரில்லியன் வோல்ட் ஆகும். ஆனால் எரிபொருள் பாவிக்காமல் டபிள்யூ.டபிள்யூ.எஸ் பாவனையின் மூலம் 15.5 திரில்லியன் வோல்ட் ஆகக் குறைக்கலாம். இதன் மூலம் பெரிய சேமிப்பை ஏற்படுத்தலாம். தற்போதுள்ள தரவுகளின்படி உலகில் கிடைக்கக் கூடிய டபிள்யூ.டபிள்யூ.எஸ் பின்வருமாறு:-

தண்ணீர் ( Water) 2 திரில்லியன் வோல்ட், காற்று (Wind) 40-85 திரில்லியன் வோல்ட், சூரியஒளி (Solar) 580 திரில்லியன் வோல்ட்.

ஆனால் டபிள்யூ.டபிள்யூ.எஸ் தொழில்நுட்ப அலகின்படி நாம் 1/100 வீதம் மட்டும்தான் பாவிக்கிறோம். மிகுதியை எரிபொருள் பாவிப்பினால்தான் பெறுகிறோம். நமக்குத் தேவையான மின்சாரத்தை இந்த டபிள்யூ.டபிள்யூ.எஸ் அலகின்படி பெறுவது ஒரு பெரிய சவாலாகும். 1950 ஆம் ஆண்டுத் தேவையை கணக்கிடுவோமாக இருந்தால் அது 30 திரில்லியன் வோல்ட் ஆகும். ஆனால் இன்று டபிள்யூ.டபிள்யூ.எஸ் தொழில்நுட்பத்தின் மூலம் ஒரு பெரிய செயற்திட்டத்தை ஆரம்பிக்க முடியாதா?

ஐரோப்பிய நாடுகள் இன்று 73 மில்லியன் கார்களையும், சிறியதர லொறிகளையும் வருடா வருடம் உற்பத்தி செய்கிறன. இப்படியான நிலையில் 3.8 மில்லியன் பெரிய காற்று (Turbines) வேகத்தில் இயங்கும் சக்கரத்தை அமைத்து, அதன் மூலம் கைத்தொழில் சம்பந்தமான இயந்திரங்கள் மூலம் டபிள்யூ.டபிள்யூ.எஸ் செயற்திட்ட முறையில் மின் உற்பத்தியைப் பெருக்க முடியாதா? இந்த இலக்கை 2030 ஆம் ஆண்டு அடைய முடியாதா? ஆனால் உண்மையில் இதற்குப் பெருந்தொகையான பணம் தேவைப்படும். 100 திரில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படும்.

இதன் மூலம் காபன் வெளியேற்றத்தால் ஏற்படும் சுற்றாடல் அழிவை நிவர்த்தி செய்யலாம். உண்மையில் எரிபொருள் பாவிப்பதன் மூலம் நிலையான சக்தியை பெறமுடியும். ஆனால் அது காபனை வெளியேற்றி சுற்றாடலை மாசடையச் செய்யும். ஆகவே டபிள்யூ.டபிள்யூ.எஸ் முறையில் சக்தியைப் பற்றறி வங்கியில் சேமித்து வைக்கும் தொழில்நுட்ப முறையை விரிவுபடுத்த வேண்டும்.

இதில் நமது நாட்டு நிலை என்ன? நாம் மிகவும் குறைந்த விலையில் சக்தியைப் பெற விரும்புகிறோம். அதற்காக நீண்ட காலத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. எப்படியாயினும் சுற்றாடலுடன் ஒன்றிணைந்து இதைச் செயற்படுத்த வேண்டும். இதைக் குறுகிய காலத்தில் எட்டவேண்டும் என்று விரும்பினால் எமது எதிர்கால சந்ததியினர் எரிபொருள்கள் மூலம் தயாரிக்கும் சக்தியை நிறுத்தி காற்று, நீர், சூரியசக்தி மூலம் புதுப்பிக்கப்பட்ட சக்தியைத் தயாரித்து மக்கள் பலனடையச் செய்ய வேண்டும். இன்று நமக்குத் தேவையான மொத்த சக்தி 2200 மெகாவட் ஆகும். ஆனால் 2030ஆம் ஆண்டளவில் 8000 மெகாவட் மின்சாரம் தேவைப்படும். நமது நாட்டின் தற்போதைய மின்சார நிலைமை கீழ்வருமாறு:-

நீரும் நீர் வீழ்ச்சிகள் மூலம் 51 வீதம், அனல், எரிபொருள் மின்சாரம் மூலம் 48வீதம், காற்று மூலம் (காற்றாடி) 0.1வீதம், ஏனையவை 0.9வீதம் ஆக இருக்கின்றது. நாம் வாகனங்களின் போக்குவரத்துக்கும், விளக்கேற்றலுக்கும், இயந்திரங்களை இயங்க வைப்பதற்கும், சமைப்பதற்கும் எரிபொருளைத்தான் பாவிக்கிறோம். எரிபொருளின் விலை மிகவும் அதிகரித்துள்ளது. இலங்கை அரசு 2006 ஆம் ஆண்டில் 215 பில்லியனுக்கு எரிபொருள் இறக்குமதி செய்துள்ளது. 2011 ஆம் ஆண்டு 400 பில்லியனுக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இதற்கு ஒரு மாற்று மருந்து தேவை. அதற்கு காற்றாடி மூலமான மின்சாரம், சூரியஒளி மின்சாரம் (Solar), நீர்வீழ்ச்சி மின்சாரம் போன்றவற்றைப் பயன்படுத்தலாம். சுற்றாடலுக்குப் பாதகமான எரிபொருள் மின்சாரம், அனல் மின்சாரம் போன்றவற்றைத் தடைசெய்ய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூரானின் 5 ஆம் நாள் வீதி உலாக் காட்சி

Vivekananda Academy
221, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
Tel- 0212220393, 0213216928,
0774842464

## ஆறு தலை முருகா! ஆறுதலை அளிப்பாய்

எழில் சேர் நல்லையம்
பதியிலுறை நல்லைக் கந்தா
ஏற்றங்கள் பல பெற்ற
செல்வக் கந்தா!
எண்ணற்ற அடியவர்கள்
உனை வணங்கிட
ஏங்கித் தவிக்கின்றனர்
நல்லைக் கந்தா!
சொல்லற்ற துயரங்களை
பெற்ற அடியார்கள்
சொல்லி அழ வருகின்றனர்
நல்லைக் கந்தா!
அல்லலுற்ற துயரங்கள் பறந்து
ஓடிட ஆறு தலை முருகா
ஆறுதலை அளிப்பாய்
நல்லைக் கந்தா!



**சொ.தர்மகுலசிங்கம்,**
**நாயன்மார்க்கட்டு.**

## நல்லூர் கந்தா முருகா

அழகான மயில் மீது ஏறிவரவேண்டும் முருகா!
ஆறுபடை வீடு கொண்ட ஞான பண்டிதா!
சூரன் போர் புரிந்தாய் சூரன் உடலைக் கிழித்தாய் ஏந்தலே!
வேல் ஏந்தும் ஆறுமுகா வா வள்ளி தெய்வானையுடன்
அழகான மயில் மீது வரவேண்டும்! கந்தனே!
ஐங்கரனின் தம்பியே அபயமளிக்க வா குகனே!!!

**க.பரணீதரன்.**





## தெய்வீக இசையரங்கில்...

நல்லூர் திருவிழாவை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலயத்தின் அனுசரணையுடன் நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கின் ஏழாம் நாள் நிகழ்வு மாலை 6.45 மணிக்கு நல்லூர் துர்க்காதேவி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் திருமதி. கு.உமாகாந்தன், கே.பத்மநாதன், எஸ்.துரைராசா, ஏ.செல்வரத்தினம் ஆகியோர் இணைந்து நடத்தும் கச்சேரி இடம்பெறும்.




# 5 அடுக்கு ராஜகோபுரத்தை உடைய திருக்கேதீச்சரம்

*(கடந்தவாரத் தொடர்ச்சி)*



போர்த்துக்கேயர் ஆலயத்தை அழிக்கத் திட்டமிட்டதை அறிந்த மக்கள் ஆலயத்தின் முக்கியமான பொருள்களை எடுத்துக் கொண்டு காட்டு மார்க்கமாகச் செல்லும் வழியில் தற்போது மடுமாதா கோயிலுள்ள அடர்ந்த காட்டுப் பகுதியில் சிறு கிராமத்தில் தங்கினர்.

பின்னர் அவ்விடத்தில் சிறு கோயிலொன்றை அமைத்து, திருக்கேதீச்சரம் ஆலயம் இருந்ததாகக் கருதப்பட்ட பிரதேசத்தில், 1894ஆம் ஆண்டு பூமியை அகழ்ந்த போது அம்மன் திருவுருவம் கிடைக்காது ஏனைய பல திருவுருவங்கள் கிடைத்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்துக்களால் வணங்கப்பட்ட ஆலயங்கள் அனைத்தும் அழிக்கப்பட்டு, அவ்விடத்தில் கிறிஸ்தவ ஆலயங்களை எழுப்புவதும், இந்துக்களைக் கிறிஸ்தவர்களாக மதமாற்றம் செய்வதும் தமது தலையாயபணி எனப் போத்துக்கேயர் கருத்தில் கொண்டு செயற்பட்டமையை, இலங்கையின் வரலாற்றிலே தெளிவாகக் காணலாம்.

திருக்கேதீச்சரம் ஆலயத்துள் நுழைந்த போத்துக்கேயர், பெறுமதிமிக்க ஆபரணங்களையும், பொருள்களையும் கொள்ளையடித்து, சிலைகளையும், திருவுருவங்களையும் உடைத்து நாசம் செய்தனர். திருக்கோயில், மதில், கோபுரம் ஆகியவற்றைப் பீரங்கியால் தாக்கி அழித்தனர். கோயிலை உடைத்த கருங்கற்களைக் கொண்டு மன்னர் துறை முகத்தைக் கட்டினர்.

இதன் பின்னர் ஏற்பட்ட மண்மாரியால் கோயிலின் எஞ்சியிருந்த பகுதிகளும் மண்ணால் மூடப்பட்டு, இந்தப் பகுதி அடர்ந்த காடாக மாறியது. இந்நிலையில், 1926ஆம் ஆண்டிலும், 1949ஆம் ஆண்டிலும் இப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட புதைபொருள் ஆய்வின் பயனாகப் பல அரிய தகவல்கள் கிடைத்தன. புதைந்த பிரதேசத்திலிருந்து மனித எலும்புக்கூடுகள், மட்பாண்டங்கள் மற்றும் பல பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவ்வாய்வுகள் இன்றும் தொடர்கின்றன.

போத்துக்கேயரால் அழிக்கப்பட்ட பின்பு, சுமார் மூன்று நூற்றாண்டுகளாகத் திருக்கேதீச்சரம் ஆலயமும், மாதோட்டநகரும் மக்களறியாத, மக்களால் மறக்கப்பட்ட இடமாக மாறியிருந்தது. காலநியதிப்படி, பூமிமாதாவின் மடியில் துயில்கொண்ட திருவுருவங்கள், மீண்டும் வெளிவரத் தூண்டுகோலாக இருந்தவர், யாழ்ப்பாணத்து ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர். இவருடைய எண்ணத்தில், இங்கு மறைந்திருந்த திருக்கோயிலின் சிந்தனைகள் எவ்வாறோ எழ ஆரம்பித்தன. மாதோட்டத்தைப் பற்றியும், திருக்கேதீச்சரம் ஆலயத்தைப் பற்றியும் தெரிவித்து,

கி.பி 1872ஆம் ஆண்டு, 'யாழ்ப்பாணச் சமயநிலை' என்று நாவலர் வெளியிட்ட பிரசுரம், மக்களை விழிப்படையச் செய்தது. சம்பந்தர், சுந்தரரால் திருக்கேதீச்சரத்தின் மீது பாடப்பட்ட பதிகங்களே இவ்வாலயத்தை மீண்டும் பழையநிலைக்குக் கொண்டுவரும் எண்ணத்தை இவருக்கு அளித்திருக்க வேண்டும். இவருக்கு இவ்வாறான எண்ணம் ஏற்பட்டதைத் தெய்வசங்கல்பம் என்று கூறுவதே பொருந்தும்.

ஆலயம் இருந்ததாகக் கருதப்பட்ட, காடுமூடிய பிரதேசத்தை விலைக்கு வாங்கி, திருக்கேதீச்சரத்தானுக்குப் புதுக்கோயில் அமைத்து, நித்திய நைமித்திய பூசைகள் நடத்த வேண்டுமென்பது இவர் எண்ணமாகக் காணப்பட்டது. அன்றைய அரசியல் நிலை, இவர் எண்ணம் நிறைவேற முட்டுக்கட்டையாயிருந்தது. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் இவ்வுலகை நீத்த 14ஆண்டுகளின் பின்பு, நாவலரின் எண்ணம் நிறைவேறியது. கி.பி 1893ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 13ஆம் திகதி, கோயில் இருந்து மறைந்ததாகக் கருதப்பட்ட 40 ஏக்கர் நிலத்தையும் 3100 ரூபாவிற்கு மு.பழனியப்பச் செட்டியார் இலங்கைச் சைவமக்கள் சார்பாக, ஏலத்தில் வாங்கினார். அக்காலத்தில் வடமாகாண அரசப் பிரதிநிதியாயிருந்த சேர் வில்லியம் துவைனம் தமது ஆண்டறிக்கையில் திருக்கேதீச்சரத்தின் பண்டைய சிறப்புக்களையும், நிலம் ஏலம் விடப்பட்டதைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

கோயில் பணிகளை ஆரம்பிப்பதில் முன்னின்று உழைத்தவர்களுள் குறிப்பிடத்தக்கவர், யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த மு.பசுபதிச்செட்டியார் இவரோடு இணைந்து பல சைவப்பெரியார்கள் ஆலயப் பணியில் முன்னின்றுழைத்துள்ளனர்.

இவர்களுடைய முயற்சியினால் கி.பி 1894ஆம் ஆண்டு காடுகளை வெட்டும்போது, நிலத்துள் புதைந்துள்ள திருவுருவங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

பழைய கோயிலின் மூலஸ்தானம், அர்த்தமண்டபம், துவசத்தம்பபீடம், பலிபீடம் ஆகியவற்றோடு சோழர்கள் கட்டிய கேணியின் அடையாளங்களும் கண்டுபிடிக்கப்பட்டது.

சிவலிங்கம், நந்தி, விநாயகர் கற்சிலைகளும், ஆலயத்தில் பாவிக்கப்படும். தட்டங்கள் போன்ற பொருள்களும் கண்டுபிடிக்கப்பட்டன. அகழ்ந்தெடுக்கும்பொழுது சிவலிங்கம் பின்னப்பட்டதால், அதனை மூலநாதராக வைக்காது, பின்புறமுள்ள மண்டபத்தில் பிரதிட்டை செய்தனர். காசி வாரணாசியிலிருந்து தருவிக்கப்பட்ட காசிலிங்கத்தை மூலஸ்தானத்தில் பிரதிட்டை செய்தனர்.

### லெம்பேட்

“போத்துக்கேயரால் அழிக்கப்பட்ட
பின்பு, சுமார் மூன்று
நூற்றாண்டுகளாகத் திருக்கேதீச்சரம்
ஆலயமும், மாதோட்டநகரும்
மக்களறியாத, மக்களால்
மறக்கப்பட்ட இடமாக மாறியிருந்தது.
காலநியதிப்படி, பூமிமாதாவின்
மடியில் துயில்கொண்ட
திருவுருவங்கள், மீண்டும் வெளிவரத்
தூண்டுகோலாக இருந்தவர்,
யாழ்ப்பாணத்து ஸ்ரீலஸ்ரீ
ஆறுமுகநாவலர்

புதிதாக வடிக்கப்பட்ட கௌரி அம்பாள் திருவுருவமும் பிரதிட்டை செய்யப்பட்டது. திருப்பணிகள் ஓரளவு நிறைவேறி, 1903ஆம் ஆண்டு யூன் மாதம் 28 ஆம் திகதி மகாகும்பாபிசேகம் நடைபெற்றது.

பின்னர் மேலும் சில திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டு, கி.பி 1910ஆம் ஆண்டு மற்றுமொரு கும்பாபிசேகம் நடைபெற்றது. இதன்பின் மிகப் புகழ்பெற்ற ஆலயமாகத் திருக்கேதீச்சரம் திகழ்ந்தது. எனினும் நாளடைவில் திருப்பணிகள் நடைபெறாது ஆலயம் அழியத் தொடங்கியது.

இதனைக் கண்ணுற்ற சைவப்பெருமக்கள் பலர் ஒன்றுசேர்ந்து 1944ஆம் ஆண்டு 'ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டம்' என்ற சமய அமைப்பை ஏற்படுத்தினர். இவர்களுள் திரு.கா.நாகலிங்கம், வ.க.செல்லப்பா, ஸ்ரீ சி.சரவணமுத்து அடிகளார் மற்றும் நீ.ஆறுமுகம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் பெருமுயற்சியால் 1948ஆம் ஆண்டு சைவமாநாடொன்று நடைபெற்றது. இதன் மூலம் சைவ மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இதன் அடிப்படையிலே, இதே வருடம் திருக்கேதீச்சரர் ஆலயத்தில் கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இச்சபையால் மேலும் பல திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டன. ஆலய புனருத்தாரணப் பணியில் மதுரை ஆதீனத்தின் பங்களிப்பும் காணப்பட்டுள்ளது.

இத்திருக்கோயிலின் தலவிருட்சமாக வன்னி விருட்சம் காணப்படுகின்றது. இத்திருக்கோயில் கிழக்குநோக்கிய ஐந்தடுக்கு நிலையினைக் கொண்ட இராஜகோபுரத்தைக் கொண்டுள்ளது.

இராஜகோபுரத்தின் அருகின் அமைந்துள்ள உயரமான கோபுரத்தில் இரண்டு தொன் எடையுள்ள, லண்டனில் வார்க்கப்பட்ட பிரமாண்டான வெண்கல ஆலயமணி காணப்படுகின்றது. இசைக்குறிப்பில் காணப்படும் 'இ' என்ற நாத ஒலியமைப்பில் இது உருவாக்கப்பட்டதென்பர்.

இவ்வாலயத்தில், சுவாமி சந்நிதி கிழக்கும், அம்பாள் சந்நிதி தெற்கும் நோக்கியுள்ளன. திருக்கோயிலைச்சுற்றிக் காணப்படும் நான்கு திருவீதிகளும் மூன்றாம் பிரகாரம் என வழங்கப்படும். நான்காம் பிரகாரமாகத் தேரோடும்வீதி காணப்படுகின்றது.

இங்கு பல மடங்கள் காணப்பட்டன. இவற்றுள் ஈழத்துச் சிவனடியார் திருக் கூட்டத்தினரால் 1952ஆம் ஆண்டு திருவாசகமடம் கட்டப்பட்டது. இம்மடத்தில் சிவனடியார்கள் வந்து தங்கிச் செல்வர். மகேசுவர பூசையும் நடைபெறுவதுண்டு.

*(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீண்டகாலக் கனவை நிறைவேற்ற கிழக்குத் தேர்தல் நல்ல சந்தர்ப்பம்

## மக்களை அழைக்கிறார் கூட்டமைப்பின் வேட்பாளர்

என்றுமில்லாதவாறு இந்த முறை கிழக்கு மாகாணசபைத் தேர்தலை தமிழ் மக்கள் அக்கறையோடும், ஆர்வத்தோடும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். தமிழ் மக்களின் நீண்டகால அரசியல் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்கு அவர்கள் வழங்குகின்ற பலத்த ஓர் ஆணையாக இம்முறை இடம்பெற இருக்கின்ற இத்தேர்தல் இருக்கப் போகின்றது.

இவ்வாறு கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிடும் கல்முனை மாநகரசபை முன்னாள் எதிர்க் கட்சித் தலைவர் த.அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

நற்பிட்டிமுனையில் மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று தமிழர்களினுடைய பிரச்சினை தொடர்பாக சர்வதேச நாடுகள் பலவழிகளிலும் அக்கறை செலுத்தி வருவதை அவதானிக்க முடிகின்றது. இவ்வாறான கால கட்டத்திலேதான் தமிழ் மக்களாகிய நாம் எமது உரிமைகளை வென்றெடுப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்து செயற்படவேண்டிய காலமாக இதனைக் கருதவேண்டும். அப்போதுதான் எமது இலக்குச் சரியான பாதையை நோக்கி நகரும்.

மூன்று மாவட்டங்களிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிகளவான ஆசனங்களைப் பெற்று வெற்றியீட்டுவதற்கு ஒவ்வொரு மாவட்டங்களிலும் உள்ள தமிழ் மக்கள் அயராது உழைப்பதில் முன்நிற்கவேண்டும். அதிலும் குறிப்பாக, இளைஞர்கள், யுவதிகள் தங்களை முழுமையாக ஈடுபடுத்தி தமிழ் மக்களை விழிப்படையச் செய்ய வேண்டும்.

இளைஞர்கள், யுவதிகள் தங்களை முழுமையாக ஈடுபடுத்தி தமிழ் மக்களை விழிப்படையச் செய்ய வேண்டும்.



அம்பாறை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தமிழ்மக்கள் தூரநோக்குடன் வாக்களித்து மூன்று தொகுதிகளுக்குமான பிரதிநிதிகளைத் தெரிவுசெய்யவேண்டும். முன்பு நடந்த தேர்தல்களில் தமிழ் மக்களின் வாக்குப்பலத்தை சிதறடித்தது போன்று இம்முறையும் சிதறடிக்காமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பலத்தை நிலை நாட்டி எமது ஒற்றுமையை உலகறியச் செய்து சர்வதேசத் தின் பார்வை எங்கள் பக்கம் பலமாக இருப்பதற்கு நம்முடைய முக்கிய ஆயுதமான வாக் குப்பலத்தை பிரயோகிக்க வேண்டும் - என்றார். (ச)

# தமிழரின் பலத்தை நிரூபிக்க தேர்தலில் ஓரணி திரள்வோம்

## கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட வேட்பாளர் கருத்து

அம்பாறை,ஜூலை30

தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை மலினப்படுத்தி பிரித்தாள நினைக்கும் சக்திகளுக்குத் தமிழர்கள் என்றும் ஒரே குரலாகவே தமது போராட்டப் பாதையில் உள்ளனர் என்பதை மீண்டுமொரு முறை நிரூபித்துக் காட்டுவதற்கு எதிர்வரும் கிழக்கு.மாகாணசபைத் தேர்தலில் அனைவரும் ஓரணியாகத்திரளுவோம். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட வேட்பாளர் செல்வப் பிரகாஷ் அழைப்பு விடுத்தார்.

ஆதரவாளர்கள் மத்தியில் நடைபெற்ற கலந்துரையாடலில் உரையாற்றியபோதே அவர் இந்த அழைப்பை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது கட்சியின் வேண்டுதலுக்கு அமைய அம்பாறை மாவட்டத்தில் எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் நான் போட்டியிடவுள்ளேன். அம்பாறை மாவட்ட தமிழ் மக்களினதும், இளைஞர்களினதும் மனநிலையை நான் நன்கு அறிந்தவன் என்ற வகையில் கட்சியின் இலக்கு அதன் நோக்கம் ஆகியவற்றுக்கும் என்றும் பாடுபட்டு உழைப்பேன்.

அம்பாறை மாவட்டத்தில் மூவின சமூகங்களும் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் எதிர்வரும் தேர்தலில், தாம் சார்ந்த சமூகத்துடன் தொடர்புடைய கட்சிக்கே வாக்களிக்கவுள்ளனர். இந்த நிலையில் தமிழர்களின் உரிமைக் குரலாகவும், தமிழர்களின் தனித்துவமான அரசியல் கட்சியாகவும் என்றும் ஒலித்துக் கொண்டிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே தமிழர்கள் அனைவரும் தமது வாக்குகளை வழங்கவேண்டும்.

எமக்குள்ள வாக்குப் பலத்தைப் பிரயோகிக்கும் வகையில் வாக்களிக்கத் தகுதியுடைய அனைவரும் வாக்களிப்பதற்காக அங்கீகரிக்கப்பட்ட ஆள் அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ள முனையவேண்டும். அத்துடன் வாக்களிப்புத் தினத்தில் நேரகாலத்துடன்வாக்களிப்புநிலைத்துக்குச் சென்று தமது வாக்கை அளிக்கவேண்டும்-என்றார். (ச)

# கிண்ணியாவில் கட்டாக்காலிகளால் வீதி விபத்துக்கள் அதிகரிப்பு

திருகோணமலை, ஜூலை 30

கிண்ணியாவில் முறையற்ற விதத்தில் அனைத்து இடங்களிலும் வாகனங்களை நிறுத்துதல் மற்றும் வீதிகளில் அலையும் கட்டாக்காலி விலங்குகளால் விபத்துக்கள் அதிகரித்துள்ளன என்று முறையிடப்பட்டுள்ளது.

கிண்ணியா பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இந்தச் சம்பவம் தொடர்பாக பிரஸ்தாபிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது.

இந்தத் தீர்மானத்தின் பிரதி பொலிஸாருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. எனினும் இந்த விடயம் பூரணமாகக் கவனத்தில் கொள்ளப்படவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வீதியின் இரு மருங்கிலும் வாகனங்கள் நிறுத்தப்படுவது மட்டுமன்றி எவ்வித போக்குவரத்து விதிமுறைளையும் பின்பற்றாமல் சாரதிகள் விரும்பிய இடங்களில் வாகனங்களைத் திருப்புதல், வேகமாக ஓட்டுதல் போன்ற நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றன.

பாதசாரிகளுக்கு மஞ்சள் கோட்டு விதிமுறை குறித்து போதியளவு விளக்கமில்லாததால் நாளாந்தம் பத்துக்கும் மேற்பட்ட விபத்துக்கள் ஏற்படுகின்றன.

இதுதொடர்பாக பொது மக்களுக்கு விழிப்புணர்வு அவசியம் என்று குறித்த கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)



மட்டக்களப்பு, மஞ்சந்தொடுவாய் பிரதேசத்துக்கு குடிதண்ணீர் வழங்குவதற்காக குழாய் பதிக்கும் நடவடிக்கைகள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டன. மட்டக்களப்பு மாநகர முதல்வர் திருமதி சிவகீர்த்தா பிரபாகரன் இந்தக் குழாய் பதிக்கும் நடவடிக்கையை ஆரம்பித்துவைத்தார்.

# தேர்தலில் பணம் சம்பாதிக்க நாம் போட்டியிடவில்லை

## மு.கா. வேட்பாளர் நஸார் தெரிவிப்பு

மட்டக்களப்பு,ஜூலை30

பணம் சம்பாதிக்கவோ, அரச சொகுசு வாழ்க்கையை அனுபவிப்பதற்காகவோ நான் கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடவில்லை. எந்தவித அரசியல் அதிகாரமுமில்லாமல் அதிகமான சமூகசேவைகளை மக்களுக்குச் செய்திருக்கின்றேன்; செய்துகொண்டும் வருகின்றேன் என்று முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக போட்டியிடும் வேட்பாளர் நசார் ஹாஜி தெரிவித்தார்.

அக்கரைப்பற்று இளைஞர்களுடனான சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நான் சிறுவயதிலிருந்து சமூகப் பணியில் ஈடுபட்டவன். அதே பணியைத்தான் இற்றைவரை செய்து வருகின்றேன். அரசியல் அதிகாரமொன்றை இம்மாவட்ட மக்கள் எனக்கு வாழங்குவார்களாயின் மக்களுக்கென்றே பாடுபடவுள்ளேன்.

கடந்த மாகாண சபையைவிட தற்போது அமையப் போகின்ற மாகாண சபை, அரசியல் அதிகாரமுள்ள ஒரு சபையாகவுள்ளது. இச்சபைக்கு அனுப்பப்படுகின்ற உறுப்பினர்கள் சமூக உணர்வு உள்ளவர்களாக அடையாளப் படுத்தப்படவேண்டிய தேவை இம்மக்களுக்கு உள்ளது.

எனவேதான் நான் இக்கட்சிக்கும், தலைமைக்கும் விசுவாசமாக இருந்துகொண்டு எனது அரசியலை முன்னெடுத்து வருகிறேன். இம்மாவட்ட மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகள், விவசாயிகளின் பிரச்சினைகள், கல்விப் பிரச்சினைகள், மீனவர்களின் முன்னேற்றம் தொடர்பான வேலைகள் ஆகியவற்றுக்கு எப்போதும் முன்னுரிமை வழங்குவேன் - என்றார்.

# முஸ்லிம் மக்களின் வாக்கு மு.காவுக்கே

## இதனை நிரூபிக்கவே தனித்துப் போட்டி

மட்டக்களப்பு,ஜூலை30

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் முஸ்லிம்களின் வாக்கு முஸ்லிம் காங்கிரஸுக்கே உள்ளது என்பதை நிரூபித்துக் காட்டுவதற்காகவே தனித்துப் போட்டியிடுகிறோம் என்று கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் வேட்பாளர் எஸ்.ஜவாஹிர் சாலி தெரிவித்தார்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடும் கல்குடாத் தொகுதியைச் சேர்ந்த மூன்று வேட்பாளர்களை அறிமுகப்படுத்தும் கூட்டம் ஓட்டமாவடியில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

கல்குடாத் தொகுதி முஸ்லிம் வாக்காளர்கள் காலங்காலமாக முஸ்லிம் காங்கிரஸின் கொள்கைகளை ஏற்று வாக்களித்தவர்கள்.

கடந்த மாகாணசபைத் தேர்தலில் முஸ்லிம் முதலமைச்சர் என்ற கோஷத்துக்காகவே இந்தப் பிரதேசத்திலிருந்து மாற்றுக் கட்சிகளுக்கு வாக்குகள் அழிக்கப்பட்டனவேதவிர, அந்த வாக்குகள் முஸ்லிம் காங்கிரஸுக்கு எதிரான வாக்குகள் அல்ல - என்றார்.

# பள்ளிவாசலுக்குள்ளும் அடாவடி: ஜனநாயகத்துக்கு விழுந்த அடி

## பிக்குகளின் செயலைக் கண்டிக்கிறார் ஜவாத்

மட்டக்களப்பு,ஜூலை30

பௌத்த பிக்குகளும், சிங்கள கடும்போக்காளர்களும் இணைந்து குருநாகலிலுள்ள புராதன முஸ்லிம் பள்ளிவாசலுக்குள் அத்துமீறிப் பிரவேசித்து, புனித ரமழான தொழுகைக்காக அங்கு ஒன்றுகூடியிருந்த முஸ்லிம் மக்களை விரட்டியடித்து விட்டு பள்ளிவாசலில் பிரித் ஓதி அராஜகம் புரிந்துள்ளமையானது இந்தநாட்டின் ஜனநாயகத்தை குழிதோண்டிப் புதைத்த மற்றுமொரு சான்றாகும் என்று முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் கே.எம்.அப்துர் ரஸ்ஸாக் (ஜவாத்) விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவர் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் வாழும் முஸ்லிம்களின் வணக்கஸ்தலமான பள்ளிவாசல்கள், தமிழர்களின் வணக்கஸ்தலமான இந்து ஆலயங்கள் தாக்கப்படுகின்றன. அதற்கும் அப்பால் முஸ்லிம் - தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கள் நாளுக்குநாள் அபகரிக்கப்பட்ட வண்ணமுள்ளன. இதனைத் தடுத்துநிறுத்த வேண்டியது அரசின் கடமையும், பொறுப்புமாகும்.

இன்று பொருள்களின் விலையை மலைபோல் உயர்த்திவிட்டு மக்கள் நிம்மதியாக வாழமுடியாத அளவுக்குப் பொருளாதாரப் பஞ்சம், பட்டினி ஆகியவற்றை தோற்றுவித்த அரசின் கட்சிக்கு வாக்களிப்பதா?

கடந்தகால போர் காரணமாக இந்தப் பிரதேச மக்கள் சந்தித்த துன்ப, துயரங்கள் ஏராளம். அதிலும் குறிப்பாக விதவைகளானோரின் எண்ணிக்கை அதிகம்; வீடுவாசல்களை இழந்த குடும்பங்கள் அதிகம்; கல்வியை இழந்த மாணவர்களின் எண்ணிக்கை அதிகம். இந்த நிலையிலிருந்து நாம் மீட்சிப் பெற வேண்டுமாயின் தமிழரின் தன்மானச் சின்னமான வீட்டுக்கு நேரே புள்ளடியிட வேண்டும் - என்றார். (ச)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** பல்வேறான சிந்தனைகள் மனதில் நிலவும். பணம் சம்பந்தப்பட்ட காரியங்களில், கவனம் அதிகம் தேவை. எதிர்பார்க்கும், சில உதவிகள் தாமதமானபோதும் கிடைக்கும். இல்லறத் துணையின் அவசரமான செயற்பாடுகள், அதிகம் யோசிக்க வைக்கும்.

**இடபம்:** புதிய முயற்சிகளில் சிந்தித்துச் செயற்படுதல் நன்மை தரும். வேலைகளை விரைவாக முடித்தபோதும், மனத்திருப்தி என்பது சற்று குறைவாக இருக்கும். திட்டமிட்ட பயணம் ஒன்றை மாற்றியமைக்க வேண்டியிருக்கும்.

**மிதுனம்:** தன்னம்பிக்கை, விடாமுயற்சி அதிகரிக்கும் நாள். புதிய நபர்களின் சந்திப்பு, அவர்களால், சில காரியங்களை எளிதாகச் சாதித்து கொள்ளும் நிலைமை ஏற்படும். சில விடயங்களில் நெருங்கிய நபர்களின் செயற்பாடுகள் அதிகம் யோசிக்க வைக்கும், பெரிதுபடுத்திக் கொள்ளாதீர்கள்.

**கடகம்:** எதிர்பாராத செலவுகளைச் சந்திக்க நேரிடும். சிக்கனம் தேவை. இல்லறத் துணையின் யோசனைகள் மிகச்சரியாக இருந்த போதும், ஏற்றுக்கொள்ள உங்கள் மனம் இடம் கொடுக்காது. அலுவலக பணிகளில், தேவையற்ற பேச்சுக்களைக் குறைத்துக் கொள்ளுங்கள்.

**சிங்கம்:** நண்பர்களின் செயல்கள் அதிகம் யோசிக்க வைக்கலாம். இருப்பினும், எதையும் பெரிதுபடுத்திக் கொள்ளாதீர்கள். சில விவகாரங்களில், உங்களின் யோசனைப் படி நடப்பது நல்லது. உறவினர் ஒருவர் கொடுத்த வாக்கைக் காப்பாற்றாததால், மனக்கஷ்டம் ஏற்படும்.

**கன்னி:** செயல்களில் வெற்றி பெறத் தகுந்த சூழ்நிலை இல்லாதபோதும், சற்று பொறுமையுடன் முயற்ச்சியைத் தொடர்ந்தால், வெற்றிக்கு வழிவகுக்கும். ஒரு காரியத்துக்காக எடுத்து வைக்கப்பட்ட தொகை ஒன்றை, மற்றொரு காரியத்துக்காகப் பயன்படுத்துவீர்கள். உத்தியோக ரீதியாக மேலதிகாரிகள் பாராட்டுக்குள்ளாவீர்கள்.

**நாளை**

ஆடி 16 செவ்வாய்க்கிழமை 31.07.2012
திதி: திரயோதசி பி.ப 12.45 வரை
நட்சத்திரம்: பூராடம் பி.இ.12.04 வரை சித்தம்
சுபநேரம்: 10.33 - 12.03 வரை
ராகு காலம்: .03.03- 04.33 வரை

**துலாம்:** உங்களின் தன்னம்பிக்கையும், தைரியமும் அதிகரிக்கும். பெரிய மனிதர்கள் சிலரின் உதவிகள் கிடைக்கும். எதிர்பார்த்த வரவுகள் வரும். அலுவலகப் பணியாளர்களுக்கு, நிர்வாகத்தின் செயற்பாடுகள் அதிகம் யோசிக்க வைத்தபோதும், விமர்சனம் செய்யாதீர்கள்.

**விருச்சிகம்:** உங்களின் சாதுர்யமான நடவடிக்கைகள் எதிர்பார்த்த வெற்றியைத் தரும். பணம் பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கும் போது, வரவேண்டிய பணம் கைக்கு வரும். நீங்கள் சந்திக்க நினைத்த நபர்கள், அவர்களே உங்களைச் சந்திக்கும் படியான சூழ்நிலையை ஏற்படுத்தித் தருவார்கள்.

**தனுசு:** கௌரவத்துக்காகச் சில விடயங்களில் ஈடுபடுவீர்கள். சில நேரங்களில், தனக்கு மிஞ்சி எதுவும் இல்லை என்ற சிந்தனையும் மேலோங்கி நிற்கும். மற்றவர்களின் விவகாரங்களில் தலையிடுவதால் வீண் அலைச்சல், விரயங்கள் ஏற்படும்.

**மகரம்:** உங்களின் சுயசிந்தனைகளால், சில ஆதாயங்களைத் தேடிக்கொள்வீர்கள். உடல் நிலையில் சோர்வு ஏற்படலாம். சில சந்திப்புக்கள் மற்றும் புதிய அறிமுகங்களை பயனுள்ளதாக்கிக் கொள்வீர்கள். பூர்வீக சொத்து சம்பந்தப்பட்ட விவகாரங்களை முடிப்பதற்காக முயற்சிகள் மேற்கொள்வீர்கள்.

**கும்பம்:** மாற்றங்களை எதிர்நோக்கி, உங்களின் செயற்பாடு இருக்கும். அதற்கான சூழ்நிலைகளும் கூடிவரும். குடும்ப விடயங்களில் இல்லறத் துணையின் பிடிவாதமான போக்குகள் உங்களை அதிகம் யோசிக்க வைக்கும்.

**மீனம்:** எண்ணங்கள் ஈடேறும். உடல் நிலையில் கூடுதல் கவனம் தேவை. குழந்தைகளின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு, சில ஏற்பாடுகள் மேற்கொள்வீர்கள். தொழில் துறையில் ஸ்திரமான முன்னேற்ற வாய்ப்புகள் ஏற்படும்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | | | | 1 | 5 | | | |
| | | | 4 | | 3 | 7 | 9 | 8 |
| 4 | 3 | 7 | 2 | 8 | | | 1 | 5 |
| | 6 | 1 | | | | | | |
| | | 4 | | | | 5 | | |
| | | | | | | 3 | 8 | |
| 1 | 4 | | | 5 | 6 | 8 | 7 | 2 |
| 5 | 9 | 2 | 8 | | 4 | | | |
| | | | 3 | 2 | | | | 9 |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 3 | 4 | 5 | 1 | 6 | 2 | 7 | 8 |
| 1 | 5 | 7 | 3 | 2 | 8 | 9 | 4 | 6 |
| 8 | 6 | 2 | 7 | 4 | 9 | 3 | 1 | 5 |
| 7 | 2 | 9 | 4 | 5 | 1 | 8 | 6 | 3 |
| 3 | 4 | 5 | 6 | 8 | 2 | 7 | 9 | 1 |
| 6 | 8 | 1 | 9 | 3 | 7 | 5 | 2 | 4 |
| 5 | 1 | 8 | 2 | 7 | 4 | 6 | 3 | 9 |
| 4 | 7 | 6 | 8 | 9 | 3 | 1 | 5 | 2 |
| 2 | 9 | 3 | 1 | 6 | 5 | 4 | 8 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# New Administration process with the international collaborates in Visa Advising Market and Visa Advising Modern Establishment of Thisaikaddi(Pvt) Ltd.






Coordination with International Partners in transfering the latest information regarding the Emigration and Immigration in New Administration field.

The New Administration process has been entered by us with our Inernational Chief Miss. Ajanthini, who has appointed as Chief Escutive Offices in Thisaikaddi (Pvt)Ltd.

Miss. Ajanthini, has experienced in this field around 10 years and carried her life style in Bharain around 20 years and completed her degree there as well. More of she knows 12 world languages, as of her talent.

Our newly C.E.O. is appointed by our Honorable Board of Directors to our Thisaikaddi (Pvt)Ltd. and we inform that to the society.

By this, we have started our new customer interactoin, modern advising to our clients, latest technical of the visa process, more improvement relation with our customers, the fast moving process in visa with simple terms and more customized process in this field.

By this new collaboration we are facing the globalized world, and moving more advances.

**தற்போது எம்மிடம்**

- அவுஸ்ரேலியா
  குடும்பவிசா/Student Visa
- நியூசிலாந்து
  குடும்பவிசா/Student Visa
- மலேசியா
  குடும்பவிசா/Student Visa
- கனடா
  குடும்பவிசா/Student Visa

போன்றவற்றுக்கான ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

**திசைகாட்டி(பிறைவேற்) லிமிட் (PV82703)**
**முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்,**
**37, சிவகுருநாதர் ஒழுங்கை,**
**பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.**
**021 221 9016, 021221 9514**

**thisaikaddi@sltnet.lk**
**www.thisaikaddi.lk**

(21002)(5-6-7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வலுசக்தியைப் பாதுகாப்பதன் அவசியத்தை வலியுறுத்தி நடைபவனி ஒன்று கொழும்பில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. இந்த நடைபவனியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, மின்சக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

# தேர்தல் முடிந்த பின்னர் அமைச்சரவையில் மாற்றம்

கொழும்பு, ஜூலை 30

எதிர்வரும் மாகாண சபை தேர்தல் முடிந்த பின்னர் அமைச்சரவையில் மாற்றங்களை ஏற்படுத்த திட்டமிட்டுள்ளதாக அரச தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசுடன் இணைந்து கொள்ளவுள்ள ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு அமைச்சர் பதவி வழங்கப் படவுள்ளது என்று கூறப்படுகிறது.

ஐக்கிய தேசியக்கட்சியைச் சேர்ந்த மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஒரு மாகாண சபை உறுப்பினர் மற்றும் உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் அரசில் இணையவுள்ளனர் என்று கூறப்படுகிறது.

அரசுடன் இணைந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான பிரபா கணேசன் மற்றும் பழனி திகாம்பரம் ஆகியோருக்கு பிரதியமைச்சர் பதவிகள் வழங்கப்படவுள்ளன.

இதனைத் தவிர தற்போதைய அமைச்சர்களின் பதவிகளிலும் மாற்றங்கள் செய்யப்படவுள்ளன என்றும் கூறப்படுகிறது. மாற்றப்பட வேண்டிய அமைச்சுக்கள் தொடர்பாக பட்டியல் தற்போது தயாரிக்கப்பட்டு வருவதாகவும், அமைச்சர்களினால் மேற் கொள்ளப்பட்ட பணிகள் தொடர்பாக ஆராய்ந்து இந்தப் பட்டியல் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# அரசிலிருந்து வெளியேறவே மு.காங். தனித்துப் போட்டி

## ஆசன ஒதுக்கீட்டில் முரண்பாடு இல்லை என்கிறார் அதாவுல்லா

கொழும்பு, ஜூலை 30

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிட எடுத்த முடிவு ஏற்கனவே நன்கு திட்டமிட்டு மேற் கொள்ளப்பட்டது. ஆசன ஒதுக்கீட்டில் ஏற்பட்ட முரண்பாடுகள் இதற்குக் காரணம் இல்லை என்று தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ.எல்.எம். அதாவுல்லா தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் அகதி முகாம்களில் சொல்லொணா வேதனைகளை அனுபவித்த போது அந்தப் பக்கம் எட்டியே பார்க்காத அரசியல் வாதிகள், இனவாத, மதவாத சக்திகளுடன் இணைந்து எனக்கு எதிராக தங்கள் விரல்களை நீட்டுகின்றனர்.

என்னை எப்படியாவது அரசியலிலிருந்து ஒதுக்கி விட வேண்டும் என்று கனவு காண்கின்றனர். அப்பாவித் தமிழ் மக்களையும் முஸ்லிம் மக்களையும் மோதவிட்டு அதில் குளிர்காய நினைக்கின்றனர்.

என்னைப் பற்றி எவர் எதைச் சொன்னாலும், எனக்கெதிராக பல்வேறு குற்றங்களைச் சுமத்தினாலும் நீதி ஒருபோதும் செத்து விடாது என்பதில் நான் அசையா நம்பிக்கை கொண்டிருக்கின்றேன். நான் முஸ்லிம் சமூகத்தைச் சார்ந்தவனாக இருந்தபோதும் எந்த இனம் பாதிக்கப்பட்டாலும் அவர்களுக்காக தொடர்ந்தும் குரல் கொடுப்பேன்.

மன்னாரில் இன மோதல் ஒன்று உருவாகக் கூடாது என்ற ஒரே நோக்கிலேயே அங்கு நடந்து கொண்டிருந்த சம்பவம் தொடர்பாக எனக்குத் தகவல் கிடைத்ததும் மன்னாருக்கு உடன் விரைந்தேன். அங்கு பாதிக்கப்பட்ட மக்களை பள்ளிவாசலுக்கு அழைத்து ஆசுவாசப்படுத்த முயன்றேன்.- என்றார். (ச)

நான் முஸ்லிம் சமூகத்தைச் சாந்தவனாக இருந்தபோதும் எந்த இனம் பாதிக்கப்பட்டாலும் அவர்களுக்காக தொடர்ந்தும் குரல் கொடுப்பேன்.



# பெற்றோலிய வளம் குறித்து இரு சட்டங்களில் திருத்தம்

கொழும்பு,ஜூலை 30

பெற்றோலிய வளம் தொடர்பான இரண்டு சட்டங்களில் திருத்தம் மேற் கொள்வதற்கு பெற்றோலிய வளத்துறை அமைச்சு உத் தேசித்துள்ளது.

குறித்த இரண்டு சட்டத் திருத்தங்களும் சட்ட மா அதிபரின் அனுமதியைப் பெறும் வகையில் தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்று பெற்றோலிய வளத்துறை அமைச்சின் செயலாளர் ஏ.எச். எஸ்.சமரதுங்க தெரிவித்தார்.

சட்ட மாஅதிபரின் அனுமதி கிடைத்தவுடன் அமைச்சரவை மற்றும் நாடாளுமன்றத்தின் அனுமதிக்காக அவை சமர்ப்பிக்கப்படவுள்ளன என்று அவர் குறிப்பிட்டார்.

இந்தச் சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் பெற்றோலிய நெறிப்படுத்தல் நடவடிக்கைகள் மக்கள் பயன்பாட்டு ஆணைக் குழுவிடம் ஒப்படைக்கப் படவுள்ளன என்று அவர் கூறினார்.

அத்தோடு எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் இடம்பெறும் முறைகேடுகள் தொடர்பான முறைப்பாடுகள் குறித்தும் மக்கள் பயன்பாட்டு ஆணைக்குழு ஆராயவுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# குற்றச்செயல்களில் ஈடுபடும் பொலிஸார் பணி நீக்கப்படுவர்

## பொலிஸ் மா அதிபர் கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 30

குற்றச்செயல்களில் ஈடுபடும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் பணி நீக்கப்படுவர் என்று பொலிஸ் மா அதிபர் என்.கே.இளங்கக்கோன் தெரிவித்தார்.

ஊழல் மோசடிகள், நிதி மோசடிகள் உள்ளிட்ட பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்டதாக பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராகக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன என்று அவர் கூறினார்.



குற்றச்செயல்களில் ஈடுபடும் பொலிஸார் பணி நீக்கப்பட வேண்டியது அவசியமானது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

சாதாரண உத்தியோகத்தர்கள் முதல் உயர்அதிகாரிகள் வரையில் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.(ச)

# தம்புள்ள பள்ளிவாசலை இடமாற்றம் செய்யமுடியாது

## ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானம்

கொழும்பு, ஜூலை 30

தம்புள்ளை பள்ளிவாசலை இடமாற்றம் செய்யக் கூடாது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானம் மேற் கொண்டுள்ளது. நேற்றுமுன் தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தம்புள்ள பள்ளி வாசலை முஸ்லிம் தலைவர் களின் அனுமதி இன்றி, இடமாற்றம் செய்ய முடியாது என்று அமைச்சர் ரவூப் ஹக்கீம் கூறினார். இது தொடர்பில் ஜனாதிபதியைச் சந்தித்து, முஸ்லிம் காங்கிர ஸின் நிலைப்பாட்டை தாம் வெளிப்படுத்தவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச)

தம்புள்ள பள்ளி வாசலை முஸ்லிம் தலைவர்களின் அனுமதி இன்றி, இடமாற்றம் செய்ய முடியாது

# பனிமூட்டம்; சாரதிகளுக்கு எச்சரிக்கை

நுவரெலியா, ஜூலை 30

நுவரெலியா மாவட்டத்தில் தற்போது அதிக பனிமூட்டம் நிலவுவதாக மாவட்ட செயலாளர் டி.பி.ஜீ.குமாரசிறி தெரிவித்தார். சில பகுதிகளில் ஆள்களை அடையாளம் காணமுடியாதவாறு அதிக பனிமூட்டம் நிலவுகின்றது. இதனால் வாகன விபத்துக்கள் இடம்பெறக்கூடிய சாத்தியம் இருப்பதால், சாரதிகள் அவதானமாக வாகனம் செலுத்தவேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

நுவரெலியாவுக்குப் பயணிக்கும் வாகனங்கள் மின் விளக்குகளை ஒளிரச்செய்த வண்ணம் பயணிப்பது சிறந்தது.அத்துடன் மண்சரிவு ஏற்படக்கூடிய அபாயம் தென்படுவதால் அது குறித்தும் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (ச)

# கஞ்சாவுடன் இருவர் கைது

கொழும்பு, ஜூலை 30

கம்பேகமுவ பிரதேசத்தில் 600 கிலோகிராம் கஞ்சா வைத்திருந்த இருவரை பொலிஸர் கைது செய்துள்ளனர்.

இவர்களில் ஒரு சந்தேகநபரிடமிருந்து 513 கிலோகிராம் கஞ்சாவும், மற்றவரிடமிருந்து 93 கிலோகிராம் கஞ்சாவும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் வெல்லவாய நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட வுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை வெல்லவாய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# துப்பாக்கி வெடித்து பொலிஸ் உத்தியோகத்தர் சாவு

கொழும்பு, ஜூலை 30

நெலுவ பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த உப பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை மரணமடைந்துள்ளார்.

மாத்தறையைச் சேர்ந்த சுனில் விபுலசிறி (வயது-51) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

வெல்வல பகுதியில் இடம்பெற்ற முற்றுகை நடவடிக்கையின்போது மற்றுமொரு பொலிஸ் உத்தியோகத்தரின் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததிலேயே இவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான விசாரணைகளுக்காக காலி பொலிஸ் அத்தியட்சகர் யூ.எஸ். பண்டாரநாயக்கவுடன் பொலிஸ் குழுவொன்று அந்தப்பகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதே வேளை, காலி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வாஸ் குணவர்தனவின் நெறிப்படுத்தலில் மற்றொரு பொலிஸ் குழுவும் விசாரணை மேற்கொள்கிறது. (ச)

# இந்தியாவின் உதவியை இலங்கை நிராகரித்தது

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை மேம்படுத்தும் திட்டத்துக்கு இந்திய எண்ணெய் கூட்டுத்தாபனம் ஒத்துழைப்பு வழங்க முன்வந்தபோதும் இலங்கை அதனை நிராகரித்துள்ளது.

இந்தத் திட்டத்துக்கு 2 பில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவை என்று இலங்கை அரசு முன்பு அறிவித்திருந்தது. இந்த நிதியை வழங்கி, சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை அபிவிருத்தி செய்யவும், மேலும் புதிய ஒரு சுத்திகரிப்பு நிலையத்தை உருவாக்கவும் இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனம் முன்வந்ததை அரசு நிராகரித்துள்ளது.இது தொடர்பில் பேச்சு இடம்பெற்ற போதும், அது வெற்றியளிக்கவில்லை என்று இலங்கை - இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனத்தின் தலைவர் தெரிவித்தார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலைவாய்ப்பு

★ காசாளர்
★ ஆங்கில மருந்து அனுபவம் உள்ளவர்கள்
★ உதவித் தாதியர் பயிற்சி பெற்றவர்கள்
★ உதவித் தாதிப் பயிற்சி பெறவிரும்புபவர்கள்

உடன் தொடர்பு கொள்ளவும். தூர இடத்தில் இருப்போர்க்கு, தங்கி நிற்க இடம், உணவு வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.
பயிற்சியின் பின் திறமையாளருக்கு நிரந்தர வேலை கொடுக்கப்படும்.

**சம்பந்தர் மெமோரியல் கிளினிக்**
08, இராமையா செட்டியார் வீதி,
(செல்வா தியேட்டர் வீதி) யாழ்ப்பாணம். 0212227259

## கோழிக்குஞ்சு விற்பனை

தடுப்பு மருந்து போடப்பட்ட " A " தரமான பிறிமா புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் மற்றும் சிவப்பு சேவல் குஞ்சுகள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். முன் கூட்டியே பதிவுசெய்யவும்.

நல்லூர் பாம் சென்ரர்
#19, முருகேசர் ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம்
தொ.பே : 021 2226944

நல்லூர் பாம் சென்ரர்
கனகபுரம் வீதி,
கிளிநொச்சி
தொ.பே : 077 6225944

சுட்டி பாம் சென்ரர்
வட்டுக்கோட்டை
தொ.பே : 077 8996085

(20670)(6-7-8)

## கடைகள் வாடகைக்கு

திருநெல்வேலிச் சந்திக்கும் சம்பத் வங்கிக்கும் இடையில் மூன்று தொடர் கடைகள் வாடகைக்கு கொடுக்கப்படும்

தொடர்புகளுக்கு : 0770488550

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

ஜேர்மன் செப்பேட் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 0776190158

## கடை விற்பனைக்கு

மன்னார் நகரில் பொலிஸ் நிலைய வீதியில் அமைந்துள்ள 3 மாடிக்கடை விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0778421359, 0233231216

## வீடு விற்பனைக்கு உண்டு

கொழும்புத்துறை சுவாமியார் வீதியில் (கொழும்புத்துறை இந்துக் கல்லூரிக்கு அருகில்) 2 பரப்புக் காணியில் அமைந்துள்ள 3 அறைகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: 0771171872

'ஆசிரியமணி' ச.விநாயகரத்தினம் அவர்களின்

## பவள விழா அழைப்பு



காலம்: 01.08.2012 புதன்கிழமை
(காலை 8.30 மணி முதல் 12.30 மணி வரை)
இடம் பாவலர் துரையப்பாபிள்ளை மண்டபம்
மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை

தலைமை:
கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன், (M.A,Ph.D)
(முன்னாள் தலைவர், மொழித்துறை, சப்ரகமுவ பல்கலைக்கழகம்)
(தலைவர், பவளவிழாக் குழு)

கௌரவ அதிதி: திரு.கு.வேல்சிவானந்தன்,B.A.(Hons), Dip.in.Ed, SLPS - 1
(அதிபர், மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
பவளவிழாக் குழுவினர், தெல்லிப்பழை கொழும்பு


(ச/1793)

விளம்பர அனுசரணை :
NALIN information Technologies
பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி. தொ.பே: 0212221121

# கண்ணீர்க் காணிக்கை

## திரு.சுப்பிரமணியம் ஆறுமுகம்

(இளைப்பாறிய ஆசிரியர்)



*காரை மண் பெற்றெடுத்த பேராளனே*
*காண்போரை மகிழ்வுடனே வரவேற்கும்*
*கண்ணியம் நிறை தாய் மாமாவே!*
*அம்மாவின் சோதரனாய் - எமை*
*கண்ணியமாய் வளர்த்தெடுத்த*
*பேரரசனே!*
*பேச்சாற்றல் மொழி ஆற்றல்*
*உங்கள் பெரும் சொத்து*
*அது எங்கள் அனைவரையும்*
*நிமிரவைத்த பெரும் பேறு*
*கண்ணிமைக்கும் நேரத்தில்*
*எமை விட்டு விண்ணுலகம்*
*சென்றீரே ஈசன் பதம் பற்றிட!*
*மீண்டும் நற்பிறப்பு ஏற்று*
*எம் குடும்பத்தின் பிள்ளையாய்*
*வந்துதிக்க இறைவனருள் வேண்டும்*

(2131)

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஸ்ரீ பேப்பர் மார்க்,
388, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

பிரிவுத் துயரில்:
திரு. திருமதி ஸ்ரீஸ்கந்தராஜா குடும்பத்தினர்.
(கண்ணன் ஸ்ரோஸ்) திருநெல்வேலி.

# 2 ஆவது பிறந்தநாள் வாழ்த்து



அச்சுவேலி பத்தமேனி காளி கோயிலடியைச் சேர்ந்த
இராமமூர்த்தி தேனுகா
தம்பதியரின் செல்வப்புதல்வன்

**தருண்ராஜ்**

தனது 2 ஆவது பிறந்த தினத்தை
இன்று 30.07.2012 திங்கட்கிழமை
தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார்.
இவரை அன்பு அப்பா, அம்மா,
அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா
மற்றும் உற்றார், உறவினர் நண்பர்கள்
அனைவரும் பத்தமேனி காளிஅம்பாள் அருள்பெற்று
சீரும் சிறப்புடன் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு
காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

பத்தமேனி,
அச்சுவேலி.
குடும்பத்தினர்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

## திருமதி கந்தன் சின்னாச்சி



வந்தார்
15.08.1946



சென்றார்
30.06.2012

**அன்பாலும் பண்பாலும் எம் எல்லோரையும்**
**அரவணைத்த எம் அன்புத் தாய்**
**மீளாத்துயில் கொண்ட போதிலும் உங்கள் நினைவுகள்**
**எங்கள் நினைவில் அகலவில்லை**

30.06.2012 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் வீட்டுக் கிருத்திய நிகழ்வு இன்று (30.07.2012) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மட்டுவில் மத்தி,
சிவன்கோயிலடி, சாவகச்சேரி.
(ச/1751)
குடும்பத்தினர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக் கூட்டத் துடன்கூடிய காலநிலை நிலவும்.

# லண்டன் ஒலிம்பிக் போட்டிகளில் இருந்து இலங்கை அணியை வெளியேற்ற வேண்டும்

## தமிழக வாழ்வுரிமைக் கட்சி வலியுறுத்து

இலங்கையில் தமிழ் மக்களின் உரிமைகள் மறுக் கப்பட்ட போது எதிர்ப்புத் தெரிவித்த பிரிட்டன் இன்று ஒலிம்பிக்கில் இலங்கை வீரர்களுக்கு இடம் கொடுத் திருப்பது கவலை தருவதாக உள்ளது.

இந்த நிலையில் இலங்கை அணியை ஒலிம்பிக்கில் இருந்து வெளியேற்ற உடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இவ்வாறு தமிழக வாழ் வுரிமைக் கட்சி வெளியிட் டுள்ள அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதா வது:-

லண்டன் மாநகரத்தில் தமிழீழத் தமிழ் உறவுகள் நடத்தி வரும் போராட்டத் துக்கு தமிழக வாழ்வுரிமைக் கட்சி தமது ஆதரவைத் தெரிவித்துக் கொள்கிறது. இதேபோல் "ஒலிம்பிக் போட் டிகளில் இலங்கை அணி பங்கேற்க தடை விதிக்க வலியுறுத்தி தமிழ்நாட்டில் நடைபெறும் போராட்டங் களிலும் தமிழக வாழ்வுரி மைக் கட்சி தம்மை ஈடு படுத்திக் கொள்கிறது.

இலங்கையை ஆண்ட பிரிட்டிஷ் பேரரசு, ஆட்சிப் பொறுப்பை சிங்களவர் களிடம் ஒப்படைத்ததால் 60 ஆண்டுகாலத்துக்கும் மேலாக தமிழீழத் தமிழ் உறவுகள் இரண்டாந்தர குடிமக்களாக நடத்தப்பட்டு வருவதுடன் பல லட்சம் தமிழரையும் காவு கொண்டுள்ளது.

இலங்கைத் தீவை அன்றே இரண்டாகப் பிரித்து தமிழர் பிரதேசங்களில் தமிழருக் கான ஆட்சி அதிகாரத்தைக் கொடுத்திருந்தால் இவ் வளவு பேரவலத்தை எமது இனம் சந்தித்திருக்காது. அந்த வகையில் பிரிட்டிஷ் மீது எமக்கு அதிருப்தி இருந் தாலும் அகதிகளாகச் சொந்த நிலத்தை விட்டுப் புலம் பெயர்ந்த எமது தமிழ் உறவுகளுக்கு அடைக்கலம் கொடுத்திருக்கும் நாடு.

கொடூரமான போர் முடிந்த பிறகும் கூட ஈழத் தமிழர் களின் வாழ்வுரிமை இன்ன மும் நசுக்கப்படுவது கண்டு தமது குமுறல்களை பிரிட்டிஷ் எப்போதும் வெளிப்படுத் தியே வந்திருக்கிறது.

இலங்கைத் தீவில் தமி ழர்களின் உரிமைகள் மறுக் கப்படுவதைக் கண்டு கொதித் தெழும் எமது உறவுகள் தொடர்ச்சியான போராட் டங்களை முன்னெடுக்க எமது உரிமைக் குரல்களை கரிசனையோடு எப்போதும் அணுகுகின்ற நாடும் பிரிட் டனே.

ஆனால் இப்போது ஒலிம் பிக் போட்டிகளில் பங்கேற்க இலங்கையை அனுமதித் திருப்பதும் இலங்கை ஜனாதிபதியை அழைத்திருப் பதும் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போலா னது.

இலங்கை வீரர்களை ஒலிம்பிக் போட்டிகளில் வெளியேற்றுமாறு லண் டனின் ஒலிம்பிக் பூங்கா முன்பு எமது தமிழ் உறவுகள் நடத்தி வரும் நியாயமான போராட்டத்தை அந்த நாட்டு அரசும் எலிசபெத் ராணியாரும் புரிந்து கொள்ள மறுப்பது வேதனையைத் தருகிறது.

ஜனநாயகம், மனிதா பிமானம் பேசும் பிரிட்டிஷ் அரசு தமிழர்களின் உள்ளக் குமுறலை ஏற்று லண்டன் ஒலிம்பிக் போட்டிகளில் இலங்கை அணி பங்கேற்கத் தடை விதிக்க வேண்டும் என்று தமிழக வாழ்வுரிமைக் கட்சி வலியுறுத்துகிறது.

ஒலிம்பிக் போட்டிகளில் இருந்து இலங்கை அணியை வெளியேற்றும் வரை தொடர்ச்சியான போராட் டங்களை முன்னெடுப் போம் என்று தமிழ்நாட்டில் உள்ள தோழமைக் கட்சி களையும் தமிழக வாழ்வுரி மைக் கட்சி கேட்டுக் கொள் கிறது என்று அதில் தெரிவிக் கப்பட்டுள்ளது. (3)

## ஆதன வரியைச் செலுத்துமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜூலை 30

திருநெல்வேலி பிர தேசத்துக்கு உட்பட்ட பகுதி யில் குடியிருப்பவர்கள் தமது வீடு, தோட்டங்களுக்கான ஆதனவரி நிலுவைகளை உடன் செலுத்துமாறு நல்லூர் பிரதேச சபை கோரியுள்ளது.

ஆதன வரியைச் செலுத் தத் தவறும் பட்சத்தில், மேலதிகமாக தண்டப்பணம் அறவிடப்படவுள்ளது. இத னால் அதனைத் தவிர்க்கும் பொருட்டு குடியிருப்பாளர் கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரி விக்கப்படுகின்றது. (3-7)

## சமய சந்நிதிகளில்

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் எதிர்வரும் ஒகஸ்ட் முத லாம் திகதி பௌர்ணமி தினத்தன்று சாரதா தேவிக்கு ஆயிரம் போற்றிகள் சொல்லி வழி பாடுகள் நடைபெற இருக்கின்றன. இந்த வழி பாடுகள் ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (3-8)

* * *

அனலை தீவு நயினாகுளம் கூழாவடியுறை பூர்ணாதேவி, புஷ்கலாதேவி சமேத ஹரிஹர புத்திரர் ஆலயத்தின் வருடாந்த பெருந்திரு விழாவின் தேர்த்திருவிழா நாளை யும், தீர்த் தத் திருவிழா நாளைமறுதினமும் நடைபெற வுள்ளன. இந்த ஆலயத்தின் வருடாந்த பெருந் திருவிழாகடந்த 23 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியமை குறிப்பிடத்தக்கது. (3-78)

* * *

சங்கானை செங்கற்படை மகாதேவா பிள்ளையார் ஆலய தேர்த்திருவிழா நாளை முற்பகல் 10.30 மணிக்கு வசந்தமண்டபப் பூசையுடன் ஆரம்பமாகி நண்பகல் 12 மணிக்கு தேர்ப்பவனி இடம்பெறும்.

## சமூக ஒருமைப்பாட்டு வாரம் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 30

கல்வி, நீதி, பாதுகாப்பு, சமூக பொருளாதாரம் மற்றும் சூழலியல் ஆகிய துறைகளில், சமூக ஒருமைப்பாட்டு வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.சமூக ஒருமைப்பாட்டை முன்னிட்டு தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு விழிப்புணர்வு நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளது. இதனை முன்னிட்டு கல்வி, நீதி, பாதுகாப்பு, சமூக பொருளா தாரம், சூழலியல் ஆகிய துறைகளில் விழிப்புணர்வு ஊட்டும் பதாகைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

யாழ். அரச அதிபர் இதற்கான பதாகைகளை சகல அரச அலுவலகங்களுக்கும் அனுப்பி வைத்துள்ளார். (3-41)

இரண்டாவது இதழ்
இப்பொழுது விற்பனையில்

விலை 150/=



சமகாலம்
இரு வாரங்களுக்கு ஒருமுறையான
செய்திச்சஞ்சிகை

சகல பத்திரிகை விற்பனையாளர்களிடமும்
வீரகேசரி கிளைக்காரியாலயங்களிலும்
பெற்றுக்கொள்ளலாம்.
மேலதிக விபரங்களுக்கு : 0117 322781
(சி/1832)
வீ எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் வெளியீடு

வெளிவந்து விட்டது

SCIENCE TODAY இதழ் - 02
கணித, விஞ்ஞான சஞ்சிகை

க.பொ.த உயர்தர கணித, உயிரியல் பிரிவு மாணவர்களுக்காக பல்கலைக்கழக பேராசிரியர்கள், கலாநிதிகளின் வழிகாட்டல், ஆக்கங்கள் மற்றும் இம்முறை பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் உள்ளடக்கி வெளிவரும் முதல் மாதாந்த சஞ்சிகை

இவ்விதழில்
✱ பழைய பாடத்திட்டத்திற்காக எழுதப்பட்ட பாடநூல்கள். புதிய பாடத்திட்டத்திற்கும் அவ்வாறே ஏற்புடையதாகும்.
Prof .S.R.D. Rosa
✱ வாயு விதிகள்
Dr. Balo Daya
✱ பிரயோக உயிரியல்
Dr.M. Surathissa
✱ வர்க்கத்தை சமப்படுத்தல்
Dr. Sanjeewa Perera
✱ கைத்தொழில் இரசாயனம்
Dr. Sudantha Liyanege

மற்றும் பேராசிரியர்களின் மாதிரி வினாக்கள்
பெற்றுக்கொள்ளும் இடங்கள்:
★ பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்ப்பாணம்
★ Srilanka - புத்தகசாலை - யாழ்ப்பாணம்
★ துர்க்கா புத்தகசாலை - சுன்னாகம்
★ சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை - நெல்லியடி
★ அபி புத்தகசாலை - சாவகச்சேரி
★ புதிய அருள்நாயகி புத்தகசாலை - கொடிகாமம்
★ அறிவாலயம் புத்தகசாலை - வவுனியா
★ Science Hall - கன்னாதிட்டி
(21134)(6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உரும்பிராய் அருள்மிகு காளி அம்பாள் என

# தேர், சப்பர வெள்ளோட்ட சிற




### ஆசிச்செய்தி

*அம்பிகையைச் சரண் புகுந்தால் அதிக வரம் பெறலாம்*

அகில உலக நாயகியாக விளங்கி ஆன்மாக்களின் ஈடேற்ற வாழ்விற்கு விமோசனம் அளிப்பவள் அம்பிகை. அவளின் வடிவங்கள்பல. வேண்டுவார் வேண்டும்வரமனைத்தையும் தருபவள் தாய் காமாட்சி அம்பாள். உலகனைத்தும் வியாபித்திருக்கும் சக்தி மதுரையில் மீனாட்சியாகவும், காஞ்சியில் காமாட்சியாகவும், தஞ்சையில் முத்துமாரியாகவும், திருக்கடவூரில் அபிராமியாகவும், நயினையில் நாக பூசணியாகவும், தெல்லிப் பழையில் துர்க்கையாகவும், உரும்பிராயில் காளியம்பாளாகவும் வீற்றிருந்து அருள் செய்கின்றாள், இன்று புதிய சப்பரத்திலும், நாளை புதிய சித்திரத்தேரிலும் வந்தெமக்கு நல்லருள் செய்யப்போகின்றாள், ஆன்மாக்களின் பந்தங்களையகற்றி நல்லருட் பேற்றினை அருள திருத் தேரில் ஆரோகணித்து வருகின்றாள், அம்பிகையின் தேர் வடம் பிடிக்க ஆயிரமாயிரம் அடியவர்கள் கூடும் திருக் காட்சியை உரும்பிராய்ப் பதியிலே இம்முறை காணலாம். அவளருள் பெற்று வாழ அன்னை துணை செய்வாளாக.

மஹோற்சவகுரு பிரம்மஸ்ரீ தியாக. கிருஸ்ணமூர்த்தி குருக்கள்.




### அருளாசிச் செய்தி

அம்பாள் அடியார்களே, இலங்கை மணித் திருநாட்டில் வட திசையில் யாழ்ப் பாணப் பிரதேசத்தில் உரும்பிராய்ப் பகுதியில் கோயில் கொண்டெழுந்தருளியிருக் கும் காமாட்சி அம்பாளின் அடியவர்கள் மனமுவந்து உருவாக்கிக் கொடுத்திருக்கும் புதிய சப்பரம் மற்றும் திருத்தேர் வெள்ளோட்ட விழா இன்று சிறப்புற இடம்பெறுவது மனதுக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது.

வேண்டியவற்றை வேண்டுவார்க்கு ஈந்தருளும் காமாட்சி அம்பாள் உரும்பிராய்ப் பதியில் கோயில்கொண்டெழுந்தருளியுள்ளார். சக்தி வழிபாடு இம்மைக்கும், மறுமைக்கும் புண்ணியத்தைத் தருவதாகும். இதனை அறிந்த நம்மவர்கள் வாழுமிடமெல்லாம் ஆலயம் அமைத்து வழிபாடு செய்து ஆன்மிக சிந்தனையோடு வாழும் சமுதாயமாக அன்றும், இன்றும் வழிபாடியற்றுவது பெருமைக்குரியது. உரும்பிராய் வாழ் மக்களின் அன்பைப் பெறுகின்றவளாக அம்பிகை வீற்றிருக் கிறார். அஞ்ஞான இருளை நீக்கி மெய்ஞான ஒளி ஏற்றும் அம்பாளின் சப்பரத் திருவிழா மற்றும் தேர்த் திருவிழாவைத் தரிசித்து அனைவரும் மண்ணில் நல்லவண்ணம் வாழ்வோமாக.

- என்றும் வேண்டும் இன்ப அன்பு-

நல்லை ஆதீன முதல்வர்.



### ஆசிச்செய்தி

உலகம் ஒருதேர். இத்தேரை முதன்முதலாகச் செலுத்தியவர் சிவபெருமான். ஆகாயத்திலே கோட்டை கட்டி மக்களுக்கு கடும்துன்பத்தைச் செய்து வந்தவர்கள் அசுரர்கள். அந்த அசுரர்களைக் கொல்வதற்காக சிவபெருமான் பூமியைத் தேரா கவும், சூரிய சந்திரரை சில்லுகளாகவும், விஸ்ணுவை அம்பாளாகவும் பாவித்து சங்காரம் செய்த வரலாறே தேர்த்திருவிழா. தேரின் சிற்பங்கள் யாவும் உலகத்தின் சிருஷ்டிகளாகவும், தேரின் நடுவே உற்றதெய்வம் உலகத்தையே நடத்துகின்ற சிவனாகவும் விளங்குகின்றன. ஊர்கூடித் தேர்இழுத்தல் என்றொரு பழமொழி வழக்கில் உள்ளது. உலகில் உள்ளவர்கள் எல்லோரும் ஒற்றுமையாக வாழும் போது எக்காரியமும் இலகுவாகி விடுகின்றது. தேர் தாமரை மொட்டைப் போன்றது. மேலே கூம்பு வடிவமும், நடுவே அகன்றும், கீழே கூம்பாயும் அமைவது. தேர்திருவிழாவில் பங்குபற்றுபவர்கள். தேர் இழுப்பவர்கள் சுபீட்சமாக வாழ்வர் என்பது அருள்வாக்கு. இப்பணிக்கு திரு.திருநாவுக்கரசு சபேசன் நிதி உதவியளித்ததுடன் கொட்டகையும் அமைத்துத் தந்துள்ளார். சப்பரத்தை அமைத்து தந்தவர் திருமதி அ.சுப்பிரமணியம் குடும்பத்தினர். இவர்கள் எல்லோருக்கும் அம்பாள் திருவருள் பாலிப்பாராக

கலாநிதி தியாக கங்காதரக் குருக்கள்.



### அம்பாளின் அனுக்கிரகம் அனைவருக்கும் கிட்டட்டும்

ஆலயம் தொழுவது சாலவும் நன்று, என்றார் உலக அன்னையாகிய ஔவைப் பிராட்டியார். பல ஆன்ம கோடிகளின் இன்னல்களையும் இடர்களையும் நீக்கி அருள் பாலிக்கும் ஸ்ரீ காமாட்சித் தாயை சிறுவயதில் இருந்தேவழிபட்டு வந்தோம்.

எமது இந்த ஈடுபாட்டிற்கு எம்மைப் பெற்றவர்கள் வழி காட்டியாய்த் திகழ்ந்தார்கள், ஸ்ரீ காமாட்சி அம்பாளின் மேல் நாம் கொண்ட ஈடுபாட்டினை நன்கறிந்த முன்னாள் நிர்வாக சபைத் தலைவர் அ.இ.தர்மலிங்கம், மஹோற்சவம் ஆரம்பித்த போது தேர்த்திருவிழாவை செய்யும் உந்துதலை ஏற்படுத் தியதுடன் காலப்போக்கில் ஒரு சித்திரத்தேரை அமைக்க வேண்டும் என்ற சிந்தனைக்கும் அத்திபாரமிட்டார், அந்த வகையிலே ஸ்ரீ காமாட்சி அம்பாளின் தேர்த்திருவிழாவைச் செய்யும் பெரும் பாக்கியமும், காமாட்சித் தாயை சிறிய சித்திரத்தேரில் வீதியுலா வருகைதரச் செய்யும் திருவருளும் கிடைத்தது. இன்று வெள்ளோட்ட விழாவைக் கண்குளிரக் காணும் பாக்கியத்தை எண்ணி மனதார மகிழ்கின்றேன்.

இவ்வழகிய சித்திரத்தேரினை அம்பிகையின் திருவருளினாலே உருவாக்க முன்வந்தபோது மனமுவந்து அப்பணியைச் செய்வதற்கான அனுமதி, ஒத்துழைப்புக்களை வழங்கிய பரிபாலன சபையினருக்கு எமது மனமார்ந்த நன்றிகள். சித்திரத்தேரை அமைப்பதற்காகச் சிற்பாலய ஆச்சாரி திரு. பரஞ்சோதி சதீஸ்வரனை ஏற்பாடு செய்து தந்த திரு அ. ஈஸ்வரநாதன் (கோட்டக்கல்விப் பணிப்பாளர்) மற்றும் எனது மைத்துனராகிய திரு சி. விஜயகுமார் (சந்திரன் ) மற்றும் ஆலய நிர்வாக சபை உறுப்பினர்களுடைய அயராத முயற்சி பாராட்டுக்குரியது. ஆச்சாரி திரு பரஞ்சோதி சதீஸ் வரன் ஓர் இளஞ் சிற்பக் கலைஞர். அவரது சிற்பங்களில் சித்திரமும் பேசுகின்றது. அவரும் அவரது குழுவினரும் மேன்மேலும் இத்துறையில் பிரகாசிக்க காமாட்சி அம்பாளின் திருவருள் கிடைக்க வேண்டுமெனப் பிரார்த்தித்து அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றேன்

நிறைவாக, இக் கைங்கரியத்தை நிறைவேற்ற திருவருள் நல்கிய காமாட்சித் தாயை வணங்கி ஆசியுரை வழங்கிய பெரியோர்கள், கலைஞர்கள், நிர்வாக சபை உறுப்பினர்கள் ,அடியார்கள் மற்றும் தேர்த்தரிப்பிடத்தை விரைவாக அமைத்து உதவிய கலைஞர்கள் யாவரது பணியையும் பாராட்டி நன்றி கூறுகின்றேன்.

*மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்*

திருநாவுக்கரசு சபேசன் குடும்பம்.
தேர்த்திருவிழா உபயகாரர்



### அம்பாளின் அருட் அனைவருக்கும்

உரும்பிராய், பலாலி வீதியில் காளிகோயில் என சொல்லப்பட்ட சிற பெருவளர்ச்சியடைந்துள்ளது. அ அம்பாள் அருட்பெருங்குடை நிழல் மக்களுக்கு அருள் புரிந்துகொண்டிருக்கின்றார்.

தேர், வாழ்க்கைத் தத்துவத்தை எமக்குக் கூறு யில்லாத வாழ்க்கையைத் தேர்ந்துகொள் என்பது லின் பொருளாகும்.

திருத்தேர் வெள்ளோட்ட தரிசனம் சைவ மக்க பெறுதற்கரிய பேறாகும். ஐந்தொழில்களில் அழி உணர்த்தி நிற்பது தேர் உற்சவம் ஆகும். மும்மல கா முப்புரங்களை எம்பெருமான் தேரிலே கவர்ந்து வெற் இதன் அடிப்படைத் தத்தவமாகும் ஆன்மாக்க ஆணவத்தை அழித்து அவற்றை உய்விக்கும் பெ தேரேறி வருகிறார் என்பதே இரதோற்சவத்தின் மலநீக்கத்திற்காகப் பாடுபடும் ஆன்மாக்களுக் மிகவும் முக்கியமானது. அருள்மிகு காமாட்சி தேர்த்திருவிழா உபயதாரர்கள் திரு. தி. சபேசன் குடு புதிய சித்திரத் தேரை அமைத்துத் தந்துள்ளார்கள். பு காமாட்சி அம்பாள் ஆரோகணித்து வருகின்ற மனமாரக் கண்டு உள்ளம் உருகி வழிபட்டு அம்பாளி கியங்களும் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் பாளுக்குப் புதிய சப்பரத்தை அமைத்து வழங்கும் மணியம் குடும்பத்தினருக்கும் அம்பாளின் அனுக்கி திக்கின்றோம்.

சைவப் புலவர்
தலைவர், உரும்பிராய் கற்பக விந



### அருளின் உருவே தேரே

எல்லாம் வல்ல ஆதிபராச கின்ற உரும்பிராய் அருள்மிகு பாளின் சித்திரத்தேர், புதிய சப் திற்கு வாழ்த்துச் செய்தி வழங்கு அடைகின்றேன். இச் சித்திரத் தையும் அமைக்க உதவிய அன்புள் திருவிழா, சப்பரத்திருவிழா உ இப்பிரதேச வாழ் மக்களுக்கும் அம்பாளின் அருட் கப் பிரார்த்திப்பதுடன் இன்றைய சித்திரத்தே வெள்ளோட்டம் சிறப்புற அமைய அருளுமாறு அ களைப் பணிகின்றேன்.

சி. எழிலரசன், கிராம அலுவலர், உ

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★ வெள்ளோட்ட விழா சிறப்புற வாழ்த்துவோர் ★★★★★★★★★★★★★★★★★★

**சுந்தரவேல் டிஸ்பென்சரி**
கற்பகப் பிள்ளையார் வீதி, உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.

**நேசன் மணிக்கூடு திருத்தகம் & அழகு மாடம்**
பலாலி வீதி, உரும்பிராய்.

**கீர்த்திகா ரெக்ஸ்ரைல்ஸ்**
பலாலி வீதி, உரும்பிராய் சந்தி, உரும்பிராய்.

**★ கணபதி களஞ்சியம், ★ கணபதிவெதுப்பகம், ★ கணபதி அரைக்கும் ஆலை,**
பலாலி வீதி, உரும்பிராய்.

**உதயன் பான்சி**
உரும்பிராய் சந்தி, உரும்பிராய்.

**தீன்சுவை மிக்சர்**
பலாலி வீதி, உரும்பிராய் சந்தி, உரும்பிராய்.

**பிரசாத் நகையகம்**
177 ஆ, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**அம்பிகை அமுதம் பல்பொருள் வாணிபம்**
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ... என விளங்கும் காமாட்சி அம்பாள் ஆலய

# ... சிறப்பு மலர் - 30.07.2012

### ...ன் அருட்கடாட்சம் ...நக்கும் கிட்டட்டும்

...லி வீதியில் வேப்பமரத்தடியில்
...ல்லப்பட்ட சிறிய ஆலயம், இன்று
...ந்துள்ளது. அருள்மிகு காமாட்சி
...ங்குடை நிழல் பரப்பி இக் கிராம
...க்கின்றார்.
... எமக்குக் கூறுவதாகும். நிலை
...ாள் என்பது தேர் என்ற சொல்
... சைவ மக்களின் வாழ்வினில்
...ல்களில் அழித்தல் தொழிலை
... மும்மல காரியமாக விளங்கும்
...கவர்ந்து வெற்றி பெற்ற வரலாறு
... ஆன்மாக்களைப் பற்றியுள்ள
...விக்கும் பொருட்டு இறைவன்
...ற்சவத்தின் உட்பொருளாகும்.
...மாக்களுக்குத் தேர் உற்சவம்
...கு காமாட்சி அம்பாள் ஆலய
... சபேசன் குடும்பம், இவ்வாண்டு
...ள்ளார்கள். புதிய சித்திரத் தேரில்
... வருகின்ற அழகுக்காட்சியை
...ட்டு அம்பாளிடம் சகல சௌபாக்
... வண்ணம் வாழ்வோமாக. அம்
...து வழங்கும் திருமதி அ. சுப்பிர
...ின் அனுக்கிரகம் கிட்டப் பிரார்த்

...வப் புலவர்: சி. நந்தகுமார்,
...கற்பக விநாயகர் ஆலயம்.

### ...ா தேரேறிவருக

... ஆதிபராசக்தியாய் விளங்கு
... அருள்மிகு ஸ்ரீ காமாட்சி அம்
... புதிய சப்பர வெள்ளோட்டத்
...ய்தி வழங்குவதில் பேருவகை
...இச் சித்திரத் தேரையும் சப்பரத்
...ிய அன்புள்ளங்களிற்கும் தேர்த்
...திருவிழா உபயகாரர்களுக்கும்,
...ளின் அருட் கடாட்சம் கிடைக்
... சித்திரத்தேர், புதிய சப்பர
...ருளுமாறு அன்னையின் பாதங்

...றிவலி, உரும்பிராய் வடக்கு.

### அன்னையின் அருள் அனைவருக்கும் கிட்டட்டும்



அம்பிகையைச் சரணடைந்தால் அதிக வரம் பெறலாம். நம்பினோர் கெடுவதில்லை இது நான்கு மறைத் தீர்ப்பு.அம்பிகையின் கடைக்கண் கடாட்சம் இருந்தால்தான் நாம் முத் திப் பேறாகிய ஆன்ம லட்சியத்தை அடையலாம். ஒன்றாய் அரும்பி பலவாய் விரிந்து இவ்வுல கெங்கும் விரிந்து நிற்கும் அன்னை உரும்பிராய் பலாலி வீதியில் காமாட்சி அம்பாளாக வீற்றிருந்து புகழ் பரப்பி அருளாட்சி செய்கின்றாள். அருள் மிகு காளி கோவில் என வழங்கப் பெற்ற சிறு ஆலயம் காலப்போக்கில் அம்பாளின் அடியவர்கள் அனைவரதும் ஒத்துழைப்பு, விடா முயற்சி காரணமாக வளர்ச்சி அடைந்து பெரிய ஆலயமாக, புதிய சித்திரத்தேர், புதிய சப்பரத்தில் அம்பாள் பவனி வரும் ஆலயமாக விளங்குகின்றது. ஆடி மாதத்தில் ஆடிப்பூரத்தன்று மகோற்சவம் ஆரம்பமாகி பத்துத் தினங்கள் சிறப்பாகத் திருவிழாக்கள் நடைபெறும். மஹோற்சவத்தில் சிகரமாக அமைவது தேர்த்திருவிழா. சைவ சமயத்தின் எழுச்சி விழா. சமுதாய ஒற்று மையை உணர்த்தும் பெருவிழா. நமது புராதன கலைச் செல்வங்களின் மகிமைக்குச் சான்றாகவும் நடமாடும் மரச்சிற்பமாகவும் அசையும் கோயிலாகவும் தேர் அமைகின்றது. உரும் பிராய் காமாட்சி அம்பாள் ஆலயத்தில் இவ்வருடம் புதிய சித்திரத் தேர் உருவாக்கப்பட்டு அத்தோடு புதிய சப்பரமும் உருவாக்கப்பட்டு இன்றைய தினம் வெள்ளோட்டம் இடம் பெறுகின்றது. புதிய சித்திரத்தேரில் காமாட்சி அம்பாள் எழுந்தருளி அருள் பாலிக்கவுள்ளாள். புதிய சித் திரத்தேர் ஏறிவரும் அருள் மிகு காமாட்சி அம்பாளை மனமுருகி உள்ளன்புடன் வழிபட்டு இஷ்டசித்திகள் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக.

திரு ஏ.ஜெகதீஸ்வரன் தலைவர், உரும்பிராய் காமாட்சி அம்பாள் ஆலயம்.

### காமாட்சியே சித்திரத் தேரில் வாரீர்



''நமக்கு இந்தச் சரீரம் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்'' என்பது நாவலர் பெருமான் வாக்கு. உரும்பிராய் பதியிலே சிறிய ஆல யத்திலே அன்னை ஸ்ரீ காமாட்சி அம்பாளாக அமர்ந்து அருள் பாலித்த அம்பிகையின் திருவரு ளாலும், பரிபாலனசபை உறுப்பினர்கள், அம்பிகை அடியவர்கள் யாவரும் ஒன்றுபட்டு எடுத்த பெரு முயற்சியால் கொடிமரம் நாட்டப்பட்டு சுற்றுக் கொட்டகைகள் அமைக்கப்பட்டு 2009 ஆம் ஆண்டு முதல் மஹோற்சவம் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. படைத்தல், காத்தல், அழித் தல், மறைத்தல், அருளல் ஆகிய பஞ்சகிருத்திய உண்மைகளைப் புலப்படுத்துவதே மஹோற்சவம் எனப்படுகின்றது. இவ்விழாக்களில் இரதோற்சவம் அழித்தல் தொழிலைச் சுட்டி நிற்கின்றது. இந்த ஆலயத்தில் இந்தத் திருவிழாவை பெருவிருப்புடன் ஏற்று வருடந்தோறும் சிறப்பாக செய்து வருகின் றனர் உரும்பிராய் வடக்கைச் சேர்ந்தவரும் தற்போது கனடாவில் வசிப்பவருமான திரு. திருநாவுக்கரசு சபேசன் குடும்பத்தினர். இவர்கள் கனடாவில் வசிப்பதால் இவரது ஏற்பாட்டாளர்களாக திரு. விஜயகுமார் குடும்பத்தினர் இப் பணிகளை முன் நின்று செய்துவருகின்றனர். இரதோற்சவத்தின்போது ஸ்ரீ காமாட்சி அம்பிகைக்கென ஒரு நிரந்தர சிற்பத்தேரை உருவாக்க வேண்டும். அத்தேர் பாதுகாப்பாக தரித்து நிற்க அழகிய தேர்க் கொட்டகை அமைக்கவேண்டும் என்னும் எண்ணத்தை இவர்களது மனதில் அம்பிகை தோற்று வித்து அவளது அருளாலும் சபேசன் அவர்களின் நிதி ஈட்டத்தாலும் பரிபாலன சபையின் முயற்சியாலும் இச் சித்திரத் தேரை உருவாக்கும் பொறுப்பை தனுஷா சிற்பாலய ஆச்சாரி திரு. பரஞ்சோதி சதீஸ்வரனிடம் ஒப்படைத்து வேலைகள் நன்நாளில் ஆரம்பிக்கப்பட்டது. இப் பெரு முயற்சி நிறைவடைந்து இன்று இப்புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம் நடைபெறவிருக்கின்றமை பெரு மகிழ்ச்சிக்குரியதே. இச்சித்திரத் தேர் வெள்ளோட்டத் திற்கு முக்கிய காரணகர்த்தாவாக விளங்குவது காமாட்சியின் திருவருளும், திரு. திருநாவுக்கரசு சபேசன் அவர்களின் நிதி யீட்டமும், பரிபாலன சபை உறுப்பினர்கள் மற்றும் அம்பிகை அடியார்கள் திரு. விஜயகுமார் குடும்பத் தினரது அயராத முயற்சியுமேயாகும். ஸ்தபதி திரு. பரஞ்சோதி சதீஸ்வரன் அவர்கள் சிற்பக் கலைஞர். அவரது கன்னிப்படைப்பாக இது உருவாகியுள்ளது. அவரும் அவரது குழுவினரதும் அயராத உழைப்பு இன்று நாம் காணும் சித்திரத்தேர். இவர்களது பணிபோற்றிப் பாராட்டத்தக்கதாகும். இப்புனிதமான தேரின் வடத்தை கைபிடித்து தேரினை இழுப்பது நாம் செய்த புண்ணியமாகும். இதனால் தர்மம் நிலைத்து அதர்மம் நீங்கி காமாட்சித்தாயின் அருளும் கடாட்சமும் எல்லோருக்கும் கிடைப்பதாக. இப்புனிதமான நன்நாளில் சகலரும் அருளும், ஆசியும் பெற்று சிறப்பாக வாழ ஸ்ரீ காமாட்சித்தாயைப் பிரார்த்தித்து எனது நல்லாசிகளையும், வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

''அம்பிகையைத் தொழ அவனியெலாம் சிறக்கும்''

அ. ஈஸ்வரநாதன், கோட்டக்கல்விப் பணிப்பாளர்.

### அம்பிகையைத் துதித்து அவள் அருள் பெறுவோம்

சீரும் திருவும் சைவமும் தமிழும் தழைத்தோங்கும் உரும்பிராய் என்னும் இக்கிராமத்தின் மரங்கள் அடர்ந்த 'வேம்பன்சீமா' என்ற காணியில் ஒரு புளியமரத்தைத் தறித்த போது திருமதி சின்னன் அருணர் அவர்களின் உடம்பில் அம்பாள் ஆட்கொண்டு தான் இன்னார் என்றும், தனக்கு விளக்கு வைக்கும்படியும் கேட்டுக் கொண்டதற் கிணங்கி திருமதி அருணர் ஒரு பூவரசு மரத்தில் விளக்கு வைத்து வந்தார். அப்போது அதன் அருகில் தோன்றிய வேப்பமரம் தல விருச்சமாக வளர்ந்து வர வழிபாடு நடத்தி வந்தனர்.



பின்னர் அருணரின் தம்பியாகிய முருகர் சின்னத்தம்பி 1925 ஆம் ஆண்டளவில் அம்பாளுக்குச் சிறு ஆலயம் அமைத்து 1928 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் கு. பொன்னையா குருக்களால் நடத்தப்பட்டது என ஆலய வரலாறு கூறுகின்றது. சூழலில் வாழ்ந்த பெண்களால் பஜனைகள் சிறப்பாக இடம்பெற்று ஆலயத் தொண்டர்களால் சிறு துளி பெரு வெள்ளமாக வளர்ச்சிகாணும் வேளை மஞ்சக் கிணறு ஒன்று அமைக் கப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஆலய விதிமுறைகளுக்கமைய புனரமைப்பும், மஹோற்சவமும், காலத்துக்கு காலம் பணிசெய்த நிர்வாக சபையினரின் முயற்சியால் வளர்ச்சி கண்டது. 'வேம்பன் சீமா' வள வில் அருள்பாலிக்கும் அம்பிகையின் ஆலயத்துக்கு அருகில் புலம் பெயர் அம்பாள் அடியவர்களின் ஆதரவுடன் காமாட்சி கல்யாண மண்டபம் அமையப் பெற்றது. 5 ஆவது ஆண்டு மஹோற்சவம் இடம்பெறும் இவ் வேளையில் புதிய சித்திரத் தேரினை ஊர்ப் பெருமகனும் தற்போது கனடாவில் வசித்துவருபவருமான திரு. சபேசன் திருநாவுக்கரசு மன முவந்து செய்ய முன்வந்தமையும், அடியவர் திருமதி அ. சுப்பிரமணியம் குடும்பத்தினர் புதிய சப்பரத்தினை அம்பாளுக்கு அர்ப்பணம் செய்ய முன்வந்தமைக்கும் ஆலய வளர்ச்சி, ஆலய தொண்டில் ஈடுபட்டுவரும் நிர்வாக சபையினர் தமது நன்றிகளையும் பாராட்டுக்களையும் இவ்வேளை தெரிவித்துக் கொள்கின்றனர். 'அருள் இல்லாருக்கு அவ்வுலகம் இல்லை என்பதற்கிணங்க அம்பாளுக்கு தொண்டு செய்து அவளருள் பெறுவோம்.

- செயலாளர், பரிபாலன சபையினர்.

### சகல செல்வங்களையும் அம்பாள் அருளப் பிரார்த்திக்கின்றோம்



க. சந்திரபாலன் தொண்டர்.



பா. சிறிகெங்கபாலா பொருளாளர்.

சகல செல்வங்களும் நிறைந்த ஈழத் திருநாட்டில் சைவமும், தமிழும் போற்றப் படுவதும், அறம் வளர்க்கும் சான்றோர் கள், பெருமக்கள், தருமவான்கள் என நல் லோர்கள் வாழ்ந்துவரும் உரும்பிராய் பதி யிலே அருள் பாலித்துக் கொண்டு காளி அம்பாள் என வழங்கும் காமாட்சி அம்பாள் ஆலய புதிய சித்திரத் தேர், புதிய சப்பர வெள்ளோட்ட விழாக்கள் சிறப்பாக இன்று இடம்பெற உள்ளது. இந்த அருங்கைங்கரியத்தை வழங்கிய உபயகா ரர்களுக்கு சகல செல்வங்களையும் அம்பாள் அருளப் பிரார்த்திக்கின்றோம்.


**ஐங்கரன் தொலைத்தொடர்பு நிலையம்**
சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

**சதா ஹாட்வெயர்**
உரும்பிராய் சந்தி, உரும்பிராய்.

**பாலா மில்**
பலாலி வீதி, உரும்பிராய்.

**சன்விக் பொறியியலாளர்கள் கண்ணாடி, தளபாட அலுமினிய பொருத்துநர்கள்**
கொழும்பு - யாழ்ப்பாணம்
தொ.பே. 077 8999 269, 0777 237823

**ரூபன் பலசரக்கு வியாபார நிலையம்**
உரும்பிராய் சந்தி, உரும்பிராய்.

**மணியம் ஸ்ரோர்ஸ்**
பலாலி வீதி, உரும்பிராய்.

**ரவி பியூட்டி சென்ரர்**
பலாலி வீதி, உரும்பிராய்.

**சாயி பி.வி.சி. பைப் & பிற்றிங்**
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 222 4549, 3737605


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரவெட்டி சந்தைக் கட்டடம் சபை நிதியில் புனரமைப்பு

வடமராட்சி, ஜூலை 30

கரவெட்டி கோயில் சந்தைக் கட்டடம் சபை நிதியிலிருந்து திருத்தியமைக்கப் படவுள்ளது என்று கரவெட்டிப் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் தெரிவிக் கப்பட்டது.

இது தொடர்பாக கூட்டத்துக்குத் தலைமை வகித்த சபைத் தலைவர் பொ.வியாகேசு கருத்துத் தெரிவிக்கையில்:-

நெல்சிப் திட்டத்தின் கீழ் கோயில் சந்தை புனரமைப்புச்செய்யாமல்நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்று பத்திரிகையில் செய்தி வந்துள்ளது.

சபையினர் சம்மதம் தெரிவித்தால் ஒதுக்கீட்டின் ஒரு பகுதி நிதியில் சந்தை திருத்த வேலையை மேற்கொள்ளலாம் என்றார்.

இந்தக் கட்டடத்தில், சந்தையின் இரு பக்கமும் வீதி காணப்படுவதால் இதனை எல்லைப்படுத்தும் போது சிறிய பகுதியே சந்தைக்கு வரும் என ஆளும் தரப்பு உறுப்பினர் க. இரத்தினம் கருத்துக் கூறினார்.

எல்லைப்படுத்தாமல் சந்தைக் கட்டடத்தைப் புனரமைக்கலாம் என்று சபைத் தலைவர் தெரிவித்தார்.

இறுதியாக சபை நிதியிலிருந்தே கோயில் சந்தைக் கட்டடம் திருத்தியமைக் கப்படும் எனத் தீர்மானிக்கப் பட்டது.

(ம-8)


# பதவி வெற்றிடம்

**50** ஆண்டுகள் மக்களிற்கு மகத்தான சேவையினை மேற்கொண்டுள்ள அரச காப்புறுதி நிறுவனமான இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் கிளிநொச்சிக் கிளைக்குப் பின்வரும் பதவிகளிற்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

### Marketing Executive சந்தைப்படுத்தல் அதிகாரி

தகைமை
- காப்புறுதித் துறையில் 1 வருட முன் அனுபவம் அவசியம்.
- சிறந்த தலைமைத்துவ ஆற்றல்.
- வயது 25-40

நன்மைகள்
- அடிப்படைச் சம்பளம், வாகனப்படி உள்ளடங்கலாக மாதம் 35,000/-
- இலவசக் காப்புறுதி, மருத்துவச் செலவுக் கொடுப்பனவுகள்
- E.P.F, E.T.F
- மற்றும் பல

### Bank Assutance Officer வங்கியின் காப்புறுதி உத்தியோகஸ்தர்

தகைமை
- காப்புறுதித் துறையில் 1 வருட முன் அனுபவம் அவசியம்.
- கல்வித் தகைமை G.C.E. A/L
- வயது 20 – 25



நன்மைகள்
- அடிப்படைச் சம்பளம்
- போனஸ் கொடுப்பனவு
- மோட்டார் சைக்கிள்
- மருத்துவச் செலவு

### Team Leader குழுத் தலைவர்

தகைமை
- காப்புறுதித் துறையில் 2 வருட முன் அனுபவம்
- G.C.E. A/L
- வயது 21 – 40

### Advisor ஆலோசகர்

தகைமை
- 18 வயது பூர்த்தி.
- G.C.E. O/L கணிதம், தமிழ் உள்ளடங்கலாக 6 பாடம் சித்தி.
- பகுதி நேரமாக வேலை செய்ய விரும்புகின்றவர்களும் விண்ணப்பிக்க முடியும்.
- அரச மற்றும் தனியார் துறைகளிலிருந்து ஓய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.



தகுதியானவர்கள் தொலைபேசி இலக்கம் உள்ளடங்கிய சுயவிபரக் கோவையினை நீங்கள் விண்ணப்பிக்கும் பதவி நிலையைக் குறிப்பிட்டு எதிர்வரும் 10.08.2012 முன்னர் கிளைக்குக் கிடைக்கக் கூடியவாறு பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

தற்போது A/L பரீட்சையை மேற்கொண்டிருக்கும் மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்

முகாமையாளர்,
ஸ்ரீலங்கா இன்சுரன்ஸ்,
இல. 31, A 9 வீதி, கிளிநொச்சி.



# VACANCIES

**Computer Instructors** (Full Time)

**Course Counselors** (Full Time)

19 வயதிற்கு மேற்பட்ட க.பொ.த(சா.த) அடிப்படை தகைமையுடையவராக இருப்பதுடன் பின்வருவனவற்றுள் ஒன்றையேனும் கொண்டிருத்தல் வேண்டும்.

01. Office Application
02. Graphics
03. Programming
04. Web designing
05. Multimedia
06. Accounting .

Auto CAD, Maya, 3D Studio Max, மற்றும் Computer Hardware கற்பிக்க கூடிய தகுதியும் முன்னனுபவமும் உடையவர்கள் (Part Time or Full Time)

எமது **யாழ்நகர், சாவகச்சேரி, நல்லூர், சுன்னாகம். மானிப்பாய், நெல்லியடி, கிளிநொச்சி, தண்ணீரூற்று, வவுனியா, செட்டிகுளம், நெளுக்குளம், புதுக்குளம்** கிளைகளில் பணியாற்ற விரும்புவோர் விண்ணப்பிக்கவும்,

**ஒரு வாரத்துக்குள் விண்ணப்பிக்கவும்**

**TECHNO WORLD Studies (Pvt) Ltd**

அனுப்பவேண்டிய முகவரி
**The Human Resource Manager**
**TECHNO WORLD Studies (Pvt) Ltd**
**No.05, Station Road, Karappankadu, Vavuniya.**



உ
ஐயனார் துணை

# அனலைதீவு – நயினாகுளம் கூழாவடியுறை அருள்மிகு பூர்ணாதேவி புஷ்கலாதேவி சமேத ஹரிஹர புத்திரர் ஆலய வருடாந்த மஹோற்சவ பெருந்திருவிழா – 2012



**30.07.2012** திங்கள் 8ஆம் திருவிழா முற்பகல் - 108 சங்காபிஷேகம், சந்தன அலங்காரம், மாலை - சப்பரத உற்சவம் (சப்பறத் திருவிழா)

**31.07.2012** செவ்வாய் 9ஆம் திருவிழா முற்பகல் 10 மணிக்குத் தேர்த்திருவிழா தொடர்ந்து பச்சை சாத்துதல், மஹா அபிஷேகம் (108 சங்காபிஷேகம்) பஞ்சகமுக அர்ச்சனை

**01.08.2012** புதன் 10ஆம் திருவிழா - முற்பகல் தீர்த்தத் திருவிழா (காலை 9 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும், யாக கும்ப அபிஷேகமும் நடைபெறும். மாலை துவஜா அவரோகணம் (கொடியிறக்கம்), சண்டேஸ்வரர் உற்சவம், ஆச்சாரியார் உற்சவம் நடைபெறும்.

அடியார்கள் அனைவரும் தங்களால் இயன்ற பால், தயிர், இளநீர் போன்ற அபிஷேகப் பொருள்களையும் பூக்கள் போன்றவற்றையும் ஆலயத்தில் கொடுத்து திருவிழா சிறப்புற நடைபெற ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். நிதியுதவி வழங்க விரும்பும் அடியார்கள் பரிபாலன சபையினருடன் தொடர்புகொள்ளவும்.

**தேர்த்திருவிழா தினத்தன்று காலை 8 மணிக்கு விசேட படகு சேவை இடம்பெறும்.**

அனைவரும் வருக ஐயன் அருள் பெறுக!
"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

அனலைதீவு - 05

பரிபாலன சபையினர்,
ஐயனார் ஆலயம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்புற நடந்தேறிய அரியாலை தின நிகழ்வுகள்



யாழ்ப்பாணம், ஜூலை 30

நீண்ட காலங்களாக புலம்பெயர் நாடுகளில் வசிக்கும் அரியாலையைச் சேர்ந்த மக்களின் ஏற்பாட்டில், சர்வதேச அரியாலை தினம் நேற்றுமுன்தினம் அரியாலையில் கொண்டாடப்பட்டது.

நோர்வேயை வதிவிடமாகக் கொண்ட எஸ். அகிலன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், சனிக்கிழமை காலை 6 மணி முதல் வடமாகாண ரீதியிலான 15 மைல் சைக்கிள் ஓட்டம், ஐந்து மைல் மரதன் ஓட்டம், பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப்போட்டிகள் அரியாலை சனசமூக நிலையத்தில் இருந்து ஆரம்பமாகின.

அதனைத்தொடர்ந்து அரியாலையைச் சேர்ந்த மக்கள், சிறுவர்களுக்கான பல்வேறு போட்டிகளும், விநோத உடைப் போட்டிகளும் நடைபெற்றன.

சறுக்குமரம் ஏறும் போட்டியில் கலந்துகொண்டு வெற்றியீட்டிய சிறுவன் தி.கிரிசாந் அங்கே வைக்கப்பட்டிருந்த பணத்தைப் பரிசாகப் பெற்றுக்கொண்டான். போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு அரியாலையைச் சேர்ந்த புலம்பெயர் மக்கள் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தனர்.

அரியாலை தின இரவு நிகழ்வுகளில் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தில் கலை நிகழ்வுகள் இடம் பெற்றதுடன் குடும்பங்களுக்கான உதவிகள் வழங்கும் நிகழ்வுகளும் இடம் பெற்றன. பெருமளவு மக்கள் இந்த விழாவில் கலந்து கொண்டனர். (3-7)

வடிகாலில் கழிவுப் பொருள் தேக்கம்:

# சங்கானை சந்தைப் பகுதியில் சகிக்க முடியாத துர்நாற்றம்

சங்கானை, ஜூலை 30

சங்கானை பிரான்பற்று வீதியில் மீன் சந்தைக்கு முன்பாக உள்ள வடிகாலில் கழிவுப் பொருள்கள் தேங்கி நிற்பதால் துர்நாற்றமும் டெங்கு நுளம்புகள் பரவக்கூடிய சூழ்நிலையும் காணப்படுகின்றன.

இதனால் அந்த வழியால் பயணம் செய்யும் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதோடு, சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கமாட்டார்களா? என்ற ஆதங்கத்தையும் வெளிப்படுத்துகின்றனர்.

இந்த வடிகால், வலி. மேற்குப் பிரதேச சபையால் சங்கானை மண்டியற்குளத்துக்கு மழை நீர் செல்வதற்காக அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (3-29)

# சந்நிதியான் திருவிழாவுக்கு முன்னேற்பாட்டு நடவடிக்கை

வடமராட்சி, ஜூலை 30

எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாக இருக்கும் தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலய வருடாந்தப் பெருந் திருவிழாவுக்கான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் இ.த. ஜெயசீலன் தலைமையில் நடைபெற்ற பெருந் திருவிழா தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தில் ஆலய நிர்வாகிகள், பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர், இ.போ.ச. மற்றும் தனியார் பஸ்சேவை நிர்வாக அதிகாரிகள் உள்ளிட்ட பல் வேறு திணைக்கள பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டனர்.

பெருந்திருவிழாவுக்கு வரும் பக்தர்களுக்குத் தேவையான குடிதண்ணீர், போக்கு வரத்து, பாதுகாப்பு, வைத்திய வசதிகளைச் செய்து கொடுப்பதென இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (3-8)

# சமூக சேவைத் திணைக்களம் நிதியுதவி

கைதடி, ஜூலை 30

யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் கீழ் இயங்கும் கைதடி தொழிற்பூங்காவில் சமையலறை ஒன்றை அமைப்பதற்காக வடக்கு மாகாண சமூக சேவைத் திணைக்களம் ஐந்து லட்சம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது என யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் தலைவர் வி. கன கசபை தெரிவித்துள்ளார்.

நீண்டகாலமாக சமையலறை சீரற்ற நிலையில் இருந்து வருவதாகவும் இந்த நிதி ஒதுக்கீட்டின் மூலம் விரைவில் புதிய சமையலறை ஒன்றை தாம் அமைக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (3-288)

## சுவையான, ஊட்டச்சத்துள்ள புதிய உணவு வகைகளைக் கண்டறியும் ஆராய்ச்சி

# மாபெரும் சமையல் போட்டி

**யாழ்**.போதனா வைத்தியசாலை நீரிழிவு சிகிச்சை நிலையம் சுவையான சத்துள்ள உணவு வகைகளைக் கண்டறியும் ஆராய்ச்சி ஒன்றை ஆரம்பித்துள்ளது. இதற்கு பொதுமக்களின் ஆதரவை நாடி நிற்கின்றது. சமையல் நிபுணர்களே! சமையற்கலை ஆர்வலர்களே!! புதிய உணவைக் கண்டறியும் ஆராய்ச்சியை உங்கள் சமையலறையில் இன்றே ஆரம்பியுங்கள். வரும் ஒரு மாத காலத்திற்குள் அவ்வாறான உணவு ஒன்றை நீங்கள் கண்டுபிடிக்கும் பட்சத்தில் எங்களுக்கு எழுதி அனுப்புங்கள். நீரிழிவு சிகிச்சை நிலையமானது நடத்தவுள்ள மாபெரும் சமையற்போட்டியில் கலந்து கொள்ளுங்கள். நீங்களும் ஒரு வெற்றியாளராக இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்!

இந்தப் போட்டியில் ஆறுவகைகளில் உணவுகள் தயாரிக்கப்படவுள்ளன. பிரதான உணவு (சைவம்), பிரதான உணவு (அசைவம்), சிற்றுண்டிகள் (சைவம்), சிற்றுண்டிகள் (அசைவம்), உலர்உணவுகள் (சைவம்), பானங்கள் (சைவம்) என்பனவாகும்.

ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் வெற்றியாளர்களுக்கு மொத்தமாக ஒரு லட்சத்து எண்பதினாயிரம் ரூபா பெறுமதியான பணப்பரிசில் காத்திருக்கின்றது.மேலும் பங்குபற்றும் அனைவருக்கும் இரண்டாயிரம் ரூபா பணப்பரிசும் சான்றிதழும் வழங்கப்படும்.ஒவ்வொரு பிரிவிலும் முதல் ஆறு இடங்களைப் பெறும் சமையற் குறிப்புகள் புத்தகமாக அச்சிட்டு வெளியிடப்படும்.

இந்தப் போட்டியின் வெற்றியாளர்களைத் தெரிவு செய்த மத்தியஸ்தர் குழுவினதும்,உங்கள் உணவைச் சுவைத்த பொதுமக்களினதும் புள்ளிகள் தீர்மானிக்கும். உணவின் சுவைக்கு 20 புள்ளிகள், உணவின் தோற்றத்துக்கு 20 புள்ளிகள்,போசனைப்பெறுமானத்துக்கு 20 புள்ளிகள், மலிவு விலைக்கு 15 புள்ளிகள், தயாரிக்கும் பொருள்களின் கிடைக்கும் தன்மைக்கு 15புள்ளிகள், இலகு செய்முறைக்கு 10 புள்ளிகள் என்ற அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும்.

போட்டி விதிமுறைகளாவன பின்வருமாறு-

பருப்புவகைகள், அவரையினங்களில் பயறு,கௌபி, உழுந்து என்பன, சகல வகையான மரக்கறிகள், மரவள்ளிக்கிழங்கு தவிர்ந்த கிழங்கு வகைகள், இலை வகைகள் யாவும் பலாப்பழம், மாம்பழம், பேரீச்சம்பழம் நீங்கலாக ஏனைய பழவகைகள்,சோயாமீற்,சோயாஅவரை, பால், தயிர், மோர், பன்னீர்,முட்டை,கோழி இறைச்சி என்பன,கடல் உணவுகளில் மீன், இறால், சுறா, கருவாடு போன்றன, வாசனைத்திரவியங்கள் உதாரணமாக, கடுகு, மிளகு, வெந்தயம், சீரகம்,ஏலக்காய், கராம்பு,கறிவேப்பிலை போன்றன மற்றும் நிறமூட்டிகள்,செயற்கைச் சுவையூட்டிகள், உள்ளி, வெங்காயம், மிளகாய், மிளகாய்த்தூள், புளி, எலுமிச்சைப்பழச்சாறு என்பனவற்றையும் தாராளமாகச் சேர்க்கலாம்.

சீனி, சர்க்கரை, பனங்கட்டி, பழப்பாகு, ரின்பால், ஐசிங்சீனி போன்ற இனிப்புப் பதார்த்தங்கள், நண்டு, கணவாய் போன்றன, அரிசி வகைகள் யாவும், மா வகைகளில் அரிசிமா,ஆட்டாமா, குரக்கன் மா, கோதுமைமா, பட்டர், மாஜரின், நெய், சீஸ் என்பன, ரவை, சவ்வரிசி, நூடில்ஸ் மற்றும் கச்சான், கஜு, பாண்(றஸ்க்தூள் நீங்கலாக) என்பனவற்றை முற்றாகத் தவிர்க்கவேண்டும்.

எண்ணெய் வகைகளில், நல்லெண்ணெய்,சூரியகாந்தி எண்ணெய், தவிட்டு எண்ணெய்(Rice brand oil), Canola oil, ஒலிவ் எண்ணெய் போன்றவற்றை குழைப்பதற்கோ அல்லது tost செய்வதற்கோ பாவிக்கலாம் (பொரிப்பதற்குஅல்ல) தேங்காய்ப்பூ மிகச்சிறியளவில் சேர்க்கலாம்.

இந்தப் போட்டியில் நீங்கள் பங்குபற்ற விரும்பின், நீங்கள் தயாரிக்கும் உணவு மேற்கூறப்பட்ட ஆறு பிரிவுகளில் எந்தப் பிரிவைச் சேர்ந்தது என்பதையும்,அதற்கு நீங்கள் சூட்டியுள்ள பெயரையும் குறிப்பிட்டு,தேவையான பொருள்களை பட்டியலிட்டு,உங்களது பெயர்,முகவரி,தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் என்பவற்றை உள்ளடக்கிய விண்ணப்பப் படிவம் ஒன்றைத் தயாரித்து எமக்கு அனுப்பிவையுங்கள். ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்களை அனுப்பலாம்.

**அனுப்பவேண்டிய முகவரி**
**"சமையற் போட்டி"**
**நீரிழிவு சிகிச்சை நிலையம்,**
**யாழ்.போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

*அனுப்ப வேண்டிய முடிவு திகதி-20.08.2012.*

*நேரில் வருகை தந்து விண்ணப்பிக்க விரும்புவோர் கிழமை நாள்களில் காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரையும், சனிக்கிழமைகளில் நண்பகல் 12 மணி வரையும் திறந்திருக்கும் எமது நிலையத்துக்கு வந்து விண்ணப்பிக்கலாம்.*

*இது தொடர்பான சந்தேகங்கள் இருப்பின் 021-2220179 என்ற எமது தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள். நீங்கள் அனுப்பும் விண்ணப்பப் படிவங்கள் பரிசீலிக்கப்பட்டு போட்டி தொடர்பான மேலதிக விவரங்கள் தங்களுக்கு அறியத்தரப்படும்.*

ஊடக அனுசரணை:- உதயன்

# கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவரை இணைக்கும் வாரக் கொண்டாட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 30

கூட்டுறவுச் சங்கங்களில் அங்கத்தவர்களை புதிதாக இணைக்கும் முகமாக அங்கத்தவர் இணைப்பு வாரமாக கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

தற்போதைய சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு கூட்டுறவு சங்கங்கள் அங்கத்தவர்களை புதிதாக இணைக்கும் நடவடிக்கையில் அதிக கவனம் செலுத்தவில்லை.

கடந்த வருடத்திலும் மிக குறைந்த அங்கத்தவர்களே கூட்டுறவு சங்கங்களில் சந்தா பணத்தை செலுத்தி அங்கத்தவர்களாக இணைத்து கொண்டனர்.

வடமாகாணத்தில் கூட்டுறவு துறையை அபிவிருத்தி செய்யவும் மக்கள் மத்தியில் அதன் விழிப்புணர்வை ஏற்படுத்தி மக்களை அதில் இணைத்து கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கெனச் சங்கங்களில் ஒரு வாரம் மட்டும் புதிதாக அங்கத்தவர்களை இணைத்து மக்களின் மத்தியில் கூட்டுறவு விழிப்புணர்வை ஏற்படுத்தி வைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ம-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வந்தனா
கரவெட்டி

# அழைப்பு

பெண்ணே!
உன் திருமணத்தை
நிச்சயிக்க நினைத்த நாளில்
மட்டும் தான் சொர்க்கத்துக்கு
விடுமுறையா?
கல்யாண பத்திரிகையிலேனும்
உன்பேரை அச்சில் பார்க்க
ஆசைப்பட்டாய்
ஆனால் அச்சு இயந்திரங்கள் போலவே
மனித இயந்திரங்களுக்கு
மனசில்லை
முன்னொரு பிராயத்தில்
பூக்களின் அணிவகுப்பு மரியாதையை
உன் கூந்தலில் ஏற்றுக் கொண்டாய்
இன்றும் தான் சூடுகின்றாய்
நீ.. விதவையல்ல என்று
வெளிக்காட்ட மட்டும் தான்
கலியுக சீதையே!
இந்த வரதட்சணை வில்லை
வளைப்பது யார்?
இன்றைய ராமர்களோ கோழைகளாய்!
பாவம் ஜனகர்கள்
என்ன செய்வார்கள்
இனி நீயே ஓடிப்பதே.. நிஜாயம்
எங்கே...
சீதைகளே கொஞ்சம் ஒன்று சேருங்களேன்.

# பெண்களுக்கு தற்காப்புக்கலை அவசியம்

சு.பிரியங்கா

வீரமங்கைகள் வழிவந்த வீரப் பெண்களும் நாங்கள் தான், பாரதி தேசத்துப் புதுமைப் பெண்களும் நாங்கள் தான். இருந்தும் நம் பெண் இனம் இன்றுவரையும் அடங்கி ஒடுங்கி மாற்றானுக்குப் பயந்தே வாழ்கின்றது.

ஒரு பெண் அடக்கமாக இருப்பது தவறில்லை. இருந்தாலும் தேவையான விடயங்களில் அடங்கியும், தேவையற்ற தப்பான விடயங்களில் பாயும் வீரமகளாயும் இருக்க வேண்டும்.

இன்றைய காலகட்டத்தில் தற்காப்புக்கலை பெண்களுக்கு அவசியமாக இருந்த போதும் அவர்களின் குடும்பமோ அல்லது அந்தச் சூழலில் வாழ்பவர்களோ பெண்களுக்கான தற்காப்புக் கலைக்கு முக்கிய இடம் கொடுப்பதில்லை.

இதற்கு காரணம் பெண்ணாகப் பிறந்தவள் அடக்கமாக வீட்டில் இருக்க வேண்டும் என்பது தான். இவற்றை யெல்லாம் மீறி ஒரு கிராமத்திலோ அல்லது நகரத்திலோ பெண்கள் தற்காப்புக் கலையைக் கற்றுக்கொண்டால் அந்தப் பெண்களை தப்பான கண்ணோட்டத்தில் பார்ப்பவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

ஓர் ஆண்மகனைப் போன்று பெண்ணும் சுதந்திரமாக வாழப்பிறந்தவள். ஏன் அவளை மட்டும் வேறாகப் பிரித்துப் பார்க்கிறீர்கள் இன்று நாம் வாழும் சூழலில் பெண்களுக்குத் தற்காப்புக் கலை அவசியம் என்பதை ஏன் இன்னும் புரிந்து கொள்ளாது இருக்கின்றீர்கள். இன்று பெண் தனியாக ஓர் இடத்திற்கு செல்ல முடிகின்றதா? எங்கு பார்த்தாலும் பெண் வன்முறைக்கு உட்படுத்தப்படுகின்றாள். இவ்வாறான செயல்களையெல்லாம் இல்லாது ஒழிப்பதற்கு தற்காப்புக் கலையை பெண்கள் கற்க வேண்டும் ஒவ்வொரு பெண்ணும் வீரப்பெண்கள் என்பதை அனைவரும் அறிய வேண்டும். பெண்களின் வீரத்தை நாளை பரணி பாடும் என்பதை யாராலும் மறுக்க முடியாத உண்மை என்பதை புரியவைக்க அணைத்துக் கரங்களும் விண்ணைத் தொடும் அளவிற்கு உயரட்டும்.



# நடப்புகளை அறிவோமே...

தீபகி

வீட்டில் இருக்கும் பெண்களில் பலருக்கு நாட்டு நடப்போ, உலக நடப்போ எதுவும் தெரிவதில்லை. அதை அறிந்து கொள்ளவும் முயற்சிப்பதில்லை.

நாட்டில் நடக்கும் பல சம்பவங்களை ஏன் பக்கத்தில் நடக்கும் சம்பவங்களைக் கூட யாராவது சொல்லித்தான் தெரிய வருகிறது என்றால் பாருங்களேன்.



ஆனால் இவர்கள் வீட்டில் நேரகாலம் பாராது ரீவி ஓடிக்கொண்டே இருக்கும், வானொலி பாடிக்கொண்டே இவையெல்லாம் செய்தி நேரங்களில் சனல்கள் மாறிக் கொள்வது தான் பெரும் வேதனைக்குரிய விடயம்.

பெண்களே, உங்கள் கைகளில் தான் தாய்மையின் வளர்ப்பு எனும் பெரும் பொறுப்பு இருக்கின்றது.

'எந்தக்குழந்தையும் மண்ணில் பிறக்கையில் நல்ல குழந்தைதான் அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே' என்பார்கள்.

உங்கள் பிள்ளைகளை நல்லவர்களாக வல்லவர்களாக மாற்றுவதற்கு, அறிவாளிகளாக கல்விமான்களாக உருவாக்குவதற்கு நீங்கள்....!

உலக நடப்பு தெரியாமல் இருப்பது எவ்வளவு கேவலம். எனவே நல்லவற்றையும் பாருங்கள், நல்லவற்றையும் வாசியுங்கள். அறிவு ஆற்றலும் உள்ள குழந்தைகளை உருவாக்குங்கள்.

திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர்
"திலகம்",
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .



# நா காக்க....

ஒருவர் நல்லவரா...? கெட்டவரா...? என்பதை அவரது பேச்சுத்திறனை வைத்துக் கொண்டு தான் இந்தச் சமூகம் எடை போட்டுக் கொள்கின்றது. நீங்கள் எவ்வளவுதான் நல்லவராக இருந்தாலும் உங்கள் பேச்சில் கவனம் இல்லாமல் இருந்தால் இந்தச் சமூகம் ஒரு போதும் உங்களுக்கு நல்ல பெயரை வழங்கப் போவதில்லை இதனையே 'யாகவாராயினும் நாகாக்க' என்று வள்ளுவர் சொல்கிறார்.

தோழிகளே, உங்களுக்கு வேலைச் சுமை அதிகமாக இருக்கலாம். அதனால் மற்றவர்கள் மீது உங்களை அறியாமலே நீங்கள் எரிந்து விழலாம், வார்த்தைகளை அள்ளிக்கொட்டலாம். ஆனால் நிதானமாக யோசித்துப் பாருங்கள். சம்பந்தமே இல்லாத ஒருவரைத் திட்டித் தீர்க்கலாமா...?கொட்டிய வார்த்தைகளை மீளத்தான் பெற முடியுமா....? எப்போதும் உங்களுடைய பேச்சு மற்றவர்களை ஆறுதல் படுத்தக்கூடியதாக, அன்பானதாக, இதமானதாக இருக்கவேண்டும்.

உங்களிடம் தவறு இருக்கிறதென்றால் அது யாராக இருந்தாலும் மன்னிப்புக் கேட்டுப் பழகிக்கொள்ளுங்கள். புதியவர் ஒருவர் வந்தால் வணக்கம் சொல்லி இன்முகத்தோடு வரவேற்கத் தயங்காதீர்கள்.

நீங்கள் அலுவலகத்தில் பணிபுரிபவராக இருந்தால் அலுவலகத் தொலைபேசியைப் பயன்படுத்தும் போது ஒழுக்கநெறியைக் கடைப்பிடியுங்கள், அலுவலகத் தொலைபேசியில் ஒருபோதும் அரட்டை அடிக்காதீர்கள், சத்தமாக பேசி மற்றவர்களை குழப்பாதீர்கள்.

உங்கள் கையடக்கத் தொலைபேசியின் அழைப்பு ஓசையை ஒருபோதும் சத்தமாக வைத்திருக்காதீர்கள். அதைவிட இயன்றவரை அலுவலகத்தில் உங்கள் கையடக்கத் தொலைபேசியை நிறுத்தி வைத்திருங்கள்.

உங்களது இதமான பேச்சும், எளிமையான செயற்பாடுகளும் உங்களுக்கு நல்ல பிள்ளை என்ற பெயரைத் தரப்போகின்றது என்பதை ஒருபோதும் மறந்துவிடாதீர்கள்.

# நிழலாக தொடர்ந்திடுமே....

ந.சந்திரலிங்கம்
அச்சுவேலி

தாரமாய் தாயாய்
தெய்வமாய் நடமாடும்
அன்னையின் அருமைதனை
அறிந்திடுவீர் புத்திரரே
கருவறையில் சுமந்து
உயிருடன் போராடி
உதிரத்தைப் பாலாக்கி
மடியினில் இருத்தி
மழலை மொழி பேசி
மண்ணில் உலாவவிடும்
பெண்ணின் பெருமைதனை
புரிந்திடுவீர் புத்திரரே
வாழும் தெய்வமதை
வழிபட்டு வாழ்ந்திட்டால்
வளமான வாழ்வும்
நிறைவான நிம்மதியும் -உன்
நிழலாகத் தொடர்ந்திடுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இணுவில் கோண்டாவில் விசாலாட்சி சமேத விஸ்வநாதர் (காரைக்கால்) சிவன் ஆலய புதிய சப்பர வெள்ளோட்டச் சிறப்புமலர்

# 30.07.2012 திங்கட்கிழமை பிற்பகல் 3 மணி




## ஆசியுரை


இலங்கை மணித்திருநாட்டின் வடபாகத்து யாழ்ப்பாணத்தின் கண்ணே சைவமும் தமிழும், கலாசாரமும் வளர்த்துவரும் புராதனம் மிக்க இந்து ஆலயங்களுள் இணுவில் காரைக்கால் சிவன் ஆலயமும் ஒரு தனிச்சிறப்புப் பெற்றதாகும். இந்த ஆலயத்தில். அதன்வளர்ச்சிப் பணிகளில் ஒன்றாக புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சப்பைரதம் அதன் வெள்ளோட்ட நிகழ்வு என்பவை ஆன்மீகத்தை நாடும் அடியார் திருக்கூட்டத்துக்கு ஒரு அளவிடற் கரிய மகிழ்ச்சியான செய்தியாகும். இணுவில் காரைக்கால் என்னும் புண்ணியசேத்திரம் தனிச்சிறப்பு வாய்ந்தது. காரணம் இதுபழம்பெருமை மிக்கது மட்டுமல்லாமல் சித்தர்களின் ஞானப்பண்ணையாக, தியானபூமியாக விளங்கியது. தொன்மைமிக்க சிவ்னேயச்செல்வர்களின் ஆன்மாக்கள் சங்கமித்துள்ள சிவஸ்வரூபம் இந்தத் திருக்கோயில். பொதுவாகவே சமாதி மடக்கோயில்கள் என்பவை சர்வரோக நிவாரணியாக விளங்குபவை என்பதையே இந்துதர்மம் சுட்டிநிற்கிறது. இதற்குத் தென்னிந்தியாவின் திருவண்ணாமலைத் திருத்தலம் ஒருநல்ல சான்றாகும். அதுபோல ஈழத்தில் இந்தக் காரைக்கால் சிவனும் ஒருஜீவன்முக்தி அளிக்கக் கூடிய திருத்தலம் என்பதும் ஒரு சிறப்பம்சமாகும். ஆலயவழிபாட்டியலின் நித்திய, நைமித்திய, காமியக் கிரியைகளில் நைமித்தியக் கைங்கரியங்களில் ஒன்றாகவே இந்த மஹோற்சவம் விளங்குகின்றது. இந்த மகா உற்சவம் என்பதே இறைவனின் பஞ்சகிருத்தியங்களின் பரிமாணம் ஆகும். அதனிலும் சப்பை ரதத்திருவிழா என்றாலே அழகும் மகிழ்வும் பிரவாகிக்கும் பெருந்திருவிழா ஆகிறது. சப்பை - ரதம், ச- கோபுரம் என்பதுதான் சப்பறம் என்று பேச்சுவழக்கில் அழைக்கப்படுகிறது. இறைநிலையை இன்னும் அழகுபடுத்தி வழிபடுவதே சைவப்பாரம் பரியமாகும்.சிற்பசித்திர வேலைப்பாடுகளும் வர்ணப்பூச்சுக்களும் இணையில்லா மின்னலங்காரங்களும் ஓர் இன்பநிலையுடன் இறை வழி பாட்டை ஊக்குவிக்க துணைபுரிபவை. இதற்கு ஏதுவாக இன்றைய திருவிழாவின் உபயகார்களான திரு. சி. அப்பையா குடும்பத்தினரின் பங்களிப்புகளும் முக்கியமானவை. ஒவ்வொரு வருட மகோற்சவத்தின்போதும் சப்பரத்திருவிழா அன்று சங்காபிஷேகம் நிகழ்வது தனிச்சிறப்பு, அதிலும் சிவன் என்றாலே அவர் அபிஷேகப்பிரியர், எனவே அந்த முக்கண்ணனை குளிர்வித்து அவர் அருளைப் பெறும் திருவிழாவாக இது அமைந்துவிடுகிறது. இத்தகைய சிறப்பான சப்பரத்திருவிழாவை முன்னிட்டு இதை ஆக்கியவர்களுக்கும் உபயகாரர்களுக்கும் அடியார் பெருமக்களுக்கும் எல்லாம் வல்ல சிவனருளும் குருவருளும் வேண்டிப்பிரார்த்தித்து எனது ஆசிகளை தெரிவிக்கிறேன்.

[illegible]

**சிவஸ்ரீ குமார சரவணபவக்குருக்கள்**



## இணுவில் கோண்டாவில் விசாலாட்சி சமேத விஸ்வநாதர் (காரைக்கால் சிவன்) கோயில் புதிய சப்பர வெள்ளோட்டம்



காரைக்கால் பதியில் அமைந்துள்ள இந்தச் சிவாலயம் ஆயிரம் வருடங்களுக்கு முந்திய புராதன ஆலயமாகும். இவ்வாலயச் சூழலில் பெரிய சந்நாசியார் 1008 பயன் தரும் மரங்களை நாட்டியும் ஏழு நீர் நிலைகளைத் தோண்டியும் வளப்படுத்தினார். அப்பெரியாரின் வழிவந்த காரைக்கால் அம்பலவாணர் சுவாமிகள் இவ்வாலயத்தை மேலும் புனரமைத்து வருடாந்த பெருவிழாக்கள் நடைபெறவும் ஏற்பாடு செய்தவர்.இவ்வாலயத்தின் வடமேல் வீதியில் வாழ்ந்த சி.அப்பையா என்பவர் சப்பரத்திருவிழாவைத் தொடர்ந்து செய்து வந்தார். அவரின் சிந்தனைப்படி அவரின் புத்திரர்கள் பல இலட்சம் ரூபாவில் அழகியதொரு சப்பரத்தை உருவாக்கியுள்ளனர். எம் பெருமானின் சித்தப்படி இன்று (30.07.2012 திங்கட்கிழமை) இத்திருச் சப்பரத்தின் வெள்ளோட்டம் நடைபெறுகிறது. இறைவனின் மகிமையை உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

[illegible]

மு. சிவலிங்கம்: இணுவில் சைவத்திருநெறிக்கழக உறுப்பினர்.

## செஞ்சொற்செல்வரின் ஆசிச்செய்தி



தவஞானிகள் அரும் கோலத்தில் வீற்றிருந்த இணுவில் காரைக்கால் சிவன் கோயில் சிறப்பு மிகவும் தெய்வீகமானது. சிவலிங்கப்பெருமான் கருவறைகளில் வீற்றிருந்து அருள் பாலிக்கின்றார். இத்திருக் கோயில் சூழல் முழுவதும் ஆயுர்வேத, சித்த வைத்தியத்துக்குத் தேவையான மூலிகை மரங்கள் நிறைந்து காணப்படுவது தனியம்சமாகும். இத்திருக்கோயில் வருடாந்த பெருந்திருவிழாக் குறித்து புதிய சப்பரம் உருவாக்கப்பட்டு பெருவிழாக்காண இருப்பது அறிந்து மிகவும் ஆனந்தமடைகிறேன் ஆழகிய சப்பரத்தில் காரைக்கால் சிவனும் பார்வதியும் பவனிவருவது பாராட்டுக்குரிய விடயமாகும். இத்திருப்பணியில் அயராது உழைத்த அன்பர்கள் அனைவருக்கும் என் இனியவாழ்த்துக்கள் உரித்தாகும் . யாவர்குமாம் இன்னுரைதானே.

**கலாநிதி ஆறு. திருமுருகன்**

## ஆசிச்செய்தி

மக்களை வாழ்வாங்கு வாழ வழிகாட்டுவனவாக ஆலயங்கள் விளங்குகின்றன. இவற்றிலே சிறப்புமிக்கவையாக விளங்குபவை மஹோற் சவமாகும். இதன்படி இந்தச் சப்பர மஹோற்சவத்தின்போது ஒரு நாள் வீதி வலம் வருகின்றதும் அனைவரும் கண்டுகளிக்கும் ஒரு நிகழ்வாகும். இன்றைய சப்பர வெள்ளோட்டமானது மக்கள் அனைவருக்கும் ஆசீர்வாதமாக அமையும். எனது ஆலயப் பணியிலே சப்பரம், கைலாயவாகனம் என்பன உருவாக்கம் பெற்று வீதி வலம் வருகின்றமை மிக்க மகிழ்வை அளிக்கிறது. இதேபோல இந்த ஆலயத்தில் மஞ்சமும் உருப்பெற்று வலம் வர எல்லாம் வல்ல சிவன் அருளையும், அடியவரது ஒத்துழைப்பையும் வேண்டி ஆசி கூறுகின்றேன்.

**ஆதீனகர்த்தா சோ. லோகேந்திரன்**

## ஆலய நித்திய பூசகர் கிருஷ்ண மூர்த்தி சர்மா வழங்கிய ஆசியுரை



முத்தமிழும், கலைஞானமும் செழித்து சிறப்புடன் விளங்கும் இணுவையம்பதியிலே வீற்றிருந்து அருளாட்சி செய்கின்ற காரைக்கால் சிவனினுடைய சப்பரம் இன்று வெள்ளோட்டம் காண்பதையிட்டு மிகவும் மன மகிழ்ச்சி அடைகின்றேன்.நான் இந்த ஆலயப்பூசகர் பணியை ஆரம்பித்து செயற்பட தொடங்கிய காலங்களில் சப்பரம், கைலாய வாகனம் என்பன புதுப்பொலிவு பெற்று வெள்ளோட்டம் காண்பது மிகவும் மகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றது. சிவன் இவற்றில் வீதி வலம் வந்து இவ்வூர் மக்கள் அனைவரையும் அருள்பாலித்து ஆசீர்வதிப்பார் என்று கூறுவதோடு, இதே போன்று மஞ்சமும் புதுப்பொலிவுடன் இவ் வீதியில் வலம் வர வேண்டுமென எல்லாம் வல்ல விஸ்வநாதனின் பாதம் பணிந்து ஆசி கூறுகின்றேன்.

"[illegible]"

## சிற்பாச்சாரியார் - ஐயாத்துரை இலங்கேஸ்வரனின் ஆசிச்செய்தி



இணுவில் கோண்டாவில் காரைக்கால் சிவன் விசாலாட்சிக்கு ஒரு சப்பரம் அமைக்கவேண்டும் என்ற ஆர்வத்தில் சி. அப்பையா குடும்பத்தினர் என்னை அணுகியமை இறைவன் திருவருளே. சிவனுக்கான இத் திருச்சப்பரக் கைங்கரியம் எமது துரை சிற்பாலயத்தின் சப்பரத்திற்கான கன்னி முயற்சி. உபயகாரரது பூரண ஒத்துழைப்பு இந்தப் பணி சிறக்க உதவியது. சிவன்பார்வதி சமேதராக சப்பரத்தில் பவனி வந்து அடியார்க்கு அருள்பாலிப்பது எமக்கு கிடைத்தபெரும்பேறாகும்.

துரை சிற்பாலயம் - தாவடி வடக்கு, கொக்குவில்.

## காரைக்காலில் 1008 விருட்சங்கள் ஏழு தீர்த்தக் கேணிகள் புகழ்பூத்த திருத்தலப் பெருமைகள்



புகழ்பூத்த காரைக்கால் சிவன் கோயிலின் வருடாந்த மகோற்சவம் நடைபெறும் இந்த வேளையில் இத்திருத் தலத்திற்கெனப் புதிய திருச் சப்பரமொன்று அமைக்கப் பெற்று அதன் வெள்ளோட்ட விழா நடைபெறு வதையிட்டு அளவிலா ஆனந்தமடைகிறேன்.1942 ஆம் ஆண்டு யுத்தகாலத்தின் போது காரைக்கால் அன்னதானப் பணிகளுக்கோர் முன்னோடியான திருத்தலமாக விளங்கியதுண்டு. அரிசிப் பஞ்சமேற்பட்ட அக்காலத்தில் இத்திருத் தலத்தில் வருடத்தில் பல நாள்கள் அன்னதானப் பணிகள் நடைபெற்றமை இன்னும் எனது மனதில் பசுமை நினைவுகளாக உள்ளன.வெள்ளிக்கிழமைகள் தோறும் மாலை வேளைப் பூசைவழிபாடுகளின் போது சித்தர் செல்லர் என்பவரால் ஆற்றுப்படுத்தப்பட்டு வந்த குழைசாதப் பணிகள் இன்னும் நினைவு கூரப்படுபவையாகும். இன்றும் அன்னதானத்திற்குக் குறைவில்லாத பதியே காரைக்காலாகும். பாரெங்கும் வளர்க இத்திருத்தொண்டு.

**கலாபூஷணம் செல்லப்பா நடராசா (ச.நீ)**

நாளை (31.07.2012) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 7 மணியளவில் சப்பரத்திருவிழா நடைபெறும் என்பதனை அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.

### அனுசரணையாளர்


துரை சிற்பாலயம், மரக்காலை
வன்னியசிங்கம் வீதி,
தாவடி வடக்கு, கொக்குவில்

அம்பிகா பான்சி எம்போறியம்
216, C பிரதான வீதி,
கொழும்பு - 11

விதுஷன் பான்சி ஹவுஸ்
9, கே.கே. எஸ். வீதி,
சுன்னாகம்

ஐங்கரன் பான்சி
கே.கே. எஸ். வீதி,
சுன்னாகம்

ஐ. பேரம்பலம் அன் சன்
இல. 10, கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம்

சைனிங்ஸ்ரார்
Shinningstar Sales Centre
10 டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்

பேஷன் ஹவுஸ்
இல. 203 (165) கே.கே.எஸ்.
வீதி, யாழ்ப்பாணம்

டயமன் ரேடர்ஸ்
சுன்னாகம்

BANUREKAN AGRO STORES
Anganayer Kovil Near
K.K.S. Road Maruthanarmadam Tel : 021 224 1398

அம்பிகாபதி
AMBIHAPATHY FANCY GOODS
Dealers in : Immitation Jewellery,
Fancy Goods & Cosmetics
66, Grand Bazaar, 66, பெரியகடை,
Jaffna யாழ்ப்பாணம்
T.P : 021 222 7002

வளர்மதி ரெக்ஸ்ரைல்ஸ்
258 (176) கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்

ஜெயகணன்
ஸ்ரேசன் றோட்,
சுன்னாகம்

அபிராமி பேஷன் ஹவுஸ்
5, K.K.S. Road,
Chunnakam

(f1770)(45-8)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## இராமுப்பிள்ளை தங்கம்மா



**இணுவில்**, மஞ்சத்தடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமுப்பிள்ளை தங்கம்மா நேற்றுமுன்தினம் (28.07.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகநாதி சின்னத்தம்பி - சின்னத்தம்பி குழந்தை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பொன்னம்பலம் இராமுப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சுப்பிரமணியம், முத்தையா, துரை, இராசதுரை, தனபாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கணேசலிங்கம், கனகரத்தினம், காலஞ்சென்ற கைலநாதன் மற்றும் லோகநாதன் (கனடா) அசோகநாதன் (லண்டன்), உலகநாதன் (லண்டன்), உலகநாயகி (சுவிஸ்), யோகராணி ஆகியோரின் பாசமிகு தாயும், இராசநாயகம், கனகசபாபதி, சின்னப்பிள்ளை காலஞ்சென்ற தங்கமணி மற்றும் பிரேமலதா, இராஜேஸ்வரி (கனடா) வசந்தகுமாரி (லண்டன்), சாந்தி (லண்டன்), சரோஜினி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.07.2012) திங்கட்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் கிழக்கு,
மஞ்சத்தடி.

(21137)

தகவல்:
குடும்பத்தினர்.

### சுனாமி எச்சரிக்கை பரீட்சார்த்தம்

நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில் சுனாமி முன்னெச்சரிக்கைக் கோபுரம் பரீட்சார்த்தமாக இன்று பிற்பகல் 2 மணிக்கு இயக்கப்படவுள்ளது.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தால் இந்த ஒத்திகை நிகழ்வு இன்று மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-4-5)

### கொடுப்பனவு

தென்மராட்சி பிரதேசத்தில் சமுர்த்தி முத்திரை பெறுவோருக்கான ஏப்ரல், மே, ஜூன் ஆகிய மாதங்களுக்குரிய கொடுப்பனவு அந்தந்த சமுர்த்தி வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் சமுர்த்தி முத்திரைக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டு வந்ததாகவும் பணமாக வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளதால் சமுர்த்திப் பயனாளிகளுக்குரிய முத்திரைக் கொடுப்பனவுகள் அந்தந்த சமுர்த்தி வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் சமுர்த்திப் பயனாளிகள் தமது கொடுப்பனவை சமுர்த்தி வங்கிகளில் பெற்றுக்கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

# கண்ணீர் அஞ்சலி



தொழிலதிபர் E.S.P நாகரத்தினம்
அவர்களின் அன்புத் தாய்

**திருமதி மாணிக்கம் பேரம்பலம்**

அவர்களது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பர நடராஜப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

(பி/1796) பிரதேச செயலரும் உத்தியோகத்தர்களும், பிரதேச செயலகம், காரைநகர்.

# பணியாளர்கள் தேவை

சிறுவர் இல்லத்திலுள்ள பிள்ளைகளை மேற்பார்வை செய்து பராமரிப்பதற்கு ஆண் பணியாளர்கள் தேவை. இரவில் தங்கியிருந்து பணியாற்றக் கூடியவராகவும் 50 வயதுக்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

சிறுவர் இல்லத்தில் தங்கியிருந்து சமையல் வேலை செய்யக்கூடிய ஆண், பெண் சமையல் தொழிலாளர்கள் தேவை.

முன் அனுபவம் உடையோருக்கு முன்னுரிமை வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். மேற்படி பணிகளைச் செய்வதற்கு விருப்பமுடையவர்கள் எதிர்வரும் 03.08.2012 ஆம் திகதி முற்பகல் 9 மணிக்கும் 12 மணிக்கும் இடையில் நேரில் வருகை தரவும்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

ஆண்கள்
கருணாலயம்,
சிறுவர் இல்லம் (ஆண்கள்)
இராச வீதி, கரந்தன், நீர்வேலி

பெண்கள்
கருணாலயம்,
சிறுவர் இல்லம் (பெண்கள்)
பலாலி வீதி, திருநெல்வேலி.

கருணாலயம்,
சிறுவர் இல்லம்,
கரந்தன், நீர்வேலி.

(21138)

முகாமையாளர்,
ஐ.சிவராசா

# மரண அறிவித்தல்

## திருமதி விஜயலட்சுமி மகேந்திரராஜா



உதயகிரி, வட்டு. மேற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விஜயலட்சுமி மகேந்திரராஜா கடந்த 24.07.2012 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.07.2012) திங்கட்கிழமை பிரான்ஸில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உதயகிரி,
வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை.

(21009)

தகவல்:
குடும்பத்தினர்.
பிரான்ஸ்-0033148350027


உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
advt@uthayan.com
0215671111


# மரண அறிவித்தல்

## திருமதி புவனேஸ்வரி யோகசுந்தரம்

மறைந்த திரு. முத்துக்குமாரசாமி-சிவபாக்கியம் தம்பதியரின் மகளாகிய திருமதி புவனேஸ்வரி யோகசுந்தரம் அவர்கள் கடந்த 27.07.2012 அன்று இரவு இறையடி சேர்ந்தார்.

அன்னார் கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்டவர். இவர் காலஞ்சென்ற யோகசுந்தரத்தின் அன்பு மனைவியும் ஜெயக்குமார், சிவகுமார் காலஞ்சென்ற சாந்தகுமார், இந்திரகுமார், சூரியகுமார், கைமாவதி கிருபாவதி ஆகியோரின் அன்புத் தாயும் அருஞ்சலா, ராஜராஜேஸ்வரா, காலஞ்சென்ற ரஞ்சினி, அன்பரசி ஆகியோரின் அருமை மாமியும் ஷாஸ்கரன், தனுஷியன், பிறேமியா, ஜனகன், கபிலன், சுதன்மகிழினி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.07.2012) திங்கட்கிழமை ஒரு மணியளவில் கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று தகனக்கிரியைகள் கல்கிசை மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
திரு யோகசுந்தரம்
36, 5/4 சின்சபா றோட் கொழும்பு -06

(சி-1833)

# 17 ஆம் ஆண்டு நினைவலைகள்

## அமரர் தம்பிராஜா கனகரட்ணராஜா



திதி-திரயோதசி (30.07.2012)

வையத்துள் அறிமுகம்
19- 01 - 1935

தெய்வத்துள் சங்கமம்
08 - 08 -1995

பாசத்தின் திருவுருவமாய்
பண்பின் உறைவிடமாய்
எங்களுக்கெல்லாம் அன்பு காட்டி
அரவணைத்த எம் அன்புத் தெய்வமே!
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து
பதினேழு ஆண்டுகள் அல்ல எத்தனை
ஆண்டுகள் தான் சென்றாலும் உங்கள் நினைவுகள்
எங்கள் நெஞ்சங்களை விட்டு
என்றும் மாறாதையா.

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்
அன்பு மனைவி, மைத்துனர்கள், மைத்துனிகள், சகோதரிகள்,
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

சந்தையடி,
மானிப்பாய்.

(20989)

# 7 ஆம் ஆண்டு நினைவு நாள்



அமரர் திருமதி
**சுந்தரலிங்கம் சிவபாலாம்பிகை**

மலர்வு
22.04.1942

உதிர்வு
19.07.2005

திதி-ஆடி பூர்வபக்க திரயோதசி
(30.07.2012)

ஒரேழு வருடங்கள்
ஓடியே போயிற்றே
ஓயமாட்டா எங்கள் மனம்
உன்னுடைய இழப்பை எண்ணி

மாறாத புன் சிரிப்பும்
மறவாத கண் சிரிப்பும்
கூறிய இன் சொல்லும்
மறையாதே எம் நெஞ்சில்

ஆறாதே ஆறாதே
இத் துன்பம் ஆறாதே
ஈரேழு காலம் தான்
எடுத்தாலும் மாறாதே

வையத்துள் வாழ்வாங்கு
வாழ்ந்த தமிழ் மகள் நீ
வானுயர்ந்த தாயுனக்கு
வேண்டுவோம் நாம் சாந்தி

85 கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
0094212228005
0091770866 7482

உன் நீங்கா நினைவுகளுடன்
ஆ.சுந்தரலிங்கம்
(கணவர்-ஓய்வுபெற்ற தபாலதிபர்)
உடன் பிறப்புக்களும் குடும்பத்தினரும்.

(19494)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கள்ளிக்குள மக்கள் மீளக்குடியமர தடை விதிக்கிறது படைத்தரப்பு

வவுனியா,ஜூலை30

*வவுனியா கள்ளிக்குளம் பகுதியைச் சேர்ந்த மக்கள் அவர்களுடைய சொந்த இடங்களில் மீளக்குடியமர்வதற்குப் படையினர் தடைவிதித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இதனால் 25 வருடங்களுக்குப் பின்னர் தமது சொந்த இடங்களுக்குச் செல்லவிருந்த மக்கள் ஏமாற்றமடைந்துள்ளதுடன் படையினரின் இந்தச் செயற்பாடு தொடர்பாக விசனத்தையும் தெரிவித்துள்ளனர்.*

வவுனியா மாமடுப் பகுதிக்கு சற்றுத் தொலைவில் உள்ள கிராமமே கள்ளிக்குளம். இந்தக் கிராமத்திலிருந்த சுமார் 80 குடும்பங்கள் நாட்டுச் சூழல் காரணமாக 1987 ஆம் ஆண்டளவில் இடம்பெயர்ந்து வெவ்வேறு பகுதிகளிலும் வசித்து வந்தனர்.

தற்போது நாட்டில் ஏற்பட்ட அமைதிச் சூழலை அடுத்து அந்தப் பகுதியில் மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தற்போது 10 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளன.

ஏனையவர்களுக்கு அவர்களது சொந்த இடங்களை துப்புரவு செய்ய அனுமதி அளித்திருந்த படையினர், கடந்த வாரம் முதல் அதனைத் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

அந்தப் பகுதிகளைத் துப்புரவு செய்யவோ, மரம் செடி கொடிகளை வெட்டக்கூடாது என்றும் அந்தப் பகுதிக்குள் எவரும் உட்பிரவேசிக்கக் கூடாது என்றும் இராணுவத்தினர் தடுத்து நிறுத்தியுள்ளதுடன். அந்தப் பகுதியில் துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்த வாகனங்களையும் திருப்பி அனுப்பியுள்ளனர்.

படையினரின் இந்த நடவடிக்கைகளால் 25 வருடங்களுக்குப் பின்னர் தமது சொந்த இடத்துக்குச் சென்ற மக்கள் ஏமாற்றம் அடைந்துள்ளதுடன், பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த தமது காணிகள் பறி போய் விடுமோ என்று அச்சமும் வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை இந்த விடயத்தை வவுனியா மாவட்ட அரச அதிபரின் கவனத்துக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக அந்தப் பகுதியைச் சேர்ந்தோர் தெரிவித்துள்ளனர். (க-410)

## குடிதண்ணீர் விநியோகத்துக்கு 982 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

கிளிநொச்சியின் குடிதண்ணீர் விநியோகத்துக்கு ஜெய்க்கா திட்டத்தின் கீழ் 982 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சியின் சுமார் 30 ஆயிரம் குடும்பங்களுக்கு குடிதண்ணீர் விநியோகித்து வந்த குடிதண்ணீர் தாங்கி சேதமாக்கப்பட்டதையடுத்து இந்தப் பகுதிக்கான குடிதண்ணீர் விநியோகம் தற்போது பாதிக்கப்பட்டுள்ளது. தற்போது இதனை மேற்கொள்வதற்கான அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. ஜப்பான் நாட்டின் நிதியுதவியுடன் ஜெய்க்கா திட்டத்தின் கீழ் சுமார் 677 ஜப்பானிய ஜென், மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை ரூபாவின் பெறுமதி சுமார் 982 மில்லியன் ரூபாவாகும்.

இந்தத் திட்டத்தின் கீழ் குடிதண்ணீரை வழங்கும் இடம் புனரமைக்கப்படவுள்ளது. மேலும் நீரைச் சுத்திகரிக்கும் இடமும் புனரமைக்கப்படவுள்ளது. அத்துடன் புதிய இரண்டு நீர்த்தாங்கிகள் அமைக்கப்படுவதுடன் நீர்விநியோகக் குழாய்களைப் பொருத்தும் பணிகளும் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதன் மூலம் கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள விவேகானந்த நகர், உதயநகர் கிழக்கு, ஆனந்தபுரம், தொண்டமான்நகர், கனகாம்பிகைக்குளம், இரத்தினபுரம், கிளிநொச்சி நகர் மருதநகர், கனகபுரம் திருநகர் தெற்கு, திருநகர் வடக்கு, கணேசபுரம் ஆகிய பகுதிகளிலும், கண்டாவளைப் பிரதேசத்தின் குமரபுரம், பரந்தன் ஆகிய இடங்களிலும் வாழும் 30 ஆயிரம் குடும்பங்களின் குடிதண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்ய முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (க-6)

## வேப்பங்குளத்துக்கு மின்வழங்கத் தயார் வவுனியா மின்சாரசபையினர் அறிவிப்பு

நெளுக்குளம், ஜூலை30

ஓமந்தை வேப்பங்குளத்துக்கு மின்சாரம் வழங்கத் தாம் தயாராக உள்ளதாக வவுனியா மின்சார சபையினர் தெரிவித்துள்ளனர்.


வவுனியா மாவட்ட வீடமைப்பு அதிகார சபையின் கோரிக்கையும் அதிகாரிகளின் அனுமதியும் கிடைக்கும் நிலையில் இந்தப் பகுதிக்கு விரைவில் மின்சாரத்தை வழங்க முடியுமென மின்சார சபையினர் தெரிவித்துள்ளனர்.

இங்கு அமைக்கப்பட்டு வரும் வீடுகளின் வேலைகள் இழுபறியின்றி துரித கதியில் முடிக்கப்படும் பட்சத்தில் மின்சாரத்தையும் துரிதமாக வழங்கமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இந்தப் பகுதியிலுள்ள வீதிகளும், கால்வாய்களும், அவசியம் புனரமைக்கப்படவேண்டும். அப்போது தான் மின் கம்பங்களை இலகுவாக நிறுத்த முடியும் இல்லையென்றால் மழையின் போது இவை சரிந்து விழக்கூடிய அபாய நிலையுமுள்ளது.

எனவே இவையெல்லாம் பூர்த்தி செய்யப்படும் நிலையில் ஓமந்தை வேப்பங்குளத்துக்கு மின்சாரத்தை வழங்குவதில் துரிதமாக நடவடிக்கை மேற்கொள்ள முடியும் எனத் மின்சாரசபையினர் தெரிவித்தனர். (க-402)

## தலைவிதி மாறுமா...?



*கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தில் இதுவரை புனரமைக்கப்படாது அழிவுகளைச் சுமந்த வண்ணம் காட்சியளிக்கின்றன காணி அலுவலர்களின் விடுதிகள். (க-18)*

## இரணைமடுக்குளத்தின் வாய்க்காலை ஆழமாக்கினர் விவசாயிகள்

கிளிநொச்சி ஜூலை 30

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் வாய்க்கால்களை ஆழமாக்கும் பணிகள் விவசாயிகளால் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு நிறைவு பெற்றுள்ளன.

**சிறுபோக செய்கையை பாது காக்கும் நோக்கில் இரணைமடுக்குளத்தின் பிரதான வாய்க்காலை இரண்டு நாள்களாக ஆழமாக்கும் பணிகள் முன்னெடுக்கப் பட்டது.**

கிளிநொச்சி, முரசுமோட்டை மூன்றாம் வாய்க்கால், கணேசபுரம், பன்னங்கண்டி ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள சிறுபோக செய்கையை பாதுகாக்கும் நோக்கில் நீரைக் கொண்டு செல்லும் இரணைமடுக்குளத்தின் பிரதான வாய்க்காலை இரண்டு நாள்களாக ஆழமாக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழ் இந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்டுள்ள சிறுபோக நெற்செய்கையானது சீரான நீர்ப்பாசனமின்றி முரசுமோட்டைப் பகுதியில் சுமார் 350 ஏக்கர் முதல் 400 ஏக்கர் வரையிலும், ஊரியான் பகுதியில் 15 ஏக்கர் வரையிலும், ஏனைய மூன்றாம் வாய்க்கால், பன்னங்கண்டி கணேசபுரம் ஆகிய பகுதிகளில் ஆயிரம் ஏக்கர்களுக்கு மேலும் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் எஞ்சியுள்ள இடங்களிலும் குளத்தில் நீர் இல்லாமை காரணமாக மேலும் பாதிப்புக்கள் ஏற்படும் அபாயநிலை தோன்றியுள்ளன.

இந்த நிலையில் சொந்தக் காணியுள்ள விவசாயிகள் தமது வயல்களில் குழாய்க் கிணறுகளை அமைத்துத் தற்போது நீர் விநியோகம் மேற்கொள்கின்றனர். இதை விட ஏனைய விவசாயிகள் நீர் நிலைகள் , கிணறுகள் என்பவற்றில் இருந்து நீர் இறைக்கும் இயந்திரம் மூலம் நெல் வயல்களுக்கு நீரைப் பாய்ச்சி வருகின்றனர்.

இது இவ்வாறிருக்க இரணைமடுக் குளத்திலிருந்து வயல் நிலங்களுக்கு நீரைக் கொண்டு செல்லும் வாய்க்காலை மூடிக்கிடந்த தூர்வை மண் கடந்த இரு தினங்களாக அகற்றப்பட்டன .

குளத்தில் எஞ்சியுள்ள நீரை எப்படியாவது கொண்டு சென்று செய்கையைப் பாதுகாக்க வேண்டும் என்ற முயற்சியில் 200 இற்கும் மேற்பட்ட விவசாயிகள் ஈடுபட்டனர். (க-6)

## மாணவர்களுக்கு கற்றல் உபகரணமும் பேரீச்சம்பழமும்

செட்டிகுளம் மெனிக்பாம் நலன்புரி முகாம்களிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு வவுனியா தெற்கு கல்வி வலயத்தினால் கற்றல் உபகரணங்களும் பேரீச்சம்பழமும் வழங்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளுக்கு ஏற்கனவே இந்தப் பொருள்கள் வழங்கப்பட்ட போதும் நலன்புரி பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படவில்லை. இதனை யடுத்து இவற்றை வழங்குமாறு பாடசாலை அதிபர்கள் வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளரிடம் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

இதன் பிரகாரம் ஆனந்த குமாரசாமி கதிர்காமர் நலன்புரி பாடசாலைகளுக்கும் இந்தப்பொருள்கள்வழங்கப்பட்டன. வவுனியா தெற்கு வலய கல்விப்பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜா நேரில் முகாம்களுக்குச் சென்று யுனிசெப் நிறுவனத்தினரால் வழங்கப்பட்ட கற்றல் உபகரணங்களையும், பேரீச்சம் பழத்தையும் மாணவர்களுக்கு வழங்கினார்.

இரு பாடசாலைகளையும் சேர்ந்த சுமார் ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்களுக்கு இந்தப்பொருள்கள் வழங்கப்பட்டன. இதேவேளை இரண்டு பாடசாலைகளையும் சேர்ந்த ஆசிரியர்களுக்கு கற்பித்தல் துணைச்சாதனங்கள் யுனிசெப் நிறுவனத்தினரால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-400)

## முறிகண்டியில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு தற்காலிக வீடுகளை அமைக்கும் படையினர்

வவுனியா, ஜூலை 30

திருமுறிகண்டிப் பகுதியில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கான தற்காலிக வீடுகள் அமைக்கும் பணிகள் இராணுவத்தினரால் துரித கதியில் இடம்பெற்று வருகின்றன.

கடந்த காலப் போர் நடவடிக்கைகளின் போது இடம்பெயர்ந்து ஆனந்தகுமாரசாமி முகாமில் இருந்து 47 குடும்பங்களும் கதிர்காமர் நலன்புரி முகாமில் இருந்து 47 குடும்பங்களும் தற்போது திருமுறிகண்டி வசந்தபுரம் பகுதியில் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளன.

இவர்களில் முதற்கட்டமாக 30 குடும்பங்களுக்குத் தற்காலிக வீடுகள் அமைக்கப்பட்டு அவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. மேலும் 30 வீடுகளை அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. இவை நிறைவு பெற்றதும் எஞ்சிய குடும்பங்களுக்கான பணிகள் இடம்பெறுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வீடுகளை அமைக்கும் பணிகளில் இராணுத்தினரே ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மீளக்குடியமர்ந்தவர்களுக்கு உலர் நிவாரணம் என்ற அடிப்படையில் அரிசி, மா உட்பட 3 ஆயிரத்து 500 ரூபாவுக்கு உட்பட்ட பெறுமதியான பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

தாம் மீளக்குடியமர்ந்து இரண்டு வாரங்களாகிய நிலையில் தமக்கு வழங்கப்பட்ட உலர் உணவு நிவாரணம் போதுமானதாக இல்லை என மீளக் குடியமர்ந்த மக்கள் தெரிவிக்கின்றனர். (க-400)

## கூரைகள் பிடுங்கி எறியப்பட்டதால் கற்சிலைமடு மாணவர்கள் பாதிப்பு

கற்சிலைமடு அ.த.க. பாடசாலையில் அமைக்கப்பட்டிருந்த மூன்று தற்காலிக கொட்டகைகளும் காற்றினால் பிடுங்கி எறியப்பட்டுள்ளதால் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

யுனிசெப் நிறுவனத்தினரால் சுமார் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் இந்தக் கொட்டகைகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன. 2010 ஆம் ஆண்டு புதிய கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன என்று கூறியே தற்காலிகமாக ஒரு வருட காலம் பாவிக்கக் கூடிய வகையில் இந்தக் கொட்டகைகள் அமைக்கப்பட்டன. ஆனால் கடந்த மூன்று வருடகாலமாக இந்தக் கொட்டகைகளின் கீழேயே கற்பித்தல் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன என்று பாடசாலை அதிபர் சி. நாகேந்திரராஜா தெரிவித்தார்.

கடந்த 20 ஆம் திகதி புதிய கட்டடங்களுக்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவை நிறைவு பெறுவதற்கு குறைந்தது ஆறு மாதங்களாவது ஆகும். இதனால் எதிர்வரும் மழை காலங்களில் பெரியளவில் சிரமங்கள் ஏற்படுமென்று தெரிவித்த பாடசாலையின் அதிபர் கூரைத் தடிகள் மிகவும் பழுதான நிலையில் உள்ளதால் கூரையை வேய முடியாத அவலநிலை நிலவுவதாகவும் தெரிவித்தார். (க-500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசேட தேவையுடைய மாணவரின் விளையாட்டுப் போட்டிகள்





யாழ்ப்பாணம், ஜூலை 30

வடமாகாண மட்டத்தில் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டி நேற்றுமுன் தினம் சனிக்கிழமை யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் பி.விக்னேஸ்வரன் தலைமையில் ஆரம்பமானது. இந்த நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக வடமாகாண பிரதம செயலாளர் திருமதி ரமேஸ் விஜயலட்சுமி கலந்து கொண்டார்.

யாழ்.துரையப்பா விளையாட்டு மைதான நுழைவாயிலில் இருந்து விருந்தினர்கள் யாழ்.கல்வி வலய விசேட தேவையுடையவர்களின் பாண்ட் வாத்திய இசையுடன் அழைத்து வரப்பட்டனர். அதனைத் தொடர்ந்து விருந்தினர்களால் மங்கல விளக்கு ஏற்றி வைக்கப்பட்டது. தொடர்ந்து தேசியக் கொடியை வடமாகாண பிரதம செயலாளர் ரமேஸ் விஜயலட்சுமி ஏற்றி வைத்தார்.



12 கல்வி வலயங்களைச் சேர்ந்த விசேட தேவையுடைய மாணவர்களின் அணிவகுப்பு மரியாதையுடன் நிகழ்வு ஆரம்பமானது.

தேசியக் கொடி ஏற்றி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலய மாணவிகளால் தமிழில் தேசிய கீதம் இசைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து வடமாகாணக் கொடியை வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் பி.விக்னேஸ்வரன் ஏற்றி வைத்தார். அதன் பின் 12 கல்வி வலயங்களைச் சேர்ந்த விசேட தேவையுடைய மாணவர்களின் அணிவகுப்பு மரியாதை இடம் பெற்றது .இதனைத் தொடர்ந்து ஒலிம்பிக் தீபத்தை மேல் மாகாண விசேட கல்விப் பணிப்பாளர் ஹென்றி சம்பிரதாய பூர்வமாகப் பற்ற வைத்ததைத் தொடர்ந்து மாணவர்களால் ஏந்திச் செல்லப்பட்டு பிரதான ஒலிம்பிக் சுடர் ஏற்றப்பட்டது.

தொடர்ந்து போட்டியில் பங்குபற்றிய வீரர்கள் சார்பாகச் சத்தியப்பிரமாணம் செய்யும் நிகழ்வு இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து நிகழ்வுக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட திருமதி விஜயலட்சுமி போட்டிகளை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.சிவபூமி மாணவர்களின் இசையும், அசைவும் நிகழ்வும் இடம்பெற்றது .

இந்த நிகழ்வில் நீர்கொழும்பு விசேட கல்வி மற்றும் முறைசாராக் கல்வி பிரதிப் பணிப்பாளர் உபாலி மதுரப்பெரும, பிலியந்தல விசேட கல்விப் பதில் பணிப்பாளர் மாலினி குலசிங்க, வடமாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே.உதயகுமார், வடமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் ராதா கிருஸ்ணன் மற்றும் உயர் கல்வி அதிகாரிகள் கலந்து கொண்டனர். (த-23)

## வளர்மதி வெற்றிக் கிண்ண கரப்பந்தாட்ட இறுதிப் போட்டி

கைதடி, ஜூலை 30

கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தின் 53 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டும் புதிய அரங்கக் கட்டடத் திறப்பு விழாவை முன்னிட்டும் கைதடி மத்திய வளர்மதி விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியில் நடத்திவரும் 'செற்-அப்' முறையிலான கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி எதிர்வரும் 1 ஆம் திகதி புதன்கிழமை இரவு 8 மணிக்கு வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் நடைபெறவுள்ளது.

இறுதிப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

இதேவேளை, மேற்படி ஆண்டு விழாவை முன்னிட்டு ஓகஸ்ட் 4 ஆம் திகதி வடமாகாண ரீதியிலான சைக்கிள் ஓட்டப் போட்டி, மரதன் ஓட்டப் போட்டிகளும் நடைபெறவுள்ளதாகவும், மேற்படி போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர் அன்றைய தினம் பதிவுகளை மேற்கொண்டு போட்டிகளில் கலந்துகொள்ளலாம் எனவும் கைதடி வளர்மதி விளையாட்டுக் கழகத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார். (ங-288)

## பிறைசன், சந்திரோதயா வெற்றி

யாழ்ப்பாணம், ஜூலை 30

கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழகம், கழகத்தின் முன்னாள் வீரர் அமரர் பத்மேஸ்வரன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தும் 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் ஜெயந்திநகர் பிறைசன் விளையாட்டுக் கழகமும், உருத்திரபுரம் சந்திரோதயா விளையாட்டுக் கழகமும் வெற்றிபெற்றுள்ளன.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் ஜெயந்திநகர் பிறைசன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பரந்தன் மத்திய விளையாட்டுக் கழகம் மோதியது.

இதில் இருஅணிகளும் கோல்களைப் பெறாததினால் வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதைகளில் 5:4 என்ற கோல்கணக்கில் ஜெயந்திநகர் பிறைசன் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

இன்னொரு ஆட்டத்தில் உருத்திரபுரம் சந்திரோதய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பூநகரி அண்ணா விளையாட்டுக் கழகம் மோதிக் கொண்டது. இதில் உருத்திரபுரம் சந்திரோதய விளையாட்டுக்கழகம் 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

(ங-23)

## குமரையா ஞாபகார்த்த உதைபந்து இறுதி; ஞானமுருகன், றோயல் மோதல் இன்று





யாழ்ப்பாணம்,ஜூலை 30

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் நடத்தும் அமரர் ஈ.கே. குமரையா ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4 மணியளவில் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. இன்றைய இறுதியாட்டத்துக்கு பிரதம விருந்தினராக யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் முன்னாள் செயலாளர் இராஜசிங்கமும், சிறப்பு விருந்தினராக சுங்க இலாகா உத்தியோகஸ்தரும் ஈ.கே.குமரையாவின் புதல்வருமான கே.ரவீந்திரனும் கலந்துகொள்ளவுள்ளனர். இந்த இறுதியாட்ட நிகழ்வு யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத் தலைவர் தேசமானிய இ.ஆனல்ட் தலைமையில் இடம்பெறவுள்ளது. (ங-23-130)

## கிளிநொச்சி மாவட்டத்தின் வெற்றி பெற்ற அணிகள்

யாழ்ப்பாணம்,ஜூலை 30

கிளிநொச்சி மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான பெரு விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற அணிகளின் விவரம் வருமாறு

**கபடி ஆண்கள்**
கரைச்சி பிரதேச செயலக அணி -முதலாமிடம்
பூநகரி பிரதேச செயலக அணி -இரண்டாமிடம்

**கபடி பெண்கள்**
கரைச்சி பிரதேச செயலக அணி-முதலாமிடம்
பூநகரி பிரதேச செயலக அணி -இரண்டாமிடம்

**எல்லே ஆண்கள்**
கரைச்சி பிரதேச செயலக அணி முதலாமிடம்
பூநகரி பிரதேச செயலக அணி -இரண்டாமிடம்

**எல்லே பெண்கள்**
கரைச்சி பிரதேச செயலக அணி-முதலாமிடம்
கண்டாவளை பிரதேச செயலக அணி-முதலாமிடம்

**கரப்பந்தாட்டம் ஆண்கள்**
கரைச்சி பிரதேச செயலக அணி-முதலாமிடம்
பூநகரி பிரதேச செயலக அணி -இரண்டாமிடம்

**கரப்பந்தாட்டம் பெண்கள்**
கரைச்சி பிரதேச செயலக அணி-முதலாமிடம்
கண்டாவளைப் பிரதேச செயலக அணி-இரண்டாமிடம்

**துடுப்பாட்டம் பெண்கள்**
கரைச்சி பிரதேச செயலக அணி-முதலாமிடம்
கண்டாவளைப் பிரதேச செயலக அணி-இரண்டாமிடம்

**உதைபந்தாட்டம் ஆண்கள்**
பூநகரி பிரதேச செயலக அணி -முதலாமிடம்
கரைச்சி பிரதேச செயலக அணி இரண்டாமிடம்

**உதைபந்தாட்டம் பெண்கள்**
கரைச்சி பிரதேச செயலக அணி -முதலாமிடம்
பூநகரி பிரதேச செயலக அணி -முதலாமிடம் (6-23)



வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான 15 வயதுப் பிரிவு பெண்களுக்கான கரம் போட்டியில் வவுனியா அல்-இக்பால் வித்தியாலயம் சம்பியனானது.வெற்றி பெற்ற வீராங்கனைகளுடன், வடமாகாண மாணவ அபிவிருத்தி கல்விப் பிரிவு கல்விப்பணிப்பாளர் எஸ்.சத்தியபாலன், வர்த்தகப் பிரிவு உதவிக் கல்விப்பணிப்பாளர் செல்வன், மற்றும் பொறுப்பாசிரியர்கள். (23)

## "கிரிக்கெட் எங்களுக்கும் சொந்தம்"



(நேற்றைய சூரியகாந்தியில் வெளியான நேர்காணலின் தொடர்ச்சி)

கனவுகளோடு சொன்னவர்கள் தாங்கள் விளையாடும் போட்டிகளில் கைக்கொள்ளும் உத்திகளையும் விளக்கத்தவறவில்லை.

''எங்கட ரீமில எல்லாரும் சகலதுறை ஆட்டக்காரர்கள். அதால எந்த நெருக்கடியான நிலையிலையும் பயப்பிடமாட்டம். எப்பவும் முன்னுக்கு விக்கெட் விழாமல் ஒவ்வொரு 'ரன்'னாக எடுப்பம். பிறகு கடைசி 5 ஓவரிலயும்தான் விளாசுவம். அனேகமா எல்லா மட்ச்சிலயும் இதுதான் எங்கட 'பிளான்'. கடைசியா நடந்த மாகாண மட்ட 'பைனல்ல'கூட நாங்கள் முதல் 5 ஓவரிலயும் 25 'ரன்'தான் எடுத்திருந்தம். ஆனால் கடைசில 83 'ரன்' அடிச்சிட்டம். எப்பவும் எங்களுக்கு நாணயச் சுழற்சியில வெண்டு, 'பட்டிங்' செய்யுறது பிடிக்கும்.

நல்ல காலத்துக்கு இதுவரைக்கும் நாங்கள் நாணயச் சுழற்சியில தோற்கேல்ல. இப்ப அதில தோத்து முதல் 'பீல்டிங்' செய்தாலும் மன உறுதியோட விளையாடுற பக்குவத்தை அடைஞ்சிட்டம். போன ரெண்டு வருசமும் 'நஷனல்' மட்டப்போட்டியில ஒரு 'ரன்'னால தோத்து வெளியில வந்திட்டம். இந்த முறை கட்டாயம் 'நஷனல்ல' நாங்கள்தான் சம்பியன். கிரிக்கெட் ஆண்களுக்கு மட்டுமல்ல எங்களுக்கும் சொந்தம்தான் எண்டதை தேசிய ரீதியில நாங்கள் நிரூபிப்பம்.''

வெல்ல வேண்டும் என்ற ஓர்மம் அவர்களின் ஒவ்வொரு சொற்களிலும் ஓங்கி ஒலித்துக்கொண்டே இருக்கிறது. அவர்களின் கனவுகள் மெய்ப்படட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சானியா இணை வெளியே

லண்டன் ஒலிம்பிக் பெண்கள் இரட்டையர் பிரிவு முதல் சுற்றிலேயே இந்தியாவின் சானியா மிர்சா-ருஷ்மி சக்ரவர்த்தி இணை தோல்வி அடைந்து வெளியேறியது.

லண்டன் ஒலிம்பிக் ரென்னிஸ் பெண்களுக்கான இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் இந்தியாவின் சானியா மிர்சா-ருஷ்மி சக்ரவர்த்தி இணை, சீன -தைபேயின் ஹெய்ஸ்-சுவாங் இணையை எதிர்கொண்டது.

முதல் செற்றை சீன -தைபே இணை 6:1 என்ற ரீதியில் கைப்பற்றியது. பின் எழுச்சி கண்ட இந்திய இணை இரண்டாவது செற்றை 6:3 என தம்வசப்படுத்தி பதிலடி கொடுத்தது. வெற்றியாளரை நிர்ணயிக்கும் மூன்றாவது செற்றில் மீண்டும் ஏமாற்றி இந்திய இணை கோட்டைவிட்டது. இறுதியில் சானியா-ருஷ்மி ஜோடி 1-6, 3-6, 1-6 என்ற செற் கணக்கில் தோல்வி அடைந்தது.

பெண்கள் இரட்டையர் பிரிவில் ஏமாற்றிய சானியா, கலப்பு இரட்டையர் பிரிவில் லியாண்டர் பயசுடன் இணைந்து விளையாட உள்ளார். (ங)

## ஒலிம்பிக் பதக்கப் பட்டியல்

29.07.2012

LONDON 2012

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| இத்தாலி | 4 | 2 | 1 | 7 |
| சீனா | 3 | 0 | 1 | 4 |
| அமெரிக்கா | 1 | 3 | 1 | 5 |
| தென்கொரியா | 1 | | 3 | 5 |
| பிரேசில | 1 | 1 | 1 | 3 |
| கஜகஸ்தான் | 1 | 0 | 0 | 1 |
| ரஷ்யா | 1 | 0 | 0 | 1 |
| ஜப்பான் | 0 | 2 | 1 | 3 |
| பொலண்ட் | 0 | 1 | 0 | 1 |
| ருமேனியா | 0 | 1 | 0 | 1 |





# கர்ப்பிணிக்கும் தோல்வி

லண்டன் ஒலிம்பிக்கின் துப்பாக்கி சுடுதல் போட்டியில் மலேசியாவின் நூர் சுர்யானி மொஹமது தாயிப என்ற வீராங்கனை கருவுற்ற நிலையில் கலந்து கொண்டார்.

இவர் கடந்த 2010 ஆம் ஆண்டில் நடந்த கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் தங்கப்பதக்கம் வென்றார். இதனையடுத்து மலேசியா சார்பாக 10 மீற்றர் ஏர் ரைபல் பிரிவில் ஒலிம்பிக் போட்டிக்கு தெரிவானார்.

இவர் கருவுற்றிருப்பது கடந்த ஜனவரியில் தெரியவந்தது. இருப்பினும் அவர் ஒலிம்பிக்கில் கலந்து கொள்வதில் உறுதியாக இருந்தார். இந்த நிலையில், லண்டன் ஒலிம்பிக் போட்டியில் ஆரம்ப சுற்றுகளில் சிறப்பாக செயல்பட்ட போதும் இறுதிப் போட்டிக்கு செல்லும் வாய்ப்பை இழந்தார்.

இதனையடுத்து 56 போட்டியாளர்களில் இவர் 34 ஆவது இடத்தைப் பெற்றார். 33 வார கர்ப்பிணியான இவர் செப்ரெம்பர் 13 அன்று குழந்தை பெறுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தன் குழந்தையின் அசைவுகளைத் தான் உணர்வதாகவும் அதனால் மகிழ்வதாகவும் குறிப்பட்ட அவரிடம் உங்கள் மகளிடம் என்ன பேசுவீர்கள் என்று கேட்டதற்கு, அவளுக்கு டயானா வித்யான் என்று பெயர் சூட்டுவேன் என்றார்.

குழந்தை பிறந்த பின்பு மீண்டும் தனது துப்பாக்கிப் பயிற்சியைத் தொடருவேன் என்றும் தன் மகளும் தன்னைப் போல விளையாட்டு வீரராக வரலாம் எனவும் அவர் கூறியுள்ளார். (5)

# தங்கப்பதக்க கனவு தகர்ந்தது

லண்டன் ஒலிம்பிக் நீச்சல் போட்டியில் அமெரிக்க வீரர் மைக்கேல் பெல்ப்ஸ் 4ஆவது இடம் பிடித்து பதக்கம் வெல்லும் வாய்ப்பை இழந்தார்.


லண்டன் ஒலிம்பிக் நீச்சல் போட்டியில் ஆண்களுக்கான 400 மீ., தனிநபர் "மெட்லே" பிரிவில், பீஜிங் ஒலிம்பிக்கில் 8 தங்கம் வென்ற அமெரிக்காவின் மைக்கேல் பெல்ப்ஸ் பங்கேற்றார். தகுதிச் சுற்றில் தடுமாறிய இவர், இறுதிச் சுற்றில் 4ஆவது இடம் பிடித்து பதக்கம் வெல்லும் வாய்ப்பைப் கோட்டைவிட்டார். இவர் குறித்த தூரத்தை 4 நிமிடம் 09.28 செக்கனில் கடந்தார். மற்றொரு அமெரிக்க வீரர் ரியான் லோசெட் (4:05.18) முதலிடம் பிடித்து தங்கம் வென்றார். வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கத்தை முறையே பிரேசிலின் தியாகோ பெரைரா, ஜப்பானின் கோசுகி ஹாகினோ வென்றனர்.



# ஒலிம்பிக் பதிவுகள் சில...


போலந்தின் நடாலிய பார்டிகா


ஆண்கள் இரட்டையர் படகோட்டப் போட்டி


ஆஸ்திரேலியாவின் சுசேலித் பெண்கள் ஜிம்னாஸ்டிக் போட்டியில்


பிரிட்டனின் ஹன்னா வீலன்


பதக்கம் வென்ற மகிழ்ச்சியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்காவுக்கு காயம் ஒன்றரை மாதம் ஓய்வு



வலது கைவிரலில் ஏற்பட்ட காயத்தினால் அடுத்து வரும் போட்டியில் விளையாட முடியாமல் போனதுடன் மேலும் 6 வாரங்களுக்கு ஓய்விலிருக்கும்படியும் சங்ககார பணிக் கப்பட்டிருக்கிறார்.

இலங்கை - இந்திய அணிகளுக் கிடையில் கொழும்பு ஆர்.பிரேமதாச விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற 3 ஆவது ஒரு நாள் சர்வதேச ஆட்டத்தின் போது குமார் சங்ககாரவின் வலதுகை விரலில் முறிவு ஏற்பட்டுள்ளது. விரலில் ஏற் பட்ட முறிவின் காரணமாக சங்ககார வினால் இந்தத் தொடரின் அடுத்த போட்டியில் பங்குபற்ற முடியாததுடன் மேலும் 6 வாரங்களுக்கு ஓய்விலிருக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடி வந்த இலங்கை அணி சார்பாக சங்ககார 23 ஓட்டங்களைப் பெற்ற வேளையில் 15 ஆவது பந்துப் பரிமாற்றத்தின் இறுதிப் பந்தினை அசோக் டின்டா வீசினார். மணித்தியாலத்துக்கு 140 கிலோமீற்றர் என்ற வேகத்தில் வந்த பந்து சங்கக்காரவின் வலதுகை விரலைப் பதம் பார்த்தது.

உடனடியாக மருத்துவரை அழைத்து சிகிச்சை பெற்றுக் கொண்டதன் பின்னர் தனது ஆட் டத்தைத் தொடர்ந்தார் சங்கக்கார. 73 ஓட்டங்களை பெற்று ஆட்டமிழந்து பவிலியன் திரும்பிய சங்ககார கைவிரல் வலி தாங்கமுடியாமல் துடித்தபோது, அவரைப் பரிசோ தித்த மருத்துவர் கைவிரலில் முறிவு ஏற்பட்டிருப்பதாகத் தெரிவித்தார். இலங்கை அணி களத்தடுப்பில் ஈடுபட்டபோது சங்கா களமிறங்க வில்லை.

இந்த நிலையில் காயத்தினால் எதிர்வரும் போட்டியில் விளையாட முடியாமல் போனதுடன் மேலும் 6 வாரங்களுக்கு ஓய்விலிருக்கும் படியும் சங்ககார பணிக்கப்பட்டி ருக்கிறார்.

கைவிரலில் ஏற்பட்ட காயம் குணமடைந்து இலங்கையில் நடை பெறவுள்ள 'ரி-20' உலகக் கிண்ணப் போட்டியில் பங்குபற்றும் தகுதி சங்கக்காரவுக்குக் கிடைக்குமா என்ற கேள்வி நிலவுகிறது. (ந-5)

# கம்ரான் அக்மலுக்கு தடையில்லை



பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் இலக்குக் காப்பாளர் கம்ரான் அக்மல் பாகிஸ்தான் கிரிக்கெட் அணிக்கான தெரிவுக்கு எப்போதும் தகுதியானவர் எனவும், அவரைத் தெரிவுசெய்வ தற்கு சர்வதேசக் கிரிக்கெட் சபையின் அனுமதி எதுவும் தேவைப்பட்டிருக்க வில்லை என்று சர்வதேசக் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

அண்மைக்காலமாக பாகிஸ்தான் கிரிக்கெட் அணியில் தெரிவுசெய்யப் பட்டிருக்காத பாகிஸ்தான் அணியின் இலக்குக் காப்பாளர் கம்ரான் அக்மல், சர்வதேசக் கிரிக்கெட் சபையின் உலக 'ரி-20' தொடருக்கான அணியில் இணைக்கப்பட்டுள்ளார்.

அடிக்கடி மோசமான இலக்குக் காப்புக் காரணமாக விமர்சனத்துக் குள்ளாகும் கம்ரன் அக்மல் மீது சூதாட்டத்தில் ஈடுபட்டிருக்கலாம் என்ற சந்தேகம் நிலவி வந்தது. எனினும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் ஒழுக்கவியல் சபையின் விசாரணை களின் பின்னர் போட்டியில் பங்கு பற்ற அவர் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் அண்மையில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் ஷாகா அஷ்ரப், கம்ரான் அக்மலை அணியில் சேர்ப்பதற்கு அனுமதி பெறப்பட்டதாகத் தெரிவித் திருந்தார். சர்வதேசக் கிரிக்கெட் சபையின் அனுமதியின் பின்னரே கம்ரான் அக்மலைத் தெரிவுசெய்வ தற்கான அனுமதி தேர்வாளர்களுக்கு வழங்கப்பட்டதாக அவர் தெரிவித் திருந்தார்.

எனினும் கம்ரன் அக்மலைத் தெரிவு செய்வதில் சர்வதேசக் கிரிக் கெட் சபையின் அனுமதி தேவைப் பட்டிருக்கவில்லை எனத் தெரிவித் துள்ள சர்வதேசக் கிரிக்கெட் சபை, அது பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் பொறுப்பு எனத் தெரிவித்துள்ளது. (ந-5)

9 Diploma Course fee Free
(எதாவது ஒரு கற்கைநெறியை கற்பவர்களுக்கு)
Multimedia, Hardware, Networking
Ms office, Web Design, DTP
English, Singalam, Accounting
Admission Open for Next Intake
மேலதிக விபரங்களுக்கு நேரில்,
Duration 2 Month only
பூரண அறிவிற்கான உத்தரவாதம்.
243, Adiyapatham Road, Kalviyankadu

German Language
ஜேர்மன், சுவிஸ் நாடுகளிற்கு செல்வதற்கு தூதுவராலயத்தில் நடத்தப்படுகின்ற பரீட்சையில் சித்தியடையக் கூடியவாறு ஜேர்ம னியில் 15 வருடத்திற்கு மேல் வசித்தவரினால் கற்பிக்கப்படுகின்றது. ஏற்கனவே பல மாணவர்கள் சித்தியடைந்து ஜேர்மன், சுவிஸ் சென்றுள் ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.
வகுப்பு ஆரம்பம் விவரத்திற்கு- 03.08.2012 காலை 9.00மணி
JAFFNA TECHNICAL INSTITUTE
(German Language Academy)
No.7, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
T.P- 0779707322, 0778249949
(சி/1722) (3.6)

மாபெரும் கருத்தரங்கு
A/L தமிழ் A/L
A.K. கீர்த்திராஜன்
இடம்- NEC (ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்)
காலம்- 01.08.2012 புதன்கிழமை
தமிழ்-II -(9.00 தொட 12.00 வரை)
தமிழ்-I-(1.00தொட 4.00 வரை)
* பரீட்சைக்கு எதிர்பார்க்கப்படும் வினாக்கள்
* வெளிமாணவர்களும் பங்கு பற்றலாம்
* கையேடுகள் வழங்கப்படும்
(21140) (3.6)
கட்டணம்-250/=

Lap Tops For Sale



HP PRO BOOK (fingerprint,separate vga)
HP G6
HP 630
CQ43
DELL 5110
TP: 0212221121
Nalin information Technologies
(சி/1799)

மணல் விற்பனைக்குண்டு
கட்டட வேலைக்கும், பூச்சுவேலைக்கும் சிறந்த மணல் மண் இப்போது உங்கள் இடத்திற்கே கொண்டு வந்து தரப்படும்.
4 டிரக்டர் - 19500/=
தொடர்புகளுக்கு: ரமேஸ்
072 2694462
(21140) (6-7-8)



நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு விசேட விலைக்கழிவுடன்
சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களிலும் எமது சேவையினைப் பெற்றுக்கொள்ளலாம்.
(சி/1746)
உள்நாடு வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை
11 kg க்கு மேற்பட்ட 1 kg பொதிகளுக்கும் குறைந்த கட்டணம் அறவிடப்படும்.

| | | | |
|---|---|---|---|
| UK | 1 kg - 625/= | Germany | 1 kg - 725/= |
| France | 1 kg - 750/= | Netherland | 1 kg - 775/= |

மேலும் மிகக் குறைந்த கட்டணத்தில் உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள் அன்பளிப்பு பொருட்கள் புடவைகள் CD, VCD கள் என்பன மிக விரைவாக அனுப்பிவைக்கப்படும்.
உங்கள் இல்லங்களில் இருந்த வண்ணம் பொதிகளை அனுப்பிட முடியும். இவ் வசதிகளை கிளிநொச்சி, வவுனியா, கொழும்பு ஆகிய எமது கிளைகளில் பெற்றுக் கொள்ளலாம்.
மிக விரைவாக உங்கள் உறவுகளின் இடங்களில் ஒப்படைக்கப்படும். கடல் உணவு, மருந்துப்பொருட்கள் என்பன அனுப்பப்படும் வெளிநாடுகளில் மேலதிக கட்டணம் அறவிடப்படமாட்டாது.
குறிப்பு: எமது நிலையம் தொடர்ந்தும் 259 கே.கே. எஸ் வீதியில் இயங்கிக்கொண்டிருக்கிறது.
DHL
TCN Express
திருமுருகன் கொம் நெற்
இல. 210, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். - 021 222 7835
இல. 2 B, ஜெம்பட்டா வீதி, கொழும்பு- 2
இல. 05, திருநகர் பிரதான வீதி, கிளிநொச்சி.
இல. 18, பிரதான வீதி, நெல்லியடி.
இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.07.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.